
# நாமதேவர்

மாதவ கோபால தேஷ்முக்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# நாமதேவர்

*மராத்தி மூலம்:*

**மாதவ கோபால தேஷ்முக்**

*இந்தியில்:*

**பிரபாகர் மாச்வே**

*தமிழாக்கம்:*

**சரஸ்வதி ராம்னாத்**

சாகித்திய அக்காதெமி

*Namadevar*—Tamil translation by Saraswathi Ramnath from Prabhakar Machwe's Hindi translation of M. G. Deshmukh's Marathi monograph. Sahitya Akademi, New Delhi (1985) **Rs. 4.**

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு: 1985

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:
ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:
29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018
பிளாக் V—B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014

ரூ. 4.

அச்சிட்டோர்: டயோசிசன் அச்சகம், சென்னை 600 007

# உள்ளுறை


பக்கம்

முன்னுரை .. 5
(மகாராஷ்டிர பக்தர்களும் குரு நாமதேவரும்)

வாழ்க்கை வரலாறும் அற்புதங்களும் .. 13

படைப்பாற்றலும் மெய்ஞ்ஞானமும் .. 43

கவித்திறனும் ஆளுமையும் .. 59

நாமதேவர் இயற்றிய நூல் விவரம் .. 80

நாமதேவர் பற்றிய நூல் விவரம் .. 81

முன்னுரை

# மகாராஷ்டிர பக்தர்களும் குரு நாமதேவரும்

## *(கி.பி. 1300)*

### பாரத ஆன்மீக வாழ்விற்கு ஒரு போதகர்

**பா**ரத நாட்டு மக்கள் பல்வேறு இனத்தவராக, பல்வேறு மொழியினராக இருப்பினும்கூட ஒரே நாட்டில் ஒருமைப்பாட்டுடன் இந்துராஷ்டிரம் என்ற உருவில் ஒருமனப்பட்டு வாழ்ந்தனர் (இந்து என்ற சொல் இங்கு விரிவான, விசாலமான பொருளில் ஆளப்பட்டுள்ளது). புராதன பாரதத்தில் மலர்ந்திருந்த இக் கருத்தோட்டம், வாழ்க்கை முறை காரணமாக கிருஸ்துவிற்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டின் நடுவில், ஒரு சில மாற்றங்கள் வேற்றுமைகளிருந்தும் கூட நிலையானதொரு வடிவத்தைப் பெற முடிந்தது.

இந்த ஒருமை உணர்வு குறிப்பாக, புராதன பாரத இலக்கியங்களான, பிராம்மண, பௌத்த, சமண நூல்களில் காணக் கிடைக்கிறது. சம்ஸ்கிருதம், மற்றும் பல்வேறு பிராகிருத மொழிகளிலும் உள்ள, இந்த இலக்கியத்தில் வேதங்கள், உபநிடதங்கள், பிராம்மண நூல்கள், ராமாயணம், மகாபாரதம், புராணங்கள், காளிதாசனின் நூல்கள், மற்றும் பல சாத்திரங்களும் உள்ளன. ஆனால் பாலியிலும், பௌத்த சம்ஸ்கிருதத்திலும், ஹீனயான, மகாயான பௌத்த இலக்கியங்கள் உள்ளன. சமண சம்ஸ்கிருத, பிராகிருத இலக்கியமும் உள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்து நம்மிடையே வேர் ஊன்றிவிட்ட மதங்கள், கலாசாரங்களில் கூட இந்த ஒருமைப்பாட்டு உணர்வு மிகுந்த இந்திய கலாசாரம், வாழ்க்கை முறை, சிந்தனையின் பாதிப்பிற்குட்பட்டன. இஸ்லாம், கிருஸ்துவ தர்மம், யூத மதம் (பார்ஸி), ஜரதுஸ்த்ர மதம் கூட இந்தியாவில் இடம் பெற்றபின், இந்திய மனோபாவத்திலிருந்து முற்றும் வேறுபட்டோ, தனித்தோ இயங்க இயலவில்லை. சிற்சில சமயம் இந்திய மண்ணிற்கு அன்னியமான சிந்தனைகள், கருத்தோட்டங்களின் பால் சந்தர்ப்பவசமாக கவரப்பட்டிருக்கலாம். ஏனெனில் முதற்பார்வையில் இந்தியாவின்

உள்ளத்து உணர்வுகள், இயல்புகளுடன் பூரணமாக ஒத்துப்போக இயலவில்லை.

கடந்த ஆயிரமாண்டுகளில் இஸ்லாமிய தருமத்தின் வருகைக்குப் பின்னர் சூழ்நிலைகள் மாறின என்றாலும்கூட சுயமான ஒருமைப்பாட்டு மனோபாவத்திற்குக் குறைவேதும் ஏற்படவில்லை. இஸ்லாமும், கிருஸ்துவமும் இந்தியத் தன்மை என்னும் மண்டபத்தில் தங்களுக்கென்று தனியாக ஒரு மாடப்பிறையை ஏற்படுத்திக் கொண்டபோதும் இந்நிலை மாறவில்லை. நாடோடிகளாக, ஊர் ஊராகத் திரிந்த பண்டிதர்கள், வேதாந்திகள், சாதுக்கள், துறவிகள், பக்தர்களுக்கு நாம் நன்றி கூறவேண்டும். நாடெங்கும் தலயாத்திரை புரிந்ததால் இந்த ஒருமைப்பாட்டு உணர்வுக்கு புதிய வடிவமும், புதிய அர்த்தங்களும் அவ்வப்போது கிடைத்து வந்துள்ளன. அவர்களது அருளினால் இந்திய மனோபாவம், உள்மன இயல்புகளின் மீது விதேசிய பாதிப்புகள் முற்றும் படிந்துவிட இயலவில்லை.

சம்ஸ்கிருத, காவிய, புராணங்களுக்குப் பிற்பட்ட காலத்தில், சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியவர் மகான் சங்கராச்சாரியார். இவரே ஒருமைப்பாட்டு உணர்வைத் தோற்றுவித்த புதிய குழுவினரில் முதன்மையானவர். இவர் 32 வயதே வாழ்ந்தார் எனினும் தமது வேதாந்த நூல்கள் மூலம் ஒருபுறம் நிர்க்குண பிரம்மத்தையும், மறுபுறம் பரப்பிரம்மத்தின் சகுண ரூபத்தையும் ஒன்றாகவே போற்றி வளர்த்து, இப்பரந்த பாரத நாட்டைத் தமது தத்துவங்களின் மூலம் ஒருங்கிணைத்து ஒன்றாகப் பிணைக்கும் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார். இதன் பிறகு குருமார்கள், பக்த சாதுக்கள், துறவிகளின் நீண்டதொரு பட்டியல் உள்ளது. இவர்களில் பெரும்பாலோர் ஓரிடத்தில் தங்காது சுற்றிக்கொண்டிருந்த சாது, சன்யாசிகளாவர். இவர்கள் கற்றறிந்த பண்டிதர்களாக, தார்மிக நோக்குடையவர்களாக இருந்தனர். இவர்கள் மத்திய யுகத்திலும், நவீன பாரதத்திலும், முசல்மான்களின் தாக்குதல்களினாலும், ஆக்கிரமிப்பு, மற்றும் ஆட்சியினாலும் சிதறிவிட்டிருந்த இந்து மதத்தினரின் ஒற்றுமையையும் தொலைதூரப் பிரதேசங்களை முன்னைவிட அதிகம் நெருங்கி வரும்படியாக, ஒருமனப்படும்படியாகவும் செய்தனர். பஞ்சாப்பில் நானக், அசாமில் சங்கர தேவ், வங்கத்தில் சைதன்யர், கர்நாடகத்தில் புரந்தரதாசர், மகாராஷ்டிரத்தில் நாமதேவர் என தலைசிறந்தவர்கள் சிலரைக் குறிப்பிடமுடியும்.

பலர் அதிகப் புகழ் அடையாதவர்களாகவும், தங்களது செல்வாக்கை அதிகம் பரப்ப இயலாதவர்களுமிருந்தனர். இவர்களால் பரவலான பாதிப்பு ஏற்படவில்லை எனினும், இந்திய வேதாந்தங்

களின் அடிப்படைக் கருத்துக்களையும், தார்மிக நெறிகளையும் இவர்கள் பரப்பினர். அத் தருமத்தின் மூலமான அடிப்படைக் கருத்துக்களை, சிந்தனை, சித்தாந்தங்களை காலத்தின் நடைமுறைக்கேற்ப மாற்றினர். வழக்கத்திலிருந்த பண்டைய கொள்கைகளையும் அகற்றினர். கர்மகாண்டத்தின் சீர்கேடுகளை, காலத்திற்கொவ்வாத சமுதாயக் கருத்துக்கள், ஆசார அனுஷ்டானங்கள், சடங்குகளைக் கண்டித்தனர். மகான்களான இக்குருமார்கள் யாவரும் ஆஸ்திகர்கள்; இறைவன்பால் மட்டற்ற நம்பிக்கை கொண்டவர்கள். இறைவன்பால் ஒருமுகப்பட்ட பக்தியைப் பரப்பினர். ஏழை, எளியோர், துன்புற்றவர்களுக்குத் தன்னலமற்ற தொண்டுபுரியும்படி உபதேசித்தனர். மனிதர் யாவரும் சமமே என்ற, சமத்துவ பாவத்தை ஏற்படுத்த முழு முயற்சியுடன் ஈடுபட்டனர். அக்காலத்தில் இந்துக்களிடையே ஜாதி மத பேதங்கள் மிகவும் வலுப்பெற்றிருந்தன. இத்தகைய சமத்துவ, சமதர்ம பாவத்தை அவை எதிர்த்தன. இம்மகான்களில் பலர் வெளியேயிருந்து வந்த அன்னிய மதங்களின் சிறந்த, உன்னதமான கருத்துக்களை திறந்த மனத்துடன் வரவேற்றனர். எல்லாவற்றிக்கும் மேலாக இவர்கள் சாதாரண மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர்களாக, அவர்களது தனிப்பட்ட, மற்றும் சமுதாயத் தேவைகள், ஆன்மீகப் பசி முதலியவற்றைத் தணிப்பவர்களாக, உதவுபவர்களாகவுமிருந்தனர்.

பாரத நாட்டின் ஏனைய மொழிப் பிரதேசங்களைப் போன்றே மகாராஷ்டிரத்திலும் கடந்த ஓராயிரம் ஆண்டுகளாக, தார்மிக நெறி பரப்பிய குருமார்களின் உன்னதமான, ஒளிமிகுந்த பரம்பரை தொடர்ந்து வந்துள்ளது. ஏனைய பகுதிகளில் உள்ளது போன்றே, மகாராஷ்டிரத்திலும் சனாதன பிராமணீயம், வேதாந்த விசாரங்கள், மற்றும் தத்துவ தரிசனங்கள், ஆன்மீக நூல்கள் மிகவும் பிரபல்யமடைந்துள்ளன. எனினும் வேறு சில கருத்துகள், கொள்கைகளும் கூட மக்களின் பெரும் பகுதியினரிடையே செல்வாக்கு பெற்றிருந்தது. கர்நாடகத்தின் லிங்காயத் வீரசைவமும், வங்கத்தில் சகஜியா சம்பிரதாயமும் மத்ய யுகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவை பின்னர் வைஷ்ணவ, கர்தாபஜ தர்மத்திற்குள் அடங்கிவிட்டன. மகாராஷ்டிரத்தில் 13-வது நூற்றாண்டைச் சேர்ந்த முகுந்தராய் எனும்வேதாந்தியின் மூலம் பிராம்மண தர்மத்திற்குப் பேராதரவு கிட்டியது. பின்னர் 12-வது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஞானேஸ்வரர் தோன்றினார். முகுந்தராயின் சம காலத்தவரான வயோதிகர் சக்ரதர். இவர் கிருஷ்ண பக்தி, மற்றும் பௌராணிகத் துறவியும் குருவுமான தத்தாத்திரேயரின் பக்தியில் ஈடுபட்ட மத்ய யுகத்தின் சம்பிரதாயத்தை நிறுவியவர். இச்சம்பிரதாயத்தின் ஒரு சிறப்பு

என்னவென்றல் இவர்கள் உருவ வழிபாட்டை ஏற்க மறுத்தனர், எக்காரணத்திலுலோ இம் மகானுபாவ சம்பிரதாயம் மக்களின் பரவலான ஆதரவைப் பெறவில்லை. தவிரவும் இச்சம்பிரதாயத்தின் உபதேசங்கள் சங்கேத லிபியிலும், பூடகமான மொழியிலும் இருந்ததால் மக்களுக்குப் பழக்கப்படாமல் போயிற்று.

மகாராஷ்டிரத்தில் ஞானேஸ்வரருக்குப்பின் பரம்பரை பிராம்மணீய இந்து மதத்தின் வெளிப்பாடு மாபெரும் தார்மீக குரு பரம்பரை ரூபத்தில் தோன்றியது. நாமதேவர் (14-வது நூற்றுண்டு?), ஏகநாதஸ்வாமி (1448–1599), துகாராம் (1588–1649), சமர்த்த ராமதாசர் (1608–1682). இந்த குருமார்களின் சிறப்பு யாதெனில் இவர்களுக்கு இந்து தர்மத்தின், அற நூல்களில் ஆழ்ந்த அறிவும், புலமையுமிருந்தது. மேலும் தங்களது உபதேசங்கள், கருத்துக்கள், சாதாரண, பொதுஜன மக்களைச் சென்றடையும்படியான மொழிநடையை இவர்கள் கையாண்டனர். பகவத் கீதைக்கு மராத்தியில் 'ஞானேஸ்வரி' எனும் மகத்தான உரை நூலை ஞானதேவர் எழுதினர். ஆனுல் இந்த நூல் சம்ஸ்கிருதச் சொற்கள் தாராளமாய்க் கலந்திருந்த உயர்நடையில் எழுதப்பட்டிருந்ததால் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. இதனுல் இது பெரும்பாலும் பண்டிதர்களின் நூலாகவே அமைந்துவிட்டது.

இதன் பிறகு இவ்வரிசையில் தோன்றிய குருமார்களில் அதாவது நாமதேவர், ஏகநாதர், துகாராம், ராமதாஸ் போன்றவர்கள் சாதாரண மக்கள் வரை இறங்கி வந்ததுதான் இவர்களது முக்கியமான சிறப்பாகும். இவர்கள் தங்களது எளிய பாடல்கள், பதங்கள் மூலம் தாங்கள் உணர்ந்து அனுபவித்த மெய்ஞ்ஞான போதத்தை, தெய்வீக அனுபூதியின் மகத்தான உண்மைகளை எளிய பாமர மக்களுக்கும் புரியும்படியாகச் செய்தனர். இதன் மூலம், இவர்கள் இப்பரந்த பாரத நாட்டில் தங்களது பாடல்கள், கவிதைகள் மூலம் தங்களது வழிபாட்டின் நெறிமுறைகளை, கருத்துக்களை, கொள்கைகளை மக்களிடையே பரப்பிய, வங்கத்தின் வைணவ பக்தர்கள், அசாமின் ஏக சரண்யா குருமார்கள், கவிஞர்கள், வடநாட்டிலிருந்த கபீர், கபீர் சம்பிரதாயத்தினர், துளசிதாசர், அவரது வழியைப் பின்பற்றியவர்கள், ராஜஸ்தானத்து நரசிமேஹ்தா, தாது, சீக்கிய குருமார்கள், அவர்களது பஞ்சாபிய சீடர்கள் எனும் ஒரு மாபெரும் சங்கமத்தின் ஒரு அங்கமாகிவிட்டனர். இதைத் தவிர தென்னிந்தியாவில், தமிழில் சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், இதன் பின்னர் அருணகிரிநாதர், தாயுமானவர், ஏனைய பக்த கவிஞர்களும், வீர சைவத்தை உபதேசித்த கவிஞர்களும், பாடலாசிரியர்களும், குறிப்பாக தமது

வசனங்களின் மூலம் பெரும் புகழ்பெற்ற பசவேசுவரரும், கன்னடம், தெலுங்கு மொழிகளில் பக்திப் பாடல்கள் கீர்த்தனை களை இயற்றிய புரந்தர தாசர், தியாகராஜ ஸ்வாமிகள் போன்றவர் களும் ஆழ்ந்த பக்திப் பாடல்களின் மூலம் மக்களின் மனத்தை ஈர்த்துவிட்டிருந்தனர்.

மகாராஷ்டிரத்தின் பக்தசாதுக்களில் நாமதேவருக்குச் சிறப்பான இடமுண்டு. ஏனெனில் அவரது தொண்டும், உபதேசங் களும் மகாராஷ்டிரத்தின் எல்லைக்குள் மட்டும் முடங்கிவிடவில்லை. குருநானக், சைதன்யர், சங்கரதேவ் போன்று அவர் பாரதநாடு முழுமைக்கும் உரியவராகிவிட்டிருந்தார். மகாராஷ்டிரத்தில் பிறந்த நாமதேவரின் வாழ்க்கையின் பெரும்பகுதி வடநாட்டில், குறிப்பாக, பஞ்சாப்பில் கழிந்தது. அம்மக்கள் அவரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டனர். கடவுளின் அருள்பெற்ற அவர் வடநாட்டிலும் பஞ்சாப்பிலும் அவர்களின் பரம்பரை வாழ்வின் ஒரு அம்சமாகி விட்டார். இதில் வியப்பான அம்சம் என்ன வென்றால், இப்பிரதேசங்களில் அவர் வாழ்ந்த நாட்கள் பற்றி ஆதாரபூர்வமான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்பதுதான். அவர் எப்பொழுது தோன்றினார் என்பதும் விவாதத்திற்குரியதாக உள்ளது. வழிவழியாக வந்துள்ள நம்பிக்கைகளின்படி, நாம தேவர், ஞானதேவரின் சமகாலத்தவர், ஏறக்குறைய அக்கால கட்டத்தில் பிறந்தவர் என்று கூறப்படுவதையும் ஒரேயடியாகப் புறக்கணிப்பதற்கில்லை. ஆனால், ஞானதேவர், நாமதேவர் இவ் விருவரின் மொழி, நடை இரண்டிலும் அகாதமான வேறுபாடு உள்ளது. இதனால் ராமகிருஷ்ண கோபால பாண்டார்கர் போன்ற அறிஞர்கள் நாமதேவரின் காலம், ஞானதேவருக்கு நூறு வருடம் பிற்பட்டதாகும் எனக் கருதுகின்றனர். நாமதேவரின் வாழ்க்கை வரலாறுகளிலிருந்து நமக்கு அதிகமான விவரங்கள் கிடைக்க வில்லை. இவ்வாழ்க்கைச் சரித்திரங்கள் ஒரு மகாபுருஷனின், வாழ்க்கையின் பொன்னான சொல்லோவியங்களாக உள்ளனவே தவிர ஒரு கவிஞன், உயர்நிலையில் நின்று உபதேசிப்பவன் என்ற முறையில் கம்பீரத்துடன் சித்தரிக்கப்பட்டவையாக இல்லை. பொது வாக, நாமதேவரின் பிறப்பு, இறப்புபற்றி கல்விமான்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டுகள் கி.பி. 1280—1350 ஆகும். இதுவே பரம்பரையாகக் கூறப்படும் ஆண்டுகளாகும். நாமதேவரின் படைப்புகளின் காலம் பதினைந்தாவது நூற்றாண்டின் முற்பகுதி யாக இருக்கக்கூடும். நாமதேவரின் பெயரிலுள்ள பாடல்கள், கவிதைகள், பழைய இந்திமொழி, குருகிரந்தசாகப்பின் பஞ்சாபிய மொழி, இவ்விரண்டும் கலந்ததொரு மொழியில் உள்ளன. சில பாடல்கள் தூய இந்தியிலும், சில மராத்தியிலும் இருக்கின்றன. இந்தி, பஞ்சாபி, மராத்தி இம் மூன்றிலும் நாம

தேவரின் வாழ்க்கை, படைப்புகள் பற்றிய கருத்துக்களில் முரண் பாடுகள் உள்ளன. சிலர் அவரைக் குருநானக்கின் சமகாலத்தவர் எனக் கருதுகின்றனர். அதாவது கிட்டத்தட்ட பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியான காலகட்டம். மராத்தியில் நாம தேவரது பதங்கள், அதாவது கவிதைகள், சுமார் 2500 இருப்ப தாகக் கருதப்படுகிறது. இந்தியில் கிட்டத்தட்ட 214 கவிதைகள் அச்சு வடிவம் பெற்றுள்ளன. சீக்கிய குருகிரந்தசாகப்பில் 61 பதங் கள் உள்ளன. நாமதேவரின் மராத்தி இந்தி, பஞ்சாபி இந்தி இவற்றின் கலப்புமொழி ஆகியவற்றில் உள்ள படைப்புகளின் சுத்தமான, திருத்தமான பதிப்புகள் இன்னமும் வெளிவரவில்லை. இது எத்தனை விரைவில் தயாராகின்றதோ அவ்வளவு நல்லது. இருப்பினும் பல்வேறு அறிஞர்களின் பதிப்புகளிலிருந்து திரட்டித் தொகுக்கப்பட்ட நூல்களுக்காக நாம் அவர்களுக்குக் கடமைப் பட்டுள்ளோம். குறிப்பாக டாக்டர் பிரபாகர் மாச்வேயின் 'நாமதேவ்—வாழ்க்கை மற்றும் கவிதை' என ஆங்கிலத்திலும் பஞ்சாபியிலும் எழுதப்பட்டுள்ள நூலுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். இந்நூலைப் பஞ்சாப் பல்கலைக் கழகம் (பாடியலா) குருநானக்கின் 500வது பிறந்த தினத்தன்று வெளியிட்டுள்ளது. இந்நூலில் நாமதேவரின் வாழ்க்கை, அவரது உபதேசங்களைப் பற்றிய கருத்துக்கள், மற்றும் அநுமானங்கள் பற்றிய விவரங்கள் பயனுள்ள முறையில் தரப்பட்டுள்ளன. மேலும் நாமதேவரின் பக்திப் பாடல்களின் விளக்கம், நூற்பட்டியல், இந்தி, மராத்தி யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் தரப்பட்டுள்ளது. குரு கிரந்தசாகப்பில் நாமதேவரின் பெயரிலுள்ள 61 பாடல்களும் (மெகாலிஃப் மூலமாக மொழி பெயர்க்கப்பட்டவை) டாக்டர் மாச்வேயின் இந்நூலில் உள்ளது.

நாமதேவரைப் பற்றிய முறையான ஆராய்ச்சியும் மதிப்பீடும் இப்பொழுது துவங்கியுள்ளது எனக் கூறலாம். டாக்டர். மாச்வே யின் நூலை முன்னுதாரணமாகக் கொண்டு விவரமான, ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும். முதலில் தற்சமயம் நாம தேவரின் பெயரால் வழங்கப்பட்டு வரும் பாடல்களிலிருந்து சுத்த மான, திருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம்.

அறநெறிகளைப் போதித்த மெய்யடியார்கள், பக்த சாதுக்கள், தங்களது பாடல்கள், கீர்த்தனங்கள் மூலமாகத் தங்கள் உபதேசங் களைப் பரப்பியது போன்றே, நாமதேவரின் விஷயத்திலும் அவரது தார்மீகக் கண்ணோட்டம், தார்மீகக் கருத்துக்கள், நம்பிக்கைகளின் கிரமமான வளர்ச்சி பற்றிய நூலைத் தயாரிக்கும் முயற்சி நடந்து வருகின்றது. அவரது பெயரில் வழங்கிவரும் கவிதைகள்,

அவற்றில் வருணிக்கப்பட்டுள்ள விஷயங்கள், உருவம், உள்ளடக்கம் பற்றிய விவரங்கள் இதில் தரப்படும், நாமதேவர் முதலில் மனிதரூபத்தில் அவதரித்த சகுணரூபியான இறைவனை வழிபட்டார். பிருந்தாவனத்தில் உறையும் கண்ணனை, ஷோலாப்பூர் மாவட்டத்திலுள்ள பிரசித்திபெற்ற தலமான பண்டரிபுரத்தின் ஆலயத்தில் வீற்றுள்ள விட்டலனை அவர் விசேஷமாக ஆராதித்து, பக்தியுடன் வழிபட்டதாக மகாராஷ்டிரத்தில் கருதப்படுகின்றது. எனினும் இது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. பிற்காலத்தில் அவரது தார்மீகக் கண்ணோட்டமும், கருத்துக்களும் பின்னும் விரிவானதாக ஆழமுள்ளதாகின. நடைமுறையிலிருந்த நெறிமுறைகளில், அவர் நிறைவுகாண இயலவில்லை. அன்பிற்கும் அழகிற்கும் உறைவிடமாகத் திகழும் இறைவனை மனித உருவில் ஏற்றி, மானிட இயல்புடன் கூடியவனாகப் போற்றி, வழிபட்டு, பக்தி செய்யும் இந்த முறையில் நிறைவைக்காண இயலாததால் இறைவனின் நிர்க்குண ஸ்வரூபத்தின்பால் கவரப்பட்டார். இதன்பின் இப்பரிபக்குவம் பெற்ற நிலையில் அவர் இயற்றிய பாடல்கள், பதங்களில், இறைவன்பால் கொண்ட பக்தியானது கபீர், ரஜ்ஜப், ஷாது, நானக், மற்றும் ஏனைய சீக்கிய குருமார்கள் போன்று, நிர்க்குண உபாசனையில் நாட்டம் கொண்டது. நிர்க்குணப் பிரம்மத்தை உபாசித்தாலும்கூட அவரது பாடல்களில் காவியநயம், அழகுணர்ச்சி இவ்விரண்டும் குறையாமலிருந்தது குறிப்பிடத்தக்கது. அவரது பிற்காலத்திய பாடல்களில், அவரது இந்த மெய்ஞ்ஞான அனுபவத்தின் விளக்கம், குறிப்பாக வட நாட்டில் அவர் இயற்றிய பாடல்கள், சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்களை மட்டுமல்ல, குரு நானக்கையும் கவரும்படியாக இருந்தன எனக் கருதப்படுகின்றது.

அவரது வாழ்க்கை, மற்றும் அறநெறி உபதேசங்களில் உண்மையான தத்துவங்கள் எதுவாகயிருந்தாலும் மத்திய யுகத்தில் தோன்றிய மகான்களான தார்மீக புருஷர்களில் நாமதேவரும் ஒருவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 15-வது நூற்றுண்டின் இறுதியில் தோன்றிய குருநானக் சாதுபுருஷராகவும், உபதேசகராகவும் அவதரித்து இந்நாட்டின் தார்மீக வாழ்விலே தமது ஆழ்ந்த செல்வாக்கை ஏற்படுத்தியதைப் போன்றே நாமதேவரும் தனது காலத்திலே ஏற்படுத்தினர். மகான்களான பக்த துறவிகள், மகாத்மாக்கள் தங்களது அமரவாக்குகள், பொன்மொழிகள், உபதேசங்கள், தங்களது சீடர்களின் பக்தியின் மூலம் என்றென்றும் வாழ்கின்றனர். இந்தியப் பரம்பரை, பிறப்பு, இறப்பு பற்றிய ஆதாரபூர்வமான தேதிகள், வருடங்கள், மற்றும் சரித்திரபூர்வமான ஆதாரங்கள் பற்றி விசேஷமான ஆர்வமோ அக்கறையோ காட்டுவதில்லை. (ஏன் எனில் சில சமயம் கிருஷ்ணபக்ஷம், சுக்லபக்ஷம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர தேதி, மாதம்,

வருடம் பற்றிய குறிப்புகள் ஏதும் தரப்படுவதில்லை) ஒருக்கால் நீண்டதொரு ஆயுட்காலமும் வாழ்க்கையுமே ஒரு கணத்திற்கு அதிகமான மதிப்பைப் பெறுத நிலையில் லௌகிக வாழ்வின் விவரங்களைக் குறித்து அதிகமான சிரத்தை காட்டாமலிருக்கலாம். நாமதேவரின் விஷயத்திலும் இது உண்மையாகியுள்ளது. ஆனால் அவரது பெயரின் முத்திரையைத் தாங்கியுள்ள பாடல்களின்பால் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம். ஏன் எனில் அப்பாடல்களில் அவரது நாமம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, மராத்திய அபங்கங்கள், குரு கிரந்தசாகப்பிலுள்ள 61 பாடல்களைக் கூறலாம். மராத்திய, இந்திப் பாடல்களின் திருத்திய சுத்தமான பதிப்புகள் கிடைத்தபின் இந்த மகானின் அறிவுரைகள், உபதேசங்களை நம்மால் இன்னும் அதிகமாகப் புரிந்து கொள்ள முடியும்.

இருப்பினும் ஒரு மகத்தான பக்தர், உபதேசங்களை அருளிய மகானுக்கு நமது நினைவாஞ்சலியை அர்ப்பணிக்கின்றோம். நாமதேவர் கவித்துவம் நிறைந்த பாடல்களை இயற்றுவதில் இணையற்றவர். மெய்ஞ்ஞான அருள்நோக்கும், எல்லையற்ற பரம்பொருளின் அருளையும் ஒருங்கே பெற்றவர் என்பதற்கு அவரது அபங்கங்களே சான்றாகும். பாரதநாட்டின் ஒருமைப்பாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட மகாபுருஷர்களில் ஒருவரான பக்த துறவி அவர். பாரத நாட்டின் தார்மீக, கலாச்சார வாழ்க்கை, வெளியேயிருந்து வந்த சிந்தனைகள், கருத்தோட்டங்களின் பாதிப்பினால் பலமாகத் தாக்கப்பட்டிருந்த நெருக்கடியான காலகட்டத்தில், பக்தியுணர்வு வீழ்ச்சியுற்று, ஆன்மீக அறிவு சிதைவுற்றிருந்த நிலையில், அவர் போராட வேண்டியிருந்ததென்னமோ உண்மை.

கல்கத்தா—4 சுநீதிகுமார் சட்டர்ஜி
டிஸம்பர் 1970

# வாழ்க்கை வரலாறும் அற்புதங்களும்

*'ஸ்ரீ நாரத முனி கா ஜோ சுமஹதவிருத வஹீ நாம தேவகா*
*உஸ்னே பிரசித்திகர்தீ: ''விட்டல்'' யஹீ பவ்ய நாம தேவ கா.'*

—மோரோபந்த்

## சிறந்த முதுபெரும் பக்த துறவி

**ப**தின்மூன்றும் நூற்றுண்டில் மகாராஷ்டிரத்தில் பல துறவிகள், பக்திக் கவிஞர்கள் தோன்றினர். காலக்கணக்கின்படி துறவி நாம தேவர் யாவரிலும் மூத்தவர் என்பது மட்டுமல்ல, குணச் சிறப்பியல்புகளின்படியும் இவருக்கே முதன்மையான இடம் தரப்பட வேண்டும். மராத்தி மொழியில் 'அபங்' எனப்படும் யாப்பை, கவிதைத் துறையில் நடைமுறைக்குக் கொணர்ந்தவரும் இவரே தான். மராத்தி மொழியில் மட்டுமின்றி ஏனைய பாரத மொழி களில்கூட 'அபங்' யாப்பை வழக்கில் கையாளும்படி செய்தவரும் நாமதேவரே. சீக்கிய சம்பிரதாயத்தை நிறுவிய குருநானக், இறை வனின் நாம சங்கீர்த்தன மகிமையைப் பற்றிய உள்ளுணர்வை துறவி நாமதேவரிடமிருந்துதான் பெற்முர் எனக் கூறலாம். இது மட்டுமல்ல, சீக்கியர்களின் 'ஆதிகிரந்தத்தில் மராத்தி மொழி யுடன் இணைந்த தொடர்புகொண்டுள்ள 'சாது மொழி'யில் நாம தேவர் இயற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நாமதேவரின் செயற்களம் மகாராஷ்டிரத்தின் எல்லைக்குள் மட்டும் உட் பட்டிருக்கவில்லை. நருமதைக்கு வடக்கேயும் இன்றைய பஞ்சாப் வரை நாமதேவர் பக்தி மார்க்கத்தைப் பிரசாரம் செய்தார். வடநாட்டில் பக்தி மார்க்கத்தைப் பரப்பிய, பிரசாரம் செய்த முதலாவது மகாராஷ்டிர பக்த துறவி நாமதேவரே. மகாராஷ் டிரத்தின் பக்த துறவிகளில் நாமதேவருக்குத்தான் நீண்ட ஆயுள் கிட்டியது. குழந்தைப் பருவத்திலிருந்து வாழ்வின் முடிவுவரை விட்டலனின் நாமத்தை இடைவிடாது பரப்பியவர் அவர். 'நாரத முனிவரைப் போலவே பக்தியெனும் இறையுணர்வைத் தன் ஜீவிதத்தின் விரதமாகக்கொண்டு நாமதேவர் தமது இஷ்ட தெய்வமான விட்டலனின் திருநாமத்தை எங்கும் பரப்பினுர்' என்று புகழ்பெற்ற கவிஞர் மோரோபந்த் கூறியது முற்றிலும் பொருத்தமானது.

## நாமதேவன் என்ற பெயர்ப் பொருத்தம்

நாமதேவன் என்பது ஒரு தொகைநிலைத் தொடராகும். இதன் பொருள் நாமம்தான் தேவன் என்பதாகும். நாமதேவர்

தமது படைப்புகள் யாவற்றிலும் நாமத்தின் மகிமைபற்றி வித விதமாக விவரித்திருப்பதுபோல் வேறெந்த பக்த கவியும் செய்திருக்கிருரா என்பது சந்தேகம்தான்.

நாமத்திலேயே நாராயணன் உள்ளான்
பக்தர் வசப்பட்டவன் அவன்.
பக்தியை நீ வேண்டாதே.
நாமத்திலேயே நால்வகை முக்தியும் உள்ளது.
நாமத்தை மறவாதே! அதுதான் சுவர்க்கத்தின் சின்னம்.
நாமத்தை எவர் சொல்லிக்கொண்டே இருக்கிருர்களோ,
நாராயணனை அடைந்து அவனுகவே ஆகிவிடுவர். (788)

இறைவனின் திருநாமத்தை ஜபிப்பவனை
யமனும் முன் வந்து வணங்குகிருன்.
காலமும், அவன் முன்னே அடிபணிகிறது.
நாமம் தான் மிகச் சிறந்தது, உயர்வானது,
நாம ஸ்மரணை செய்தால் அது
சுவர்க்கத்திலும் எதிரொலிக்கின்றது.
நாமத்தின் மகிமையை எடுத்துரைக்க,
பிரம்மனே முன் வந்தார், எனினும்
ஆதியோ, அந்தமோ, உவமையோ,
தோன்றவில்லை அவருக்கு.
நாமா சொல்லுகிருன், நாமத்தைக் கூறு,
நாம வழியிலே செல்லு.
விட்டல ஹரி தோன்றுவான் உன்முன்னே. (891)

உன் முக்தியும் வேண்டேன், உன் பக்தியும் வேண்டேன்.
எனக்கமைதியை அளிப்பது வேருென்று,
எனக்குப் புரிந்துவிட்டது, நான் புரிந்துகொண்டுவிட்டேன்,
அன்பின் சுகத்தை நான் அறிந்துவிட்டேன்.
உன்னை நான் தியானிப்பதில்லை, பிரம்ம ஞானமும் எனக்கில்லை.
என்னிடமுள்ள பொருள் வேறு.
உன்னை நான் துதிப்பதில்லை, உன் புகழ் பாடுவதில்லை,
நான் கொண்டுள்ளது வேருெரு யுக்தி
காயக்கிலேசம் செய்யவில்லை, நான் புலன்களை அடக்கவுமில்லை.
எனக்குக் கிட்டியுள்ள ஞானம் அதுவேருென்று
நாமா சொல்லுகின்ருன்! நிர்மலமான உள்ளத்துடன்
நான் பாடுகிறேன் உன் திருநாமத்தை, நானே
தேடிக்கொண்டே உன்னை வந்தடைந்து விடுவேன்.
(1222)

பக்தனுக்கும், ஜீவன் முக்தனுக்கும் இறைவனின் திருநாமம் தான் யாவுமாகும். மோட்சத்தை அடையவும், இறைவனை அடையவும் அது ஒன்றே சாதனமாகும் என நாமதேவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நாமத்தின் மகிமையைப் பற்றிய அவரது 'அபங்'கங்களை படிக்கும்போது தனது பெயரின் பொருத்தத்தை உணர்த்துவதற்காகவே 'நாமா சொல்லுகிறான்' என்று இத்தனை விரிவாக நாமத்தின் பெருமையைச் சொல்லு கிறாரோ எனத் தோன்றுகிறது.

### நாமதேவரின் வாழ்க்கை வரலாறு

நாமதேவரின் வாழ்க்கையைப் பற்றி பலவாறு பேசப்படு கிறது. அவர் பிறந்த ஊர் எது? அவர் எப்பொழுது, எங்கே பிறந்தார்? அவரது குடும்பத்தில் யாரார் இருந்தனர்? அவர் முதலில் கொள்ளைக்காரனாக இருந்தாரா இல்லையா? நாமதேவர் என்பவர் ஒருவரா அல்லது அப்படிப் பலர் இருந்தனரா? நாம தேவருக்கும், ஞானதேவருக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது; நாமதேவரின் குரு யார்—இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. நாமதேவரின் வாழ்க்கையைப் பற்றிக் கூறப்படும் முன் பின் முரணான செய்திகளுக்குத் தீர்வு காண்பதெப்படி? நாமதேவரின் பெயரால் அவர் நடத்தியதாகக் கூறப்படும் அற்புதங்கள், மாயா ஜாலங்கள் எவ்வளவு தூரம் நம்பத்தகுந்தவை? 'வாரகரி' சம்பிர தாயத்தை ஏற்படுத்தியவர் அவர்தானா, அல்லது அவரில்லையா? பஞ்சாப் பகுதிக்கு அவர் சென்றது உண்மையா? ஆதி கிரந்தத்தில் அவரது 'உபதேச மொழிகள்' இடம் பெற்றுள்ளனவா? இல்லையா? என்பது போன்ற பல சர்ச்சைக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதிக்கின்ற, ஆராய்கின்ற நூல்கள் பல உள்ளன. அவை யாவற்றையும் பகுத்தறிந்தபின் யாவருக்கும் எளிதில் புரியக்கூடிய அவரது வாழ்க்கை வரலாற்று விவரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

### பிறந்த இடம், காலம்

நாமதேவர் 26 அக்டோபர் 1270-ல் பண்டரிபுரத்தில் பிறந்தார். அவருடைய தந்தை தாமாஷேட் ஷிம்பி, தாய் கோணுபாயும் பர்பணி மாவட்டம், நரசிபாமணி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் நாமதேவர் பிறப்பதற்கு முன்னரே அவர்கள் பண்டரிபுரத்திற்குக் குடியேறிவிட்டனர். கோணுயி பண்டரிபுரத்திலிருக்கும்பொழுது விட்டலனிடம் ஒரு வேண்டுதலை நேர்ந்துகொண்டாள். அந்த வேண்டுதலுக்குப் பிறகு பிறந்த புதல்வன்தான் நாமதேவன். இதற்குப் பல சான்றுகள் உள்ளன.

அவற்றில் நாமதேவரின் இல்லத்தில் பணிபுரிந்த பணிப்பெண் ஜனுபாயியின் ஒரு அபங்கம் பிரசித்திபெற்றதாகும்.

அன்பு பிறந்தது அம்பாவிடம்
ஆனந்தியின் விடோபாயிடம்
ஆதி ஸ்தானம் பண்டரிபுரம்.
இங்கு வாழ்கிருன் அழகிய கண்ணன்
கோணுயி வேண்டிக்கொண்டாள்
தெய்வமே எனக்கொரு புதல்வனைக்கொடு என்று
தூயபிரார்த்தனை அவளது கண்டு அவள்
வயிற்றிலே உதித்தான் நாமதேவன்
தாமாஷேடி மனமகிழ்ந்தான்
பணிப்பெண் ஜனுவும் உளம் மகிழ்ந்தாள். (2233)

பக்தவிஜயம் என்ற நூலில் பக்தர்களான துறவிகளின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள மஹீபதி என்பவர் நாமதேவரை 'அயோனிஜன்மா' அதாவது இயற்கையாக ஒரு தாயின் வயிற்றில் ஜனிக்காதவர் எனக் குறிப்பிட்டுள்ளார். தாமாயியும், கோணுயியும் பாகீரதி நதியில் மிதந்து வந்த ஒரு பெரிய சிப்பியின் உள்ளேயிருந்து நாமதேவரைக் குழந்தை வடிவத்தில் கண்டெடுத்தனர் என்றும் ஒரு கதை உண்டு. ஷிம்பி என்பது நாமதேவரின் ஜாதிப்பெயர். சிம்பி என்ற பொருட் பெயருக்கும் (சிப்பி) இதற்கும் ஒற்றுமையிருந்ததால் பிற்காலத்தில் கற்பனையாளன் ஒருவனுக்கு இக்கதை தோன்றியிருக்கலாம். சிறந்த மகான்களின் பிறப்பைப் பற்றிப் பலவாறு அற்புதக் கதைகள் பேசப்படுவதைப் போல் இக்கதையும் தோன்றியிருக்கலாம். உண்மையில் மேலே கூறப்பட்டுள்ள ஜனுபாயின் அபங்கம் மற்றும் பக்த கவிஞர்களின் குறிப்புகளிலிருந்து நாமதேவரின் பிறப்பு பற்றிய தகவல்கள் தகுந்த ஆதாரங்களுடன் கிடைக்கின்றன.

## நாமதேவரின் குடும்பம்

இறையுணர்வு மிகுந்த குடும்பத்தில் பிறந்ததால் குழந்தைப் பருவத்திலிருந்தே நாமதேவரின் உள்ளத்திலே பக்தி துளிர்விட்டிருந்தது. விட்டலனின் திருநாமத்தின்பால் அளவற்ற ஈடுபாடும் தோன்றியது. தமது பதினேராவது வயதில் கோவிந்தஷெட்டி சதாவர்த்தின் மகளை நாமதேவர் திருமணம் செய்துகொண்டார். அவள் பெயர் ராஜாபாய். திருமணத்திற்குப் பிறகும்கூட அவர் மனம் குடும்ப வாழ்விலோ, பரம்பரைத் தையல் தொழிலிலோ ஈடுபடவில்லை. கையிலே தாளம், நாவிலே விட்டலனின் திருநாமத்துடன் இரவும் பகலும் பண்டரிபுரத்தின் ஆலயத்திலே பஜனை செய்யும் பித்தனுக, பரவச நிலையிலே இருந்தார். தாய் கோணுயி

யும், மனைவி ராஜாபாயும் அவரது இந்த பக்திப் பித்தத்தைத் தெளிவிக்கப் பெரிதும் முயன்றனர். ஆனால் அவரது பக்தி குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக் கொண்டேபோயிற்று. நாமதேவர் தனது இப் பூர்வகதையை ஒரு 'அபங்கத்திலே' கூறியுள்ளார்.

[இந்த அபங்கத்தின் மூலமான மராத்தி மொழியில் 'சதாஷிவி' என்ற வார்த்தைக்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று சிவபிரானின் திருநாமம்; மற்றொன்று எப்பொழுதும் தைத்துக்கொண்டிருப்பவன்.]

ஷிம்பி குலத்தில் நான் பிறந்தேன்
ஆனால் மனம் லயித்ததோ சதாசிவனிடம்
இரவிலும் தைக்கிறேன், பகலிலும் தைக்கிறேன்
மனிதப்பிறவி எடுத்த எனக்கு வேலையில்லை வேறு,
ஊசி, நூல், கத்திரி, கஜக்கோல் இவைதான்,
ஆனால் எண்ணமெல்லாம் சதாசிவனிடம்
நாமா சொல்லுகிறான் சிவனிடம்தான் விடோபாவும் உள்ளான்
இதனை அறிந்ததால்தான் உலகில் நான் தன்யனானேன். (966)

நாமதேவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். நால்வருக்கும் திருமணமாகி நான்கு மருமகள் வீட்டிற்கு வந்தனர். தாய், தந்தை, கணவன், மனைவி, நான்கு பிள்ளைகள், நான்கு மருமகள், லிம்பாயி என்ற மகள், அவுதாயி என்ற சகோதரி, பணிப்பெண் ஜனா, மொத்தம் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் அது. இக்குடும்பத்தை ஜனாபாய் இவ்விதம் வர்ணிக்கின்றாள்:

கோணாயி, ராஜாயி, மாமி மருமகள்,
தாமா தந்தை நாமா பிள்ளை
நாரா, விடா, கோந்தா, மஹாதா நான்கு பிள்ளைகள்
உதித்தனர் இத்தூய வம்சத்தில்
லாடாயி, கோடாயி, ஏசா, சாவராயி,
நாமாவின் மருமகள் நால்வர்.
மகள் லிம்பாயி உடன்பிறந்தவள் ஆவுதாயி,
நாமாவின் பணிப்பெண் பித்தியான ஜனா. (2376)

நாமதேவர் ஒரு புறம் தாய் தந்தை, மற்றும் குடும்பத்தினரின் அதிருப்திக்கும் நிந்தனைக்கும் ஆளானார். மறுபுறம் பக்தியெனும் ஆலயத்தின் படிகளிலே மேலும் மேலும் முன்னேறிச் சென்று கொண்டேயிருந்தார். குடும்பத்தின்பால் அவருக்கு அக்கறை குறைந்தது. ஆனால் பண்டரிபுரத்தின் சந்திரபாகா நதியின் வெண் மணல் பரந்த விசாலமான கரையிலே அவரது மெய்ஞ்ஞான பக்தியெனும் மற்றொரு உலகம் விரிந்து பரந்து கொண்டிருந்தது.

## நாமதேவரின் பூர்வ வரலாறு

நாமதேவரின் பிறப்பைப் பற்றிப் பலவித கதைகள் பரவி யுள்ளது போலவே அவரது வாழ்க்கையைப்பற்றித் தவருன அபிப் பிராயத்தை ஏற்படுத்தும் கட்டுக் கதைகளும் பல வழங்கி வரு கின்றன. இளமையில் நாமதேவர் கொள்ளைக்காரனுக இருந்தா ரென்றும், பின்னுல் தன் செய்கைக்காக வருந்தி பக்தி மார்க்கத் திற்குத் திரும்பினுர் என்றும் ஒரு கூற்று நிலவி வருகிறது. ஆனுல் இந்த வதந்திக்கு ஆதாரமாக உள்ள அபங்கம் நாமதேவர் இயற்றியது எனக் கூறப்படுவது, உண்மையில் அவருடையது அல்ல. போலியான இந்த அபங்கம், நாமதேவரின் வாழ்க்கையில் அற்பு தங்களைப் புகுத்த எண்ணிய யாரோ ஒருவரால் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இன்னெரு இடத்தில் கிடைத்துள்ள நாமதேவரின் வாழ்க்கைச் சரித்திரத்தில், அவர் எப்பொழுதாவது கொள்ளைக்காரராக இருந்திருப்பார் என்று ஐயப்படுவதற்கான சான்றுகள்கூடக் கிடைக்கவில்லை.

மகானுபாவர்களின் 'லீளா சரித்திர' எனும் நூலில் 'விட்டல விருகதன்' என்றதொரு அத்தியாயம் உள்ளது. அதில் நேமதேவன் என்ற பெயருடைய ஒரு மீனவன் வழிப்பறி செய்யும் கொள்ளைக் காரனுக இருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நேமதேவன், விட்டலன் என்ற அந்தணனுக்கும், ம்ஹாயாகுரவ எனும் பூசாரிக்கும் தோழனுக இருந்தான். இம்மூவரும் கொள்ளைக் காரர்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது. ஒருக்கால் இக்கதையின் படி நேமதேவனை நாமதேவனுகக் கருதி இருக்கலாம். கோரி அதாவது மீனவன் என்பது ஷிம்பி ஆக மாறிவிட்டது. நல்லவர் கொள்ளைக்காரராகக் கருதப்பட்டுவிட்டார். இருப்பினும் நேம தேவர் கோரி, நாமதேவர் ஷிம்பி இவ்விரண்டுக்கும் ஒற்றுமையிருப் பதாக நிரூபிக்க முடியாது.

மகானுபாவ சம்பிரதாயத்தின் 'ஸ்மிருதிஸ்தன' எனும் நூலில், விஷ்ணுதாசன் எனப் பெயருடைய நாமதேவ ஷிம்பிக்குத் தாமோதர் பண்டிதர் உபதேசம் செய்தார் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. மகானுபாவர்களின் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நாமதேவரைக் கூட பக்த துறவி நாமதேவர் அல்ல, வேருெருவர் என்று தான் நாம் கொள்ளவேண்டும்.

## நாமதேவர் என்பவர் ஒருவரா அல்லது பலரா?

நாமதேவரின் பல்வேறு அபங்கங்களின் தொகுப்பிலே, பக்த துறவி நாமதேவரைத் தவிர நாமா, விஷ்ணுநாமா என்ற பெயர் கடைசி அடியில் வரும்படியான பல அபங்கங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. இப்பாடல்களில் பக்த நாமதேவரின் அபங்கங்கள்

எவை, போலிகள் எவை என்பதை ஆய்ந்தறிந்து, தேடிக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். இருப்பினும் பக்திப் பெருக்கு, உற்சாகம், சொல்லாற்றல், பாண்டித்தியம், எளிய நடை, பழமையான சொற் பிரயோகம் போன்ற உரைக்கல்லில் உரைத்துப் பார்த்தால் பக்த நாமதேவரின் உண்மையான படைப்புகளைத் தனியே இனம் காண முடியும்.

பக்த நாமதேவரே சிற்சில இடங்களில் தம்மை விஷ்ணு தாசநாமா, அல்லது நாமா விஷ்ணுதாசன் எனக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் விஷ்ணுதாச நாமா என்ற பெயருடன் மகாபாரதத்தை எழுதியுள்ள கவிஞர் பக்த நாமதேவரிடமிருந்து வேறுபட்டவர். இவர் 16-ம் நூற்றாண்டின் கடைசியில் இருந் தவர். அவர் தம்மை அந்தணன் என்றும் பண்டிதர் என்றும் குறிப்பிட்டுக் கொண்டுள்ளார். பக்த நாமதேவரின் பாடல்கள் எளிமையானவை, அவை தனிப் பாடல்கள். தவிரவும் நாமதேவர் விட்டலனின் பரம பக்தர். விஷ்ணுதாச நாமா என்பவரோ, கிருஷ்ணன் மற்றும் ஏனைய தெய்வங்களை வழிபடுகின்ற, செருகு பாடல்களை இயற்றியுள்ள, ஒரு சாதாரண கவி என்பது தெரிகிறது. நாமதேவரின் சொற்களிலே எளிமையும், புதிய புதிய கற்பனைக ளால் தூண்டப்பட்டுள்ள வேகமும் தெரியும். விஷ்ணுதாச நாமாவின் நடை அறிவுபூர்வமான சிந்தனையினால் கட்டுப்பட்ட தாக உள்ளதால் இவ்விரண்டின் மொழி, நடையைத் தனித் தனியே இனம் கண்டுகொள்வது கடினமல்ல. தற்சமயம் இது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், பக்த நாமதேவர் தனது சில அபங்கங்களில் தனது பெயரை விஷ்ணுதாசனென்ற அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளார் என்றும், மகாபாரதத்தை இயற்றியுள்ள விஷ்ணுதாச நாமா தனது பெயரையே இச் சிறப்புப் பெயரால் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

'அஷ்வமேதபருவ' எனும் காவியத்தைப் படைத்துள்ள நாமா பாடக் என்பவர் 14-வது நூற்றாண்டின் கடைசியில் வாழ்ந்தவர். இதைப் போன்றே நாமதேவரின் பாடல்களில் 'நாமாயஷ்வந்த்' எனும் பெயருடன் ஒருசில அபங்கங்கள் உள்ளன. இவ்விரு கவி களையும் பக்த நாமதேவரிடமிருந்து வேறுபட்டவர்கள் எனக் கொள்ளுதல்வேண்டும்.

### ஞானதேவரும் நாமதேவரும்

நாமதேவர் என்பவர் ஒருவரா, பலரா என்ற விவாதத்தைப் போன்றே மராத்தியின் மற்றொரு சிறந்த பக்த கவியான ஞானேஸ் வரரும், நாமதேவரும் சமகாலத்தினரா என்பதும் சர்ச்சைக்குரிய

விஷயமே. ஞானதேவர் என்பவர் ஒருவரா, பலரா என்பதுடன் அப்படியொருவர் இருந்ததேயில்லை என்பதுபோன்ற வாதங்களும் நிலவுகின்றன. பகவத் கீதையின் உரை நூலான 'ஞானேஸ்வரி'யை எழுதிய ஞானதேவர் என்பவர் வேறு, 'பாபரகுமாதேவீவர்' என்ற பெயரில் தனது அபங்கங்களை இயற்றியுள்ள ஞானேஸ்வரர் வேறு என்றதொரு கருத்தும் உள்ளது. இவ்விருவரில் அபங்கங்களை எழுதியுள்ள ஞானேஸ்வரர்தான் நாமதேவரின் சமகாலத்தவராக இருந்தார் எனவும் கூறப்படுகிறது.

ஞானதேவரும், நாமதேவரும் சமகாலத்தவர்களாக இருந் திருக்கவே முடியாது. ஏனெனில், நாமதேவரின் மொழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஞானதேவரின் மொழி பழமையான தாக உள்ளது. இது ஒரு வாதமாகும். இதன்படி நாமதேவரின் காலம் ஞானதேவருக்குப் பின்னர் கிட்டத்தட்ட ஒரு நூற்றுண்டுக் கப்பால் எனக்கொள்ளுதல் வேண்டும். இக்கருத்தை வலியுறுத்த நாமதேவரின் அபங்கங்களில் முசல்மான்களைப் பற்றிய குறிப்புகள், நாமதேவரின் குருவான பிசோபா கேசர் இஸ்லாமிய மதத்தின் செல்வாக்கினுல் உருவ வழிபாட்டை எதிர்ப்பது போன்ற விஷயங் கள் சான்றுகளாகத் தரப்படுகின்றன. தென்ஞட்டில் 14-ம் நூற் ருண்டில் முசல்மான்களின் ஆதிக்கம் வேரூன்றிவிட்டிருந்ததால் நாமதேவர் இதற்கு முற்பட்ட காலத்தவராக இருக்கமுடியாது என்றும் கூறப்படுகிறது.

உண்மையில் 'ஞானேஸ்வரி'யையும் அபங்கங்களையும் இயற்றிய வர்கள் இரண்டு ஞானதேவர்கள் என்ற கூற்று ஆதாரமற்றதாகத் தெரிகின்றது. மொழி மற்றும் மேலெழுந்தவாரியான சில ஆதாரங் களைக் கொண்டு நாமதேவர், ஞானதேவருக்கு ஒரு நூற்றுண்டு காலத்திற்குப் பின் தோன்றியவர் எனக் கருதுவதும் தவறுகும். ஞானேஸ்வரி இயற்றப்பட்ட காலம் 1290 என்பது உறுதியானது. ஞானதேவரின் ஒரு சீடரான சச்சிதானந்தபாபா என்பவரால் ஞானேஸ்வரி எழுத்து வடிவம் தரப்பட்ட ஒரு நூலாகும். இது பகவத் கீதைக்கு ஒரு உரை விளக்கம்போல அமைக்கப்பட்டு ஒரு கட்டுக்கோப்புடன் விளங்குகிறது.

இதற்கு மாருக நாமதேவரின் அபங்கங்கள் தனிப்பாடல் பாணி யில், பாவகீதங்கள் போன்றவையாகும். ஞானேஸ்வரி, ஒரு நூல் என்ற முறையில் எழுத்து வடிவில் பரவியது என்ருல் நாமதேவரின் அபங்கங்கள் பெரிதும் வாய்மொழி மூலம் பரவின. இக்காரணத் திஞல் ஞானேஸ்வரியின் மொழி, நடையானது, நாமதேவரின் மொழி நடையைப் போன்று நவீனமாக்கப்படவில்லை. காலத்திற் கேற்ற புதுமை வடிவம் பெறும் வாய்ப்பைப் பெற இயலவில்லை. இதிலும்கூட ஞானேஸ்வரியுடன் ஒப்பிடும்பொழுது ஞானதேவரின்

அபங்கங்கள், அதிலும் குறிப்பாக ஹரிபாட்டின் அபங்கங்கள், பெருமளவில் புதுமைக்குரிய மாற்றங்களைப் பெற்றுள்ளன. ஞானேஸ்வரர் தமது பாடல்கள் குழந்தைகளும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இயற்றியுள்ளார். நாமதேவருடன் ஒப்பிடும்போது, ஞானதேவரின் படைப்புகளில் மற்றவர்கள் காலத்திற்கேற்ற முறையில் அதிக மாறுதல்களைப் புகுத்தவில்லை. இதற்கு மாருக நாமதேவரின் படைப்புகள் நாளாவட்டத்தில் காலத்திற்கேற்ற மொழியில் மாறுதல்களை அடைந்து வந்துள்ளன.

முசல்மான்களின் ஆதிக்கமும், இஸ்லாமிய மதமும் தென்னுட்டில் 14-வது நூற்ருண்டுக்கு முன்னர் வேரூன்றவில்லை என்பது உண்மை. ஆனுல் ஞானதேவரைவிட நாமதேவர் ஐம்பது ஆண்டு காலம் அதிகம் வாழ்ந்தவர். இதனுல் அவரது அபங்கங்களில் துருக்கியர்கள், முசல்மான்கள் பற்றிய குறிப்புகள் இருப்பது இயல்பானது. ஒரு அபங்கத்தில் அவர் சொல்லுகிருர்:

தெய்வங்கள் கல்லாலானவை பக்தர்களோ அன்பு
கொண்டவர்கள்
இருவரின் ஐயப்பாடுகளும் நீங்குவதெப்படி?
அத் தெய்வங்களை உடைத்தெறிந்துவிட்டனர் துருக்கர்கள்.
ஆழ்ந்த நீரிலே அவற்றை ஆழ்த்திவிட்டனர்.
இறைவா! அப்படிப்பட்ட தெய்வங்களை எனக்குக் காட்டாதே
கேசவனிடம் நாமா இதனையே வேண்டுகிருன். (1379)

நாமதேவரின் குருவான விடோபா கேசர் உருவ வழிபாட்டிற்கு எதிர்ப்பைத் தெரிவித்தார். அவர் இஸ்லாமிய மதத்தின் தாக்கத்திஞல் அல்ல, சகுண உபாசனையில் (உருவ வழிபாட்டில்) மூழ்கிக் கிடந்த நாமதேவருக்கு, நிர்க்குண உபாசனையின் தத்துவத்தை விளக்குவதற்காக வேண்டி, உருவ வழிபாட்டின் அர்த்தமற்ற தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார்.

ஞானதேவர், நாமதேவர் இவ்விருவரின் படைப்புகளிலும் கற்பனை, சொல்வளம் இரண்டிலும் அற்புதமானதொரு ஒற்றுமையைக் காண முடிகிறது. தங்களது அபங்கங்களிலும் இருவரும், ஒருவரைப்பற்றியொருவர் குறிப்பிட்டுள்ளனர். இவர்களது சமகாலத்தவர்களான பக்த கவிகள் பலரும் இவ்விருவரைப் பற்றியும் தங்களது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். மேற்கூறிய யாவற்றையும் சேர்த்து யோசிக்கும்போது, ஞானதேவர், நாமதேவர் இருவரும் சமகாலத்தவர் மட்டுமல்ல, ஒருவருடன் ஒருவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

நாமதேவரும் ஞானதேவரும் எப்பொழுது, எவ்வாறு சந்தித்தனர் என்பதுபற்றிப் பரம்பரைக் கதைகள், ஒரு சில அபங்

அங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள கதைகள், வழக்கில் உள்ளன. வரலாறு என்ற உரைகல்லில் உரைத்துப் பார்க்க முனைந்தால் இக் கதைகளையெல்லாம் அப்படியே ஏற்க இயலாமல் போகும். இக் கதைகளில் பெரும்பாலானவை பரஸ்பர முரண்பாடுகள் உள்ளன. ஆனால் மொத்தமாகப் பார்க்கும்பொழுது, இவற்றிலிருந்து நாம தேவரின் வாழ்க்கை, உணர்ச்சிபூர்வமான வாழ்க்கை, கவியுள்ளம், படைப்பாற்றல் முதலியவைபற்றி தூல உருவத்தில் இல்லாவிடினும், ஒட்டுமொத்தமாக ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது என்பதில் ஐயமில்லை.

## நாமதேவரும் சாதுக்களின் குழுவும்

*1290*-ல் 'ஞானேஸ்வரி' இயற்றப்பட்டது. நிவிருத்தி, ஞான தேவர், சோமான், முக்தாபாய் ஆகிய நால்வரும் இன்றைய புனே நகருக்கு அருகேயுள்ள ஆனந்தியில் துறவுநிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள், சித்துவிளையாட்டுகள் பற்றிய புகழ்ச்சி நாமதேவரின் காதுகளுக்கெட்டியது. ஆனந்தி சென்று அந்நால்வரையும் காணவேண்டுமென்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது. 'ஞானேஸ்வரி' இயற்றப்பட்டு இரண்டொரு வருடங்கள் ஆகியிருக்கலாம். ஞானதேவருக்குப் பதினைந்து, பதினாறு வயதிருக்கும். நாமதேவருக்கு இருபது, இருபத்தியொன்று வயதிருக்கலாம். சகோதரி, சகோதரர்களான அந்நால்வரையும் சந்தித்தது பற்றிய விவரங்களை, தனது சொந்த வாழ்க்கையைப் பற்றி வர்ணிக்கின்ற அபங்கங்களிலே மிகச் சுவையாக இதயத்தைத் தொடும்படியாகக் கூறியுள்ளார். இந்தப் பாக்களில் ஒரு சாதகன் என்ற நிலையில் நாமதேவரைப் பற்றியும், கவிதை புனையும் அவரது ஆற்றலும் பிரதிபலிக்கக் காண்கின்றோம்.

நாமதேவர் ஆனந்திக்கு வந்தார். முதலில் நிவிருத்தி நாதரைக் கண்டார்.

*நிவிருத்தி எழுந்து வந்தார், பக்தனை தரிசிக்க வந்தார்.*
*பண்டரியின் அன்பே உருவெடுத்து தனை நாடி வந்ததென*
*வலம் வந்தார், திருவடியில் பணிந்து நின்றார்,*
*நாமதேவன் தன்னகத்திலே செருக்குற்றான்.*
*தெய்வத்துடன் நாம் இணைபிரியாது உள்ளோம்,*
*நம்மைப் பணிவது இவர்களது கடமை,*
*ஹரியின் சரணங்களை விட்டு நாம் அகலுவதில்லை,*
*தெய்வமும், பக்தர்களும் போன்ற உறவுதான்*
*இவர்களுக்கும் நமக்குமுள்ள உறவு,*
*பரபிரம்மமே என்னுள்ளே குடிகொண்டுள்ளது.*
*நாமதேவன் சொல்லுகிறான் நானெப்படி*
*பணிவது இவர்களின் பாதங்களிலே!* **(1057)**

பார்க்கப்போனல் நிவிருத்திநாதர் எழுந்து வந்து வணங்கியதும் நாமதேவர் திருப்பி அவரைப் பணிந்திருக்கவேண்டும். ஆனல் அவரது மனத்தில் கர்வம் உண்டாகிவிட்டது. பண்டரிபுரத்தில் விட்டலனுடன் வாழ்கின்றவன் நான். இதனல் எனக்கும் இவர்களுக்கும் உள்ள உறவு தெய்வத்திற்கும் பக்தனுக்கும் ஏற்படுகின்ற உறவு. என்னை வணங்குவது அவர்களுக்கு முறையான கடமை. ஆனல் என்னுள்ளத்திலே பரபிரம்மம் குடிகொண்டுள்ளான். இதனல் நானெப்படி அவர்களை வணங்க முடியும்? எதற்காக வணங்குவது? என நினைத்தார் நாமதேவர்.

நிவிருத்திநாதருக்குப் பின்னர் ஞானேஸ்வரர், நாமதேவரை வணங்கினர்.

ஞானதேவன் எழுந்தான், அவன் வணங்கி நின்றான்.
தாளடியில் சிரம் வைத்து வணங்கி நின்றான்.
நாமா சொல்லுகிறன் நான் வயதில் மூத்தவன்.
இதனல் வணங்குவதற்குத் தகுதியுள்ளவன்.
அல்லும் பகலும் தெய்வத்துடனிருப்பவன் நான்.
வந்தேன் இங்கு, வணங்குகின்றனர் யாவரும்,
வைணவனின் பாரத்தைத் தாங்குபவர்கள் தேவர்கள்
பண்டரிநாதனின் தாளடியே சரணம், சரணம்.
நாமா கூறுகிறன். சாதுக்களின் இச் சத்சங்கத்தைக் கண்டு
வனமாலியும் மெய்மறந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்குகிறன்.
(1058)

ஞானதேவரைவிட நாமதேவர் ஐந்து வயது மூத்தவர். இதனல் அவருக்கு இவை யாவும் இயல்பானதாகவே பட்டது. ஏன் எனில் சிறியவர்கள் பெரியவர்களை வணங்குவது என்பது மரியாதைக்குரிய பண்பு. யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் நியதி. இதன் பிறகு சோபான் தேவும் தன்னிரு மூத்த சகோதரர்களைப் பின்பற்றினர்.

சோபான் வந்தான், பாதங்களில் வணங்கினன்,
பாண்டுரங்கனக அவரைக் கருதி,
ஆய்ந்தறிந்தான், பலவாறு இச்சகம் பேசி,
'அனுதைகளுக்குத் தாய் சாதுக்களே.
எங்கள் தந்தையையும் தாயையும்
பெற்றுவிட்டோம் இன்று நாங்கள்'
எனச் சேர்த்தணைத்தான் அன்புடன்.
நாமா சொல்லுகிறன் புரிந்துவிட்டது இவனது அன்பு,
தெய்வம் எடுத்துக்கொண்ட சிரமமென்ன குறைவா? (1059)

சோபான் தேவனின் பக்தி ஏனோ நாமதேவருக்குப் போலியாகப்பட்டது. கடவுள் தன்னை ஏன் இங்கே அனுப்பினார் என்று தோன்றியது. நிவிருத்தி, ஞானதேவர், சோபான் தேவருக்குப் பிறகு எஞ்சியிருந்தது முக்தாபாய் ஒருத்திதான். தனது மூத்த அண்ணார்மார்களுக்கு நாமதேவர் பதிலுக்கு வணக்கம் தெரிவிக்காமலிருந்தது முக்தாபாய்க்கு உறுத்தியது. வெட்டொன்று துண்டு இரண்டு என்பது அவளது சுபாவம். எதையும் மறைத்து ஒளித்துப் பேசாமல் வெளிப்படையாகக் கூறிவிடும் பெண்மணி அவள் என்பது பிரசித்தம், அவள் கூறினாள்.

எவருக்கு இறைவனின் எல்லையற்ற அருள் உளதோ
அவர்தம் அகங்காரம் ஏன் அழியவில்லை?
பொறுமையையும் துவேஷத்தையும் வளர்ப்பதன்றோ
மான அவமானமெனும் உணர்ச்சிகள்,
வெளிச்சமிருக்கையிலே விளக்கெதற்கு கையில்?
நித்தமும் பரப்பிரம்மத்துடன் திருவிளையாட்டு,
பின் குருடனுக்குப் பார்வை வேண்டுமென ஏன் ஆசை?
கல்பதருவின் நிழலிலே கிட்டுகிறது வேண்டுவதெல்லாம்
எனக் கூறுபவனின் கரத்திலே தரித்திரனின் திருவோடு எதற்கு?
வீட்டிலே காமதேனு கட்டியிருக்க, தயிர் வாங்கச் செல்லும்
பித்தனும் உண்டோ இவ்வுலகில்?
முக்தாபாய் சொல்லுகிறாள் நான் தரிசிக்கச் செல்ல
மாட்டேன், விட்டொழிக்கட்டும் கர்வத்தை முதலில். (1061)

முக்தாபாய் நாமதேவரைத் தரிசிக்கச் செல்லத் தயாராக இல்லை என்பதைக் கண்ட அவளது அண்ணன் அவளுக்குப் பலவாறு எடுத்துரைத்தான். நாமதேவர் தனது பக்தியினால் இறைவனையே வென்று தனக்கடிமையாக்கிக் கொண்டு விட்டார். பக்தியைவிட உயர்வானது, சிறந்தது இவ்வுலகத்தில் எதுவுமேயில்லை என்பதை அறிவுறுத்தினான். ஆனால் முக்தாபாய் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. நாமதேவர் எத்தனை பெரிய பக்தராக இருப்பினும் மெய்ஞ்ஞானம் இன்னும் ஏற்படவில்லை என்பது அவளது கருத்து. இதனை விளக்கி முக்தாபாய் கூறுகின்றாள்:

வாய்ச் சொல்லிலே செய்துள்ளான் இவன் பிரசாரம்
குருவின்றி உள் மனத்திலே உள்ளது வெறுமை.
சாதுக்களை மதித்து நடப்பதை எவன் அறியானோ,
பகவானின் அருகிருந்தும் அவன் அறிந்தது யாதோ?
பாதரசத்தின்மீது ஓடொன்று மூடியிருப்பின்
ஐம்பத்திரண்டு தோலாவின் கனமென்னவோ குறைவதில்லை.
எரி தணலைச் சிந்துாரம் சிறப்புறச் செய்தாலும்
உள்ளத்திலிருப்பதென்னவோ அழிவதில்லை.

முக்தாபாய் சொல்லுகிறுள் இறுமாப்புதான் இது
பாம்புக்கு விடத்தை ஊட்டியதுபோல். (1063)

அமுதத்தை விட்டுக் கஞ்சியை விரும்புவதுபோல்
குடிசைதான் பிடித்ததோ அவனுக்கு.
கழுதையைக் கங்கையில் குளிப்பாட்டினுலும்
வாழ்வு அதனது வீண் அன்றோ?
காட்டிலுள்ள குந்துமணி அது
நற்பவழங்களைவிட மனம் கவரும்,
அலங்காரத்திற்கு பயன் அதனுல் ஏதுண்டு?
மாதுளையைவிட அழகானது இந்திராவளி.
சுவைத்தாலோ கசப்பு, மோசம் அந்தப்பழம்.
வண்ண பொம்மை அது மிக அழகு,
ஆனுல் அணிந்திருப்பதோ போலி நகை.
முக்தாபாய் சொல்லுகிறுள் கிடக்கட்டும் அந்த தத்துவம்
குருவின்றி சாதுவின் வாழ்க்கை அது வீணே. (1064)

முக்தாபாயின் கருத்தின்படி நாமதேவர் சந்தன மரம்தான் ஆனுல் அதனை அகங்காரமெனும் விஷப்பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறது. இதனுல் அவரை மதித்துப் போற்றி மரியாதைகள் செய்ததும் இறுமாப்பு ஏற்பட்டுவிடுகிறது. நாலு பேருக்கு இவர் பண்டரியின் மகிமையை எடுத்துரைக்கின்றுர் எனினும் அகத்திலே கடுகளவுகூட மெய்ஞ்ஞான போதம் ஏற்படவில்லை. நாமதேவரின் நிலை சாங்க தேவனின் நிலைபோன்றது என்பதுதான் முக்தாபாயின் கருத்தாகும். முக்தாபாயின் இக்கூற்றுக்கு நிவிருத்திநாதர் இவ்வாறு விடையளிக்கின்றுர்:

நிவிருத்தி கூறினுர், கூருதே அப்படியெல்லாம்.
பாக்கிய வசத்தால் பக்தர் அவர் எழுந்தருளியுள்ளார்.
நமக்கெது நன்மையோ அதனைச் செய்வோம்.
பக்தருக்குரிய மரியாதையைச் செய்யத் தவருேம்.
பண்டரியில் வாழ்பவர் அவர் பாக்கியசாலி.
அவரில்லத்து நாயாக வாழ்வதும் நல்லதே.
நாமதேவரின்பால் கொண்டுள்ளான் இறைவன் பேரன்பு.
தன் அன்பினுல் இவரைப் பித்தனுக்கியுள்ளான் பாண்டுரங்கன்.
நிவிருத்தி கூறுகிறுன் அவரை—அவன், இவன் எனக் கூருதே
தாளடியில் சிரம் வைத்து வணங்குவதே நன்று. (1066)

இவ்விஷயத்தில் உடன் பிறந்த இந்த நால்வருக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டுவிட்டது. முடிவில் நாமதேவரின் அகங்காரத்தை அகற்றவேண்டுமென்றும் முடிவாகியது. இதற்கு முன்னர் தனது யோக மாயா சக்திகளைப் பற்றி பெருமையடித்துக் கொண்ட சாங்க தேவனின் கர்வத்தை இந்நால்வருமாகச் சேர்ந்து

குலேத்துவிட்டிருந்தனர். சாங்கதேவன் முதலில் ஹடயோகியாக இருந்தான். நாமதேவரைப்போலவே இவனது காதிற்கும் ஞான தேவரின் புகழ் எட்டியிருந்தது. அவன் நாமதேவருக்கு ஒரு லிகிதம் அனுப்ப நினேத்தான். ஆனுல் அக்கடிதத்தைத் துவக்கும் பொழுது 'தீர்த்தஸ்வரூப' (தந்தையே) என அழைப்பதா, சிரஞ்சீவி (மகனே) என்று எழுதுவதா' என்று உறுதியானதொரு முடிவிற்கு வர இயலாததால் எவ்விதமான விளிப்புச் சொல்லும் இல்லாது வெறும் கடிதத்தை அனுப்பிவிட்டான். 'இத்தனே யோக சக்திகளே அடைந்தபின்னும் சாங்கதேவன் வெறுமையாகி விட்டான்' என்று அச்சமயம் முக்தாபாய் ஏசினுள். ஞான தேவர் சாங்கதேவனின் கர்வத்தை அடக்கி, அவனுக்கு அத்துவைத ஞானத்தை அருளினுர். இது 'சாங்தேவ பாசஷ்டி' (65 விஷயங்கள்) என்ற பெயரில் பிரசித்திப் பெற்றுள்ளது. முக்தா பாயும் சாங்கதேவனேத் தனது சீடனுக ஏற்று உபதேசம் அருளி னுள்.

சாங்கதேவனுக்குத் தனது ஹடயோகத்தைப்பற்றிய கர்வம் இருந்ததுபோல நாமதேவருக்கு விட்டலயோகத்தைப்பற்றிய கர்வமுள்ளது என்பதை முக்தாபாய் புரிந்துகொண்டுவிட்டாள். நாமதேவரின் செருக்கை அடக்கும் பணியை யாரிடம் ஒப்படைப்பது என நால்வரும் கலந்தாலோசித்தனர். முடிவில் இன்றைய உஸ்மாஞபாத் வட்டத்திலுள்ள தேர்டோகி எனும் கிராமத்தில் வசித்த பக்த கோராகும்பரிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இக் காலகட்டத்தில் மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும் புகழ் பெற்ற பக்தர்களும், சாதுக்களும் வாழ்ந்து வந்தனர். நாமதேவ ரின் சமகாலத்தவர்களான ஞானதேவரும் அவரது உடன் பிறந்த வர்களும் பைடனுக்கருகே ஆபே கிராமத்தில் வசித்து வந்தனர். நாமதேவரின் பணிப்பெண் ஜனுபாய், பொற்கொல்லன் நரஹரி, பர்சா பாகவத் முதலியோர் பண்டரிபுரத்திலும், ஜோகா பரமானந்தர் பார்ஷியிலும், சாவந்தா மாலி அரண்கேண்டியிலும், சோகாமேளர் மங்கல்வேடாவிலும், விசோபாகேசர் ஆவன்டயா விலும் வாழ்ந்து வந்தனர். இந்த பக்தர்கள் யாவரிலும் கோரோபா சிறந்தவராக விளங்கினுர். இதனுல் இவரைக் 'கோரோபா காகா' என்றழைத்தனர்.

கோரோபா மண்பாண்டக் கலேஞர். அவரிடம் அனுபவம் என்ற தட்டுக்கோலிருந்தது. ஒரு மட்பாண்டம் சுட்டதா, சுடா ததா என்பதை இத்தட்டுக்கோலினுல் தட்டிப்பார்த்தால் தெரிந்து விடும். நாமதேவர் எனும் மட்பாண்டம் சுட்டதா, சுடாததா என்று] சோதித்துப் பார்க்க கோரோபாவை அழைப்பது என்று

தீர்மானமாகிய பின்னர், அவரைச் சந்திக்க முக்தாபாய் தானே நேரில் சென்றாள். இச்சந்திப்பைப்பற்றிய வருணனையில் நாமதேவரின் இணையற்ற சொல்லாற்றல் கேட்கத்தக்கது.

நன்முத்துக்களைத் துகளாக்கி வானத்திலே எறிய,
மின்னலைப்போல் அவை ஒளிருகின்றன.
வானமது பொன்னுடையைத் தரித்துள்ளது.
சைதன்யத்தின் சூல் அது நீல வண்ண பிந்து.
எரிகின்ற தீவர்த்தியைப்போல், ஸ்பரிசத்தினால்
சூனிய வடிவெடுத்துவிட்டது அது,
சர்ப்பத்தின் குட்டிகள்கூட ஆடத் துவங்கிவிட்டன,
இடி முழக்கமிட்ட மின்னலும் அப்படியே உறைந்துவிட்டது.
முக்தாபாய், கோரோவைச் சந்தித்தாள்.
நாமதேவர் சொல்கிறார் எப்படிப்பட்ட சந்திப்பு இது,
ஒருபொழுதும் திருப்தி அடையாதவர் தன்னுடையதைத்
தானே அறிந்துகொண்டாள். (1072)

நாமதேவரைச் சோதித்தல்

இப்படியாகக் கோரோபா ஆனந்திக்கு வந்தார். அங்கு குழுமியிருந்த சாதுக்களின் கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரையும் தன் கரத்திலிருந்த தட்டுக்கோலினால் தட்டிச் சோதித்துப் பார்க்கத் துவங்கினார். நிவிருத்தியில் துவங்கி வரிசையாக, ஞானேஸ்வரர், சோபான், முக்தாபாய் எனத் தலையில் தட்டிக்கொண்டே வந்தார். ஒவ்வொருவரும் அந்த அடியைத் தாங்கிக்கொண்டு, தாங்கள் சுட்டவர்கள் அதாவது உறுதியானவர்கள் என்பதை அறிந்துகொண்டனர். நாமதேவரின் முறை வந்தது.

அத்தட்டுக்கோல் பட்டது நாமதேவரின் தலைமீது
தலையைப் பிடித்துக்கொண்டு அழலானார் அவர்.
இதனைக் கண்ட கோரா முக்தாபாயை நோக்கி,
கோரா கூறுகிறான். ஹே! தாயே! வெறுமையாகி நிற்கிறான் இவன்
பதமாகவில்லை எள்ளளவும் இவன் இன்னமும்,

இந்நிலையில் தனது மனநிலை எவ்வாறு இருந்தது என்பதுபற்றி நாமதேவர் சுவையாகக் கூறுகிறார்.

கலக்கமடைந்தவனாய் ஓலமிடுகிறான்.
''தோழா! எனக்கென்று எவருமேயில்லைடா''
வைராக்கியமெனும் உரை கல்லின் அடியைத்
தாங்க இயலவில்லை அவனால்.

பின்னுக்கு இழுக்கிறுன் காலே, பாய்ந்தோட,
உள்ளத்திலே அச்சம் மூண்டெழுந்தது.
யுகமெனக் கழிந்தது ஒவ்வொரு கணமும்.
நாமா சொல்லுகிறுன் இனி ஓடிவிடலாம்
இங்கிருந்து, சாதுக்களின் கூட்டமன்ருே இது
நெருப்பிலும் போட்டுப் பொசுக்கிவிடுவார்கள். (1078)

அங்கிருந்த சாதுக்கள் எவரிடமும் கூருமல் நாமதேவர் ஆனந்தியிலிருந்து புறப்பட்டுவிட்டார். இந்திராயணி ஆற்றைக் கடந்து விரைந்து சென்று பண்டரிபுரத்தை அடைந்தார். அங்கு சென்று விட்டலனிடம் முறையிட்டார்.

விட்டலனின் திருவுருவச் சிலேயை நெஞ்சோடு தழுவிக் கொண்டு அவர் கூறிஞர்:

நிவிருத்தியின் கையிலே என்னேக் கொடுத்துவிடாதே.
ஞானதேவனும், சோபானும் எனே வெறுமையாக்கிவிட்டனர்.
முட்டாள் கிழவன் (கோரோபா) நெருப்பாகிவிட்டான்
முக்தாபாயி மூட்டிவிட்ட நெருப்பு இது.
சாதுக்களின் கூட்டம் இது கபடம் நிறைந்தது
நாமா சொல்லுகிறுன் நல்லவேளே வந்துவிட்டேன் இங்கு
இல்லேயெனில் அழிந்திருப்பேன் அங்கு முழுமையாக. (1080)

சாதுக்களின் அக்குழுவைச் சச்சரவிடுபவர்கள், கோள் மூட்டிகள், கபடமானவர்கள் எனத் திரும்பத் திரும்ப கூறும் நாமதேவர் இது மோசக்காரர்களின்கூட்டம் எனக் குற்றம் சாட்டுகிருர்:

பனியாக்கள் ''கைகாட்'' கொட கொட சத்தம் போடுகின்றனர்
இதன் மர்மம் எனக்கென்னவோ புரியவில்லே
நாமா சொல்லுகிறுன் இவர்கள் ''வெளிச்சத்தின் பாட்டைப்'' (மெய்ஞ்ஞானத்தை) பாடுகின்றனர்.
எனக்கென்னவோ இவர்கள் அகோரிகள் எனத் தோன்றுகின்றனர்.

(அகோரி என்பது ஒருவிதக் கடுமையான சாதஞ மார்க்கத்தைப் பின்பற்றும் சாதுக்கள்)

நாமதேவர் ஞானேஸ்வரர் போன்றவர்களின் படைப்புக்களே ப்ரகாஷ் கா காஞ—வெளிச்சத்தின் பாட்டு, எனக் கூறுவது மெய்ஞ்ஞான ஒளியைக் குறிப்பதாகும். இதுவொரு சிறந்த கவியை அவருக்கு இணேயான ஆற்றலுடைய மற்ருெரு கவிஞர் மிகச் சூசகமாக, மனதில் படும்படியாகக் கூறியுள்ள கருத்து இது. புகழ்வது போல் இகழ்ந்துரைத்து ஞானதேவரைப்பற்றித் தான் அறிந்

துள்ளதை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பது கவனிக்கத் தக்கது.

கூறுகின்றனர் மண்ணைக் கிளறிப் பெற்றுள்ளோம் தானியம்.
செலவுக்குக் காலணாவிற்கு வழியைக் காணோம்.
அழுது சிரித்துக்கொண்டு ஒருவர்மீதொருவர் புரள்கின்றனர்.
எல்லையற்ற ஆனந்தமிது எனக் கூறுகின்றனர்.
எச்சிறப்பைக் கண்டு இறைவன் அவர்கள்பால் மகிழ்ந்துள்ளரோ?
ஆடைகளோ கிழிசல், வாழ்க்கை முழுவதும் கந்தலே
ஏழ்மைக் கண்டு வருத்தியது உள்ளம்.
பண்டரி ஒன்றுதான் பாரசமணி
சின்னஞ்சிறு முக்தா, சிறு துரும்பு அவள்
நாடு கடத்தப்பட்டவர்கள், மகான்களான துறவிகள்
இப்பிரம் மாண்டம் முழுவதும் அவர்களது கக்கத்தில்
நாமா சொல்லுகிறான் எனக்கென்னவோ
ஆஷாட பூதிகளாக தோன்றுகின்றனர் இவர்கள்! (1083)

பிசோபாகேசரிடமிருந்து பெற்ற உபதேசம்

நாமதேவர் சத்வப் பரீட்சையில் தேறவில்லை. பண்டரிபுரம் திரும்பிய அவர் இதுபற்றித் தன்னுள்ளே ஆழ்ந்து சிந்திக்க முற்பட்டார். மெல்ல மெல்ல அவருக்குத் தன்னிடமிருந்த குறைபாடுகள் பற்றிய உணர்வு ஏற்படலாயிற்று.

சாதுக்களிடம் பாராமுகமாகி அறியாமையில் உழல்பவனுக்கு,
இகலோகம், பரலோகம் எங்கும் இடமில்லை காண்.
பித்தனவன் சாதுக்களைப் பின்பற்றவில்லை.
விழிகளிலே அஞ்ஞானத்தின் மயக்கமது.
அன்புடன் தன்னையே தட்டிக் கொடுத்துக்கொண்டேன்.
நல்லவர்கள் நயம்பட உரைத்தது கசந்தது.
கைக்கெட்டிய பயனையெல்லாம் இழந்துவிட்டேன்;
பிரமையிலாழ்ந்து முட்டாளாகிப் போய்விட்டேன்
மோகமெனும் சர்ப்பம் அங்கமெல்லாம் விரவி நின்றது
'பாண்டுரங்கா' என இனிக் கூவி அழைப்பதனால் என்ன பயன்?
(1087)

நல்வழி காட்டும் குருவில்லாமல் இறைவனை அடைவதென்பது இயலாத காரியம் என்பது இப்பொழுது அவருக்குத் தெளிவாகி விட்டது.

சத்குருவிற்குச் சேவை புரியாத வரையிலும்
'நான்' என்பது கனவிலே கண்ட நிதியாகும்
சம்சார பந்தமிது எனைவிட்டகலாது
சத்குருவின் ஆக்ஞையின்றி. (1088)

இறைவனின் தூண்டுதலினால் நாமதேவர் ஆவண்டயா நாக நாத்தைச் சேர்ந்த துறவி விசோபாகேசரை, குரு உபதேசம் பெற வேண்டி, நாடிச் சென்றார். நாகநாத் புராதன தாருகாவனத்தி லுள்ள நாகேஷ் எனும் பன்னிரெண்டு ஜ்யோதிர் லிங்கங்களில் ஒன்றாகும். இங்குதான் நாமதேவர் விசோபாகேசரைத் தரிசித் தார். ஆனால் எந்த நிலையில்? சிவலிங்கத்தின் பலிபீடத்தில் காலை நீட்டிக்கொண்டு உறங்குகின்ற நிலையில் கண்டார். தனது எதிர் கால குருதேவரை இந்நிலையில் கண்ட நாமதேவர் திடுக்கிட்டார். பகவான் தலைமீதே கால்களை வைத்துக்கொண்டு நிம்மதியாக உறங்கும் விசோபாகேசரை நோக்கி நாமதேவர் கூறினார்.

எழுந்திரு எழுந்திரப்பா? நீ என்ன குருடனா?
தெய்வத்தின்மீது காலை வைத்திருக்கிறாயே!
விசோபாகேசர் நாமதேவரிடம் கூறினார்
'என்னுயிரை ஏன் எழுப்பினாய்?
எந்த இடம் இறைவனின்றியுள்ளது?
சிந்தித்துப்பார், நாமதேவா!
எங்கு தெய்வமில்லையோ, அங்கு எனது காலை எடுத்துவை.
இதன் பொருளைப் பூரணமாக உணர்ந்துகொள்.'
நாமதேவர் சுற்றும் முற்றும் பார்த்தார். என்ன தெரிந்தது?
சுற்றும் முற்றும் பார்த்தான் நாமதேவன்.
இங்குமங்கும் எங்கும் இறைவன்!
இறைவன் இல்லாத இடமேயில்லை. (1098)

விசோபாகேசரின் சந்நிதானத்தில்தான் நாமதேவருக்கு ஞானம் பிறந்தது. விசோபா நாமதேவருக்கு உபதேசம் செய்தார்.

நாமமும் ரூபமும் அற்றது எதுவோ
இறைவன் அதுவே மற்றது யாவும் பொய்.
நீரிலும், நிலத்திலும், கல்லிலும்
பிண்டத்திலும் பிரம்மாண்டத்திலும்
அணுவிலும், துளியிலும், யாவற்றிலும்
நீக்கமற நிறைந்தவன் அவனே.
இதனைப் புரிந்தறிந்துகொள்!
உன்னை நீயே உணர்ந்துகொள்.
கேசர் உரைக்கின்றான்,
காதுகளிலே கூறுகின்றான்.
எங்கும் இறைவனே காண்
சிரத்தின்மீது கரத்தை வைத்தான்
பிரம்ம, ஜீவ பேதத்தை விலக்கினான்.

நாமதேவரை, விசோபாகேசர் 'பதபிண்ட விவர்ஜித் கியா' அதாவது பிரம்மன், ஜீவன் இவ்விரண்டிற்குமிடையேயிருந்த

பேதத்தை அகற்றி நாமதேவரைப் பிரம்ம ஸ்வரூபமாக்கிவிட்டார். விசோபாகேசரின் உபதேசம், அவரால் நாமதேவருக்குக் கிட்டிய ஞானதிருஷ்டி பற்றிய வருணனை கீழ்க்கண்ட ஞானதேவரின் 'ஓவி யோம்' (சந்தத்தின் பெயர்) முடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்தது.

*ராக துவேஷம் அழிந்தபின்,*
*கிட்டுகிறது பிரம்மத்துவம்,*
*அவ்வின்பத்திலே தோய்ந்தபின்,*
*ஜீவபிரம்மபேதம் அழிகின்றது.*
*அவனே குரு, அவனே சீடன்,*
*அந்நிலையில் நிலைபெற்றபின்*
*குறையேதுமில்லை எக்காலத்தும்! (ஞானேஸ்வரி 13–50)*

ஞானதேவரின் குருட்டுத் தனமான பக்தி, குருவின் உபதே சத்தைப் பெற்றபின்னர் ஞான ஒளியைப்பெற்றது. தனது குருவின் பால் நாமதேவரின் உள்ளம் நன்றியுணர்வினால் நிறைந்தது. இதனை அவர் பலவாறு வெளியிட்டுள்ளார்.

*சத்குரு நாயகன் அவன் பேரருள் காட்டியுள்ளான்,*
*எனக்குற்றது எதுவென எனக்கவன் காட்டிவிட்டான்,*
*எனது இன்பத்தை எனக்கவன் சுட்டிக் காட்டிவிட்டான்.*
*அன்பெனும் கலையை நாமமெனும் முத்திரையைக் காட்டி*
*விட்டான்.*
*இந்நன்றிக்கடனெனும் சுமையை எப்படி இறக்குவேன் யான்.*
*இனிப் பிறவித் துன்பமின்றிஎனக்கருள் செய்துவிட்டான்.*
*நாமா உரைக்கின்றான் நல்வழி காட்டிவிட்டான்.*
*விசோபாவின் திருவடியை என்றென்றும் நான் மறவேன்.*

குருவின் உபதேசம் எந்த அளவிற்கு அவரது உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது என்பது அவர் சாதனையில் ஈடுபட்டிருந்த காலத்தில் பலமுறை சோதனைக்குள்ளாக்கப்பட்டது. ஒருமுறை அவர் உணவருந்திக் கொண்டிருந்த சமயம் நாயொன்று அங்கு வந்து அவரது தட்டிலிருந்த ரொட்டியை எடுத்துக்கொண்டோடி விட்டது. நாமதேவரின் உள்ளத்திலே 'எல்லா உயிர்களிலும் இறைவன் உறைகின்றான்' என்ற உணர்வே மேலிட்டிருந்ததால், 'வெறும் ரொட்டியைச் சாப்பிடாதே! உனக்கு வயிற்றை வலிக் கும். ரொட்டியுடன் இந்த நெய்யையும் சாப்பிடு!' எனக் கூறிக் கொண்டே கையில் நெய்க்கிண்ணத்துடன் அந்நாயின் பின்னாலேயே ஓடியதாக ஒரு கதை உள்ளது. அதாவது ''சூனிசைவ ஷ்வாபாகே ச பண்டிதா: சமதர்ஷினே: (பகவத்கீதை 5–18) பண்டிதா என்ற சொல் ஞானிகளைக் குறிக்கின்றது. மெய்ஞ்ஞானம் பெற்ற ஞானி களுக்கு உயிர்களுக்குள் ஏற்றத்தாழ்வு காணும் நோக்கு இல்லை.

அவன் கல்வி கேள்விகளில் சிறந்த மேலானவனுயினும், நாயைச் சமைத்துண்ணும் கீழ்மகனுகிலும், அது நாயானுலும் ஞானி அனைத்தையுமே பிரம்ம ஸ்வரூபமாகவே காண்கின்ருன். சம நோக்குடைய அவனது பார்வையில் வேற்றுமை உணர்வு இல்லை. நாமதேவர் இம் மெய்ஞ்ஞானியின் நிலையை அடைந்திருந்தார். ஆதலால் அவரது வாக்கிலிருந்து இப்பாடல் வெளிப்பட்டது.

ஆடுவோம், பாடுவோம் நாம சங்கீர்த்தனம்.
ஞானமெனும் தீபத்தை ஏற்றுவோம் உலகத்தில்.
வீடு பேற்றினை அடைந்து, என்றென்றும் வாழ்வோம்.
யாவருக்கும் உறைவிடமான அதுவே, எனது ஸ்வரூபமாகும்.
யாவும் வந்துவிட்டது, கைக்குள், பெரும் வள்ளல் அவன்.
நாமதேவனின் கேசர் அவன் யாவுமே அவனருள். (1115—1245)

## முதலாவது (தீர்த்தாவளி) தீர்த்த யாத்திரை

ஞானதேவர், மற்றும் சாதுக்களின் கூட்டத்தோடு இருக்கும் படியானதொரு சந்தர்ப்பம் நாமதேவருக்கு சுமார் ஏழரை ஆண்டு காலத்திற்குக் கிட்டியது. இக் காலகட்டத்தில் பண்டரிபுரத்தி லிருந்து ஆனந்திவரை மகாராஷ்டிரத்தின் இப்பகுதியெங்கும் ஞானதேவரின் பிரவசனங்களும், நாமதேவரின் நாம சங்கீர்த் தனமும் எதிரொலித்துக்கொண்டிருந்தது எனலாம். ஒருமுறை ஞானதேவர், நாமதேவரைச் சந்திக்க பண்டரிபுரம் வந்திருந் தார். அச்சமயம், சகல தீர்த்தங்களும் தலங்களும் பண்டரி நாதனின் திருவடிதான் என நாமதேவர் கருதினர், நம்பினர். அவரது இந்த அசையாத நம்பிக்கையும், பண்டரிநாதனின்பால் கொண்டிருந்த பிரேமையும் பக்தியும், தீர்த்தயாத்திரையின்பால் காட்டிய சிரத்தையற்ற மனப்போக்கும் ஞானதேவருக்கு நாம தேவரின்பால் பெரும் மதிப்பைத் தோற்றுவித்தது. அவர் கூறினர்,

'சிறந்தவனும் உயர்ந்தவனும், அறிவாளியும், உதார குணமுடையவனுமான உனக்கு, உனது பிரேமையின் பிரதான மான பக்தியானது மிகுந்த சோபையை அளிக்கின்றது. உலக வாழ் வில் ஈடுபட்டிருந்தும்கூட உனது பக்தியானது உணர்ச்சிமிக்கது. நீ பரம பக்தன், பிரேமையின் இன்பசுகத்தை நீ அடைந்துள்ளாய்.'

ஆனுல் நாமதேவர் தனக்குள்ளே ஆழ்ந்து சிந்தித்தார். சாட் சாத் பரப்பிரம்ம ஸ்வரூபமான ஞானதேவர் தனது சத்சங்கத்தை அளித்து தன்னை கௌரவித்துள்ளார். அப்பேறபட்ட பாக்கியத்தை அடைவதற்குப் பிறவி எடுத்தவன், தானே விஷ்ணுதாசன் என்று தோன்றியது. இறைவனே முன்தோன்றி ''புறப்படு! மங்கள முண்டாகட்டும், புறப்படு. உனது நன்மையைக்கோரி இவ்

விரதத்தை விரைவில் மேற்கொள்ளுவாயாக'' எனக்கூறி தீர்த்த யாத்திரையை மேற்கொள்ளுமாறு பணித்தார். ஞானேஸ்வரரிடமும் நாமதேவரின்பால் தனக்குள்ள ஆத்மீகமான உறவை வெளிப்படுத்தினார்.

'எனதன்பிற்குரிய நாமா, பித்தனவன் என்பால், பக்தன்
செல்லும் வழியில், முன்னும், பின்னும் கவனித்துக்கொள் அவனை
காட்டிலும் மேட்டிலும், கூட்டத்திலும் தேவை அவனுக்கு
உதவி,
உனது ஆவலைக் கண்டே அனுப்புகிறேன் அவனை.'

இவ்வாறு ஞானரூபமான தேவனும் நாமரூபமான தேவனும் கரத்தோடு கரம் இணைத்து பக்தர்கள் குழாமுடன் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டனர்.

கைத்தாளமும், மிருதங்கமும், வீணையும் ஸுஸ்வரங்களை எழுப்ப,
நாத ஒலி அலைகள் விண்ணிலும் மண்ணிலும் எதிரொலிக்க,
தாளமிடும் கரஓசை விண்ணெங்கும் விரவிநிற்க,
எல்லையற்ற விண்ணுலகமே இழிந்து வந்ததுகாண்.

சாதுக்களின் இக்குழாமுடன் தான் புரிந்த தீர்த்தயாத்திரையைப்பற்றி நாமதேவர் தமது 'தீர்த்தாவளி' எனும் அபங்கங்களில் மிக விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

## நாமதேவரும் அற்புதங்களும்

நாமதேவரின் தீர்த்தாவளியில் உள்ள அபங்கங்கள் சுய சரிதையைப் போன்றதொரு தனிப் பாணியில் அமைந்துள்ளன. இவை தனிச் சிறப்புடையவையாகும். தலைமுறை தலைமுறையாக வாய்வழியே வழங்கி வந்ததால் இடையிடையே அவ்வப்போது நிறைய மாறுதல்களும் இடைசெருகல்களும் ஏற்பட்டிருக்கலாம். புதிய, புதிய விஷயங்கள் இணைக்கப்பட்டுமிருக்கலாம். இதனால் இதிலுள்ள ஒவ்வொரு அபங்கத்தையும் அத்தாட்சி பூர்வமானதாக ஏற்கவேண்டும் என்பதில்லை. இருப்பினும் இப்பாடல்களின் கவி நயம் இணையற்றதாகும். இவற்றில் சாந்தம், பக்தி, அற்புதம் போன்ற ரசங்கள் மிக அழகாக ஆளப்பட்டுள்ளன. இந்த அபங்கங்களை ஆதாரமாகக்கொண்டு சித்தரிக்கப்பட்டுள்ள நாமதேவரின் வாழ்க்கை வரலாறு, பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டதாயும், அற்புத சித்து விளையாட்டுகளால் நிறைந்ததாயும் உள்ளது. இருப்பினும்கூட இந்த அபங்கங்களிலிருந்தும் நாமதேவரின் சம காலத்தவர்களான சிலர் குறிப்பிட்டுள்ள ஒரு சில விஷயங்களிலிருந்தும் நாமதேவரின் வாழ்க்கையைப்பற்றி அறிவுபூர்வமாய், அனுமானிக்கக்கூடிய ஒரு தூல உருவம் நமக்குக் கிடைக்கலாம்.

நாமதேவர், ஞானதேவர் மற்றும் சாதுக்கள் குழுவினருடன் தீர்த்தயாத்திரை செய்தார். அவர் தமது தனித் தன்மையை, ஆளுமையை வளர்த்திக்கொள்ள இந்த யாத்திரை பெரிதும் உதவியாக இருந்தது. இதுவரை அவரது செயல்கள் அவர் அசையாத பக்திகொண்டிருந்த பண்டரிபுரத்தில் உறையும் விட்டலனைச்சுற்றி, ஒரு எல்லைக்கு உட்பட்டிருந்தது. இப்பொழுதோ, மகாராஷ்டிரத்தின் எல்லைக்கப்பாலும் விரிந்து பரந்ததொரு பக்திவயல் அவருக்குக் கிட்டியது. வடநாட்டின் பல்வேறு பிரதேசங்களை, தலங்களை, பக்த சாதுக்களின் குழுவினருடன் அவர் தரிசித்தார். பண்டரிபுரத்திலிருந்து புறப்பட்ட அவர் வடக்கே துவாரகை வரையிலும் சென்றார். பிரபாச க்ஷேத்திரத்திலிருந்து மார்வாட் பிரதேசத்திற்கும் சென்றார். அங்கு பிகானீருக்கருகே கோலாத்ஜீ என்றதொரு கிராமம். அங்கே கொடிய தண்ணீர்ப் பஞ்சம், வறட்சியான ஊர் அது. நாமதேவர் தனது பக்தியின் வலிமையினால் மிக மிக ஆழமான வறண்டதொரு கிணற்றின் அடியிலிருந்து நீரை வெளிக்கொணர்ந்தது மட்டுமல்ல, அங்கொரு வற்றாத நீரூற்றினையும் உண்டாக்கினார். இதனைக் கண்ட ஞானதேவர் அவரைத் துதிமலர்களால் அர்ச்சித்து இவ்வாறு போற்றினார்:

ரிஷி முனிவர், கந்தர்வ, பிரம்மாதி தேவர்கள்,
நாடுகின்ற, புகழ்பாடுகின்ற அப்பரம்பொருளை,
நீர் கொணர்ந்து நிறுத்தினீர் எம் கண்முன்னே,
ஞானதேவன் பணிகின்றான் உமது தாளடியில்.

'நாமதேவரின் கிணறு' என்று அந்த நீர்ச்சுனை இன்றளவும் வழங்கிவருகிறது. இதன்பின் இத்தலயாத்திரை வடக்கிலிருந்து தெற்கே ஆம்வடயா நாகநாத் வரை தொடர்ந்தது. அங்கே நாகநாதரின் தேவாலயத்திற்கெதிரே, நாமதேவரின் நாம சங்கீர்த்தனம் நடந்துகொண்டிருந்தது. அங்கிருந்த வைதிக அந்தணர்களுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் நாமதேவரை அங்கிருந்து ஆலயத்தின் பின்புறம் செல்லும்படி விரட்டிவிட்டனர். நாமதேவருடன்கூடவே பஜனை செய்துகொண்டிருந்தவர்கள் யாவரும் ஆலயத்தின் பின்புறத்துக்கு வந்துவிட்டனர். இறைவனின் திருநாமத்தைப் பாடிக்கொண்டிருந்த நாமதேவரோ பெறுதற்கரிய அந்த பிரம்மானந்தத்தில் லயித்து சமாதிநிலையை அடைந்துவிட்டிருந்தார், எனினும் பஜனையில் முன்பிருந்த ஆனந்தம் ஏற்படவில்லை. நாமதேவர் இதனைக் கவனித்தார். மிக உருக்கமாக அவர் இறைவனை வேண்டிக்கொண்டார். முன்பொருமுறை ஒரு சுல்தான் நாமதேவரைப் பிடித்துவரச் செய்து அவர் கண்முன்னே ஒரு பசுவைக் கொன்றான். நாமதேவரோ தனது பக்தியின் வலிமையினால் வெட்டுண்ட அப்பசுவை மீண்டும் உயிர்பெற்றெழச் செய்

தார். வற்றிய ஆழ்கிணற்றிலிருந்து நீரை மேலே கொணர்ந்தார். இவற்றையெல்லாம் நினைவுபடுத்தி நாமதேவர் சொல்லுகிறார்:

இன்று நின் உள்ளத்திலே ஏனிந்த கடுமை?
விட்டலா விரைந்து ஏன் நீ வரவில்லை?
எனக்கு நின்முகம் காட்டாது அமர்ந்துள்ள சிவபிரானே!
நின்னருள் தந்து கருணைபொங்கும் விழிகளால் எனைப்பார்!
உலகத்தின் நாயகனே, நின்னைச் சரண் அடைந்தேன் நான்.

நாமதேவரின் வாக்கிலிருந்து இப்பாடல் வெளிப்பட்டதுமே கிழக்கு முகமாகயிருந்த ஆலயம் மேற்கு முகமாகத் திரும்பிவிட்டது என ஒரு கதையில் கூறப்பட்டுள்ளது.

தற்சமயம் ஆவண்டயா நாகநாதரின் ஆலயம் மேற்கு திசையை நோக்கி நிற்பது இதனைத் தெளிவாக்குகின்றது. ஆனல் நாமதேவரின் வாழ்வில் இதனையும், மற்றும் அவர் நிகழ்த்தியதாகக் கூறப்படும் அற்புதங்கள் யாவற்றையும் அப்படியே உண்மையென ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. இத்தகைய அற்புதங்கள், முக்கியமானவை அல்ல. இத்தகைய கூற்றுக்களில் மூலக் கருத்தாக உள்ள குறியீடுகள் நாமதேவரின் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள மிக்க பயனுள்ளவையாகவும், முக்கியத்துவம் உள்ளதாகவும் இருக்கின்றன.

### ஞானதேவரின் பிரிவு

ஞானதிருஷ்டி பெற்ற நாமதேவன் திரும்பினன் பண்டரிபுரம்.
தலயாத்திரை முடித்த நாமதேவன் பண்டரி வந்தடைந்தான்.
தன்னுயிரினுமினிய விட்டலனைக் கண்டு மகிழ்ந்தான்.
என் உள்ளத்திலே குடிகொண்டிருந்தது அஞ்ஞானம்.
இதனலன்றோ சுற்ற வைத்தாய் ஊர் ஊராக.

இத்தலயாத்திரையின் காரணமாகத்தான் சாதுக்களின் கூட்டத்துடனும் குறிப்பாக ஞானேஸ்வரருடனும் நாமதேவருக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. 'சகா பிர்லா ஞானேஸ்வரர், நாமதேவ கா வஹ ப்யாரா ஹை' (தோழன் ஞானேஸ்வரன் கிடைத்தற்கரியவன், நாமதேவனுக்கு அவன் இனியவன்) என இவ்விருவருடைய நட்பைப்பற்றி ஜனபாய் வர்ணித்துள்ளாள். ஞானதேவர், நாமதேவரின் இந்நட்புறவு சிறிது காலத்திற்குத் தானிருந்தது. ஏன் எனில் தலயாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பிய சில தினங்களுக்குள்ளாகவே ஞானதேவர் தாம் சமாதி அடைய விரும்பும் எண்ணத்தை வெளியிட்டார். பாலயோகியும், யோகிகளின் தோழரும், ஞானிகளில் தலைசிறந்தவருமான ஞான

தேவர் சமாதி அடையப்போகிறார் என்றறிந்ததும் பக்தர்கள், சாதுக்கள் ஆனந்தியில் திரண்டனர்.

இந் நிகழ்ச்சியைச் சித்தரித்து நாமதேவர் பாடியுள்ள பாடல்கள் 'சமாதிகே அபங்' என்ற பெயருடன் மராத்தி இலக்கியத்தில் அழியா இடம் பெற்றுள்ளன. ஞானேஸ்வரர் சமாதி அடைந்த சம்பவத்தின் மிக நுட்பமான விவரங்கள்கூட இந்த அபங்கங்களில் மனத்தை ஈர்க்கும்படியாகத் தரப்பட்டுள்ளன. கருணை ரசம் நிரம்பிய பாடல்கள் இவை.

நாமா சொல்லுகிறான், 'கதிரவன் மறைந்துவிட்டான், ஞானத் தந்தை ஞானேஸ்வரன் சமாதி அடைந்துவிட்டான்.' இச்சம்பவம் நினைத்தும் பாராததொரு பாதிப்பை நாமதேவரிடம் ஏற்படுத்தியது. எறும்புகளின் புற்றுக்குத் தீயிட்டதுபோல் இச்சம்பவம் யாவருக்கும் மிகுந்த மனத்துயரை ஏற்படுத்தியது. ஆற்றிலுள்ள மீன்களுக்கு போதைதரும் திரவத்தை ஊட்டுவதால் அவை எவ்வாறு தத்தளிக்குமோ அப்படி மக்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. திடீரென பருந்தொன்று வானிலே பறந்து சென்று விட்டால் அதன் குஞ்சுகளுக்கு என்ன நிலை ஏற்படுமோ அந்நிலை ஏற்பட்டது.

நாமா உரைக்கின்றான், ஹே! இறைவா!
ஞான தேவனை இனி காண்பேனா கண்ணால்?
தோழன் பிரிந்து சென்றுவிட்டான், துயரில்
வாடுகின்றனர் சாதுக்கள், பக்தர்கள்
இனிப் பண்டரியில் வாழ்வதும் எப்படியோ? (248)

பண்டரிபுரத்தைவிட்டு தூரதேசம் செல்லவேண்டுமென்ற எண்ணம் நாமதேவரின் உள்ளத்தில் மெல்ல மெல்ல உறுதிப் படலாயிற்று.

விட்டோபா ராயா! கேள் இனியொன்று செய்வேன்.
பண்டரியைத் துறந்து நான் செல்வேன்.
தொலை தூரம் சென்று நான் வாழ்வேன்.
பக்தியில் நம்பிக்கையை நான் இழந்தேன்.
இறைவா! துயரத்தினால் வெதும்புகிறது உள்ளம்.
ஹே கேசவா! தாயும் தந்தையுமானவனே!
இப்பண்டரியை என்னுடன் கொண்டு செல்லுவேன்.
பீமா நதியின் மணலை, சாதுக்களின் இந்நகரத்தை
இம்மண்ணில் யாரெல்லாம் வாழ்ந்தனர் என,
பின்னொரு நாள் கூறுவர் மக்கள், என் இறைவா!

நாமதேவர் தனது இப்பிரதிக்ஞையை தமது பிற்கால வாழ்வில் நிரூபித்துவிட்டார் என்பது உண்மையாகும்.

**நாமதேவரின் பிற்கால வாழ்வு: இரண்டாவது தீர்த்தயாத்திரை**

ஞானதேவரின் மறைவுக்குப் பின்னர், சுமார் ஐம்பத்தியாறு, ஐம்பத்தி ஏழு வருடங்கள் நாமதேவர் வாழ்ந்தார். ஆனால் அவரது வாழ்வின் இந்தக் காலகட்டம் பற்றிய குறிப்புகள் ஏதும் அவரது மராத்தி அபங்கங்களில் கிடைக்கவில்லை. ஞானதேவர் சமாதி நிலையை எய்திய பின்னர் நாமதேவரின் வாழ்வில் வேறொரு திருப்பம் ஏற்பட்டது. ஞானதேவருடன் நாமதேவர் வடநாட்டில் எங்கெங்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்தாரோ அவற்றில் இன்று நாம் பஞ்சாப் எனக் கூறும் பிரதேசமும் இருந்தது. இம்முறை ஞானதேவர் இல்லாமல் தனியாகவே இத்தல யாத்திரை துவங்கியது. நாமதேவரின் வாழ்க்கையில் குறிப்பாக இக் காலகட்டம் பக்திமார்க்கத்தைப் பரப்ப அவர் தாமாக எடுத்துக்கொண்ட மறு பிறவியாகும்.

*தருவாய் பக்தியெனும் அன்பை*
*இறைவா! எனக்கின்னொரு பிறவி தா,*
*பக்தியெனும் அன்பு கிட்டிவிட்டால்*
*நானெங்கிருந்தாலும் அதுவே*
*எனக்குப் பண்டரியாகிவிடும். (259)*

நாமதேவர் பண்டரியிலிருந்து புறப்பட்டுவிட்டார். இறைவனின் விருப்பம் இதுவேபோலும். அவரது கால்கள் வடநாடெங்கும் சுற்றித் திரிந்தபின் தாமாகவே பஞ்சாபை நோக்கித் திரும்பின. தமது இரண்டாவது தலயாத்திரைபற்றிக் கூறுகையில் ''நான் என்னுடன் பண்டரியைக் கொண்டு செல்வேன், எங்கிருந்தாலும் அதுவே பண்டரி'' எனக்கூறி தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திய நாமதேவர் பஞ்சாபைச் சென்றடைந்ததும் அங்கு பக்த சாதுக்களின் கோஷ்டியொன்றை அமைத்தார். பஞ்சாபி மொழியில் உள்ள 'ஜன்ம சாதி' என்னும் நூலில் நாமதேவரின் வாழ்க்கை வரலாறு தரப்பட்டுள்ளது. அதிலுள்ள முக்கியமான சம்பவங்கள் மகாராஷ்டிரத்தில் வழங்கி வரும் வரலாற்றிலிருந்து அதிகம் வேறுபட்டவை அல்ல. நாமதேவரின் பிறந்த ஆண்டு, அவர் தலயாத்திரை மேற்கொண்ட வருடம் முதலிய முந்திய வரலாற்றில் (மராத்தி) வேறாக உள்ளது. இருப்பினும் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்ட பின்னர் இந்த இரு நாமதேவர்களும் ஒன்றே என்பது நிரூபணமாகியுள்ளது. அவரது ஆயுட் காலம் 1270-லிருந்து 1350 (கி.பி.) வரையாகும். இது பற்றிய கருத்து வேற்றுமை அதிகமில்லை.

பஞ்சாபில் நாமதேவர் சுமார் இருபதாண்டு காலம் வாழ்ந்தார். பண்டரியிலிருந்து புறப்பட்ட அவர் பக்தி மார்க்கத்தைப் பிரசாரம் செய்தவண்ணம் முதலில் துவாரகைக்குச் சென்றார்.

அங்கிருந்து மார்வாட், மதுரா, ஹரித்துவாரம் சென்று, முடிவில் பஞ்சாபை அடைந்தார். பஞ்சாபில் முதலில் அமிருதசரஸ் மாவட்டத்திலுள்ள, ''பூதபிண்டம்'' என்ற கிராமத்திற்குச் சென்றார். அங்கிருந்தபொழுது பஹோர்தாஸ் என்பவர் அவரது முதலாவது சீடரானார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இன்றைய குருதாஸ்பூர் மாவட்டத்திலுள்ள மரட் எனும் கிராமத்திற்கு வந்தார். இங்கிருந்து பட்டிவால் சென்றார். பட்டிவாலில் அவர் ஒரு குளத்தின் கரையிலே முகாமிட்டிருந்தார். இன்றும் அக்குளத்தை மக்கள் 'நாமியானு தாலாப்' என்றழைக்கின்றனர். நாமதேவரின் இரு சீடர்களான லட்டாவும், ஜல்லாவும் தங்களது பக்தர்களுடன் சுஷோவால், தாரிவால் எனும் கிராமங்களில் வசித்து வந்தனர்.

நாமதேவர் காட்டிலே தனிமையான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து தனது சாதனைகளில் ஈடுபட அங்கேயே வசிக்கலானார். ஆனால் அங்கு ஏராளமான சீடர்கள் கூடிவிட்டனர். அவரது ஆசிரமத்தைச் சுற்றிலும் கோமான் என்றதொரு புதிய கிராமம் உருவாகிவிட்டது. இங்குதான் 'கேஷோ' எனப்படும் புதிய சீடனொருவன் அவருக்குக் கிடைத்தான். அச்சமயம் தில்லியில் பாதுஷாவாக இருந்த ஆலம் எனும் அல்லாவுதீன், ஒரு ஆலயம் கட்டிக்கொள்ள நாமதேவருக்குப் பெரும்தொகை அளித்தான். பின்னால் பதினெட்டாவது நூற்றாண்டில் கோமானில் நாமதேவரின் நினைவாக ஒரு அழகிய ஆலயம் நிறுவப்பட்டது. நாமதேவரின் பிற்கால வாழ்வு, பஞ்சாபில் அவர் வாழ்ந்த நாட்கள் பற்றிய தகவல்கள் ஏதும் மராத்தியில் கிடைக்கவில்லை. எனினும் வடநாட்டில் அவர் வாழ்ந்தது, பக்தியைப் பிரசாரம் செய்தது பற்றிய பல குறிப்புகள், சான்றுகள் பஞ்சாபி மொழியில் காணப்படுகின்றன. நாமதேவரின் சீடர்களில் விஷ்ணு ஸ்வாமி, பஹோர்தாஸ், லட்டா, ஜல்லா, கேஷோம் கலாதாரி போன்றவர்களின் படைப்புக்கள் பிரசித்திப் பெற்றவை. பக்தி மார்க்கத்தைப் பரப்பிய அக்காலத்தின் பிற்பகுதியிலே பல பக்தர்கள், சாதுக்கள் தோன்றினர். அவர்களில் ராமானந்தர், கபீர், குருநானக், ரைதாஸ், பீபா முதலிய பக்த கவிகள் தங்களது கவிதைப் பாடல்களிலே நாமதேவரைப்பற்றி மிகுந்த மரியாதையுடன் குறிப்பிட்டுள்ளனர்.

### ஆதிகிரந்தத்தில் நாமதேவர்

நாமதேவரின் படைப்பாற்றலுக்கு ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாக விளங்குவது சீக்கிய சம்பிரதாயத்தின் முதன் நூலான 'ஆதிகிரந்தத்தில்' அவரது 61 பாடல்கள் இடம்பெற்று இருப்பது தான் எனக் கூறலாம். நாமதேவருக்கு இருநூறு ஆண்டுகளுக்குப்

பின்னர் நானக் தோன்றினர். இவர் ஏற்படுத்திய சீக்கிய சம்பிரதாயத்தின் முக்கியமான மெய்ஞ்ஞானத் தத்துவங்களை, நானக் 'ஜபுஜி'யின் மூல மந்திரத்தில் கூறியுள்ளார்:

'இக் ஓங்கார், சத் நாம், கர்தாபுரக்
நிர்பயலூ, நிர்வைர், அகால, மூரத்,
அஜூனி—சே—பங், குர்ப்ரஷாத்.

(கருத்து)

ஓம் என்னும் பிரணவ மந்திரம், அது ஒன்றே பரம தத்துவம்
அது சத்தியமானது, நித்தியமானது, அதுவே படைப்பின் கர்த்தா,
அது பயமற்றது, பகைமையற்றது, காலத்திற்கும் அப்பாற் பட்டது.
அது பிறவியற்றது, அது சுயம்புவானது, அதுவே இறைவன்.
அதனைக் குருவின் அருளினால்தான் பெற இயலும்.

குருநானக்கின் மூல மந்திரமான இது, நாமதேவரின் உபதேச மானது, பிற மொழியொன்றில் கிட்டத்தட்ட மொழிபெயர்க்கப் பட்டதொன்றாகும். குருநானக்கின் உபதேச மொழிகளிலும், ஆதிகிரந்தத்திலும், இறைவனின் நாமத்திற்கும், அவன் திரு நாமத்தைத் தியானம் செய்வதற்கும் முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. நாம மகிமைக்கு அளிக்கப்பட்டுள்ள முதன்மையான இடம், முக்கியமாக நாமதேவரிடமிருந்து பெற்றுள்ள தூண்டுதல், அதுவே இதன் மூல ஊற்று என அனுமானிக்கலாம்.

ஒருசில ஆசிரியர்களின் கூற்றுப்படி, ஞானதேவரின் காலத் தைச் சார்ந்தவரும், மராத்தி மொழியில் அபங்கங்களை இயற்றிய வருமான பக்த நாமதேவரும், ஆதிகிரந்தத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை இயற்றிய நாமதேவரும் ஒருவரல்ல, வெவ்வேறான வர்கள் என்பதாகும். ஏன் எனில் இவ்விருவரும் உபாசித்து வழி பட்ட தெய்வங்கள் வெவ்வேறானவை. இருவரின் மொழி, நடை இரண்டும் வேறுபட்டவை, இவர்களது வாழ்க்கை வரலாறும் வேறானது. இந்த ஆட்சேபங்கள் யாவும் இப்பொழுது வலு விழந்தவையாகிவிட்டன. ஆதிகிரந்தத்திலுள்ள பாடல்கள், மராத்தி அபங்கங்கள் இரண்டிலுமே நாமதேவர் இறைவனைப் பல்வேறு நாமங்களில் குறிப்பிட்டுள்ளார். ராம், நாராயண், சிவன், என்பதோடு விட்டலன் என்ற பெயரும் இரண்டிலும் காணப்படுகிறது.

''எங்கு நோக்கினும் அங்குள்ளான் விடோபா,
உள்ளும், புறமும், எங்கு காணினும் அவனே உள்ளான்''

என் மராத்தி அபங்கத்தில் கூறியுள்ளார். ஆதிகிரந்தத்திலுள்ள பாடலில்,

'ஈபைவிட்டலு, உமைம் பிட்டலு, பீட்டல்பினு சம்சார் நஹிம்;
தான தனந்தரி நாமா ப்ரணவே பூரி ரஹிவுதூ சரபயஹி.'

இவ்விரண்டு பாடலும் ஒன்று மற்றொன்றின் மொழிபெயர்ப்பாகவே உள்ளது. நாமதேவரின் மராத்திய அபங்கங்களுக்கும், ஆதிகிரந்தத்திலுள்ள பாடல்களின் மொழிக்கும் வேறுபாடு உள்ளது என்ற ஆட்சேபமும்கூட உண்மையை ஆதாரமாகக் கொண்டுள்ளது அல்ல. ஏன் எனில் அவரது உபதேசங்களைக் கொண்ட அபங்கங்கள் ஆதிகிரந்தத்தில் கிட்டத்தட்ட மொழியாக்கம் செய்யப்பட்டவையாகவே விளங்குகின்றன. உதாரணமாக,

பட்டம் பறக்கிறது வான்வெளியில், தொலைதூரத்தில்
கரத்திலே அதன் கயிறு, ஆயினும் நினைவென்னவோ
பட்டத்தின் மீதுதான்
நீர்க்குடத்தின்மீது குடம் வைத்துச் செல்லுகிறாள் கூஜரி
இரு கரமும் காலி, ஆயினும் நினைவென்னவோ குடத்தின்
மீதுதான்.

இந்த அபங்கத்துடன் கீழே தரப்பட்டுள்ள பாடலின் வரிகளை ஒத்திட்டுப் பாருங்கள்:

ஆனிலே காகத் காடிலேகுடி. ஆகாசமத்யே பரமீயலே
பஞ்ச ஜனுசிவுபாத் பதாவா. சிதுசு டோரி ராஷி அலே
ஆனிலே கும்ப, பராயிலே உதக. ராஜகுமாரி புரந்தரியே
ஹசத, விநோத, விசார் கரதிஹை, சிது து காகரி ராஷிஅலே.

ஆதிகிரந்தத்திலுள்ள நாமதேவரின் பாடல்கள் பற்றி ஒரு விஷயம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இப்பாடல்கள் இன்று நாம் எதனைப் பஞ்சாபி மொழி எனக் கூறுகின்றோமோ அம்மொழியில் இயற்றப்பட்டவை அல்ல. ஆதிகிரந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களின் மொழி பெரும்பாலும் 'சதுக்கடிபாஷா' அதாவது சாதுக்களின் மொழி எனப்படும் மக்களின் பேச்சு வழக்கில் வழங்கி வந்ததொரு கலப்படமான இந்திய மொழியாகும். ஒரு கவிஞன் எந்த மொழியைப் பேசுகிறவனாக இருக்கிறானோ அம்மொழியின் பாதிப்பு அவனது பாடல்களில் விசேஷமாகக் காணப்படும் என்பதுதான் விஷயம். அது வங்கத்தின் ஜயதேவராக இருப்பினும் சரி, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த, கபீராக, மகாராஷ்டிரத்தின் நாமதேவராக இருப்பினும் சரி, அவர்கள் தங்களது பாடல்களை, படைப்புக்களை இந்த மக்கள்

மொழியிலே இயற்றியுள்ளனர். ஏனைய மொழிகளைப்போலவே இந்தி மொழிச் சொற்களும் இதில் கலந்துள்ளன. இந்த சாதுக் களின் மொழி. அதாவது பாமர மக்களுக்கும் புரியும்படியான கலப்பு மொழியானது. பாரத நாடு முழுமைக்கும் ஒரு தார்மீக, கலாச்சாரத் தொடர்பு மொழியாக விளங்கியது. சாதுக்களின் மொழியில் (சதுக்கடி பாஷா) நாமதேவர் இயற்றியுள்ள பாடல் களில் மராத்தி, இன்றைய பஞ்சாபி இவ்விரண்டின் மதுரமான சேர்க்கையைக் காண்கின்றோம். மராத்திய பதங்களுக்குரிய இசை நயம் ஆதிகிரந்தத்திலுள்ள பாடல்களிலும் உள்ளது. இதுமட்டு மல்ல, இப்பாடல்கள் வெவ்வேறு ராகங்களில் இயற்றப்பட்டுள்ளன.

நாமதேவர் தனது குருவான விசோபா கேசரைச் சந்தித்தது பற்றிய பாடல் முன்பு தரப்பட்டுள்ளது. ஆதிகிரந்தத்திலுள்ள இப் பாடலில் நாமதேவர் விசோபா கேசரிடமிருந்து பெற்ற அருளாசி யைப் பற்றி வர்ணித்துள்ளார்.

'கேசர் பூசர் துளசி மாலா
குரு பர்சாதி பாவுஆ.'

(விசோபா கேசரிடமிருந்து துளசி மாலையைக் குருவின் பிரசாதமாக நான் பெற்றேன்.)

விசோபா கேசர் இறைவனின் சிலாவடிவத்தின்மீது தனது காலை வைத்திருந்த கதை சில மாறுதல்களுடன் நானக்கின் பெய ராலும் வழங்கி வருகிறது. குருநானக் மக்காவிற்குச் சென்றார். அங்கு முல்லாவுடன் ஒரு சர்ச்சை ஏற்பட்டபொழுது இறைவன் எங்கும் நிறைந்தவன் என்பதை நானக் தனது இச்செய்கையின் மூலம் அறிவுறுத்தினர். இக்கதை பஞ்சாபில் பிரசித்திப் பெற்றது.

### நாமதேவரின் சமாதி

நாமதேவர் பஞ்சாபில் சென்று வசித்ததைப் பற்றி மராத்திய பக்த துறவிகள் குறிப்பிடவில்லை என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்று நாமதேவரைப் பற்றி அக்காலத்தில் மகா ராஷ்டிரத்திற்கு நிறையத் தகவல்கள் கிடைக்காமலிருந்திருக்க லாம். நாமதேவர் தமது பக்தி மார்க்கத்தைப் பற்றியும், நாம மகிமை பற்றியும் வட நாட்டில் அதிகம் பிரசாரம் செய்தார். அங்கும் அவர் நிலையாக ஓரிடத்தில் அதிக நாட்கள் தங்கவில்லை. தவிரவும் அவரது உள் மனம் பண்டரிநாதனையே நினைத்து பண்டரிபுரத்தையே சுற்றிக்கொண்டிருந்திருக்கலாம். விட்டலனை தரிசிக்கும் ஆவல் அவரது உள்ளத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்தது.

காணவேண்டுமென்ற ஆவல், தரிசிக்க வேண்டுமென்ற ஆசை
நிலையாக ஓரிடத்தில் மனம் நிலைகொள்ளவில்லை.
காண்பவரிடமெல்லாம் இதுவே அவன் கேள்வி.
பண்டரிநாதன் எனை ஏன் அழைத்துக்கொள்ளவில்லை?
வாரகரி தோழர்கள் பண்டரி செல்லுகின்றனர்
அவர்களிடம் நான் சேதி சொல்லி அனுப்புவேன்
நாமதேவன் ஓய்ந்துவிட்டான், உயிர் ஊசலாடுகிறது,
இரவும் பகலும் உன்னையே தியானிக்கிருன் அவன். (1259)

நாமதேவர் தமது கடைசி காலத்தில் பண்டரி செல்லவேண்டுமென்ற தமது உள்ளக்கிடக்கையை, ஆசையை வெளியிட்டார். அவரைப் பிரியவேண்டுமே எனச் சீடர்கள் குழாம் வருந்தியது. முடிவில் நாமதேவர் பண்டரிபுரம் சென்ருர். அங்கேயே 1350-ம் ஆண்டு பண்டரிநாதனின் ஆலயத்தின் முன்னே சமாதிநிலையில் அமர்ந்து தனது உடலைத் துறந்தார். பர்பணி மாவட்டத்தில் நரசி என்னுமிடத்தில் க்யாது அல்லது க்யாட் எனப்படும் ஆற்றின் கரையிலே நாமதேவர் பெயரில் ஒரு சமாதி உள்ளது. ஆனுல் அது பக்த நாமதேவரின் சமாதி அல்ல. கோமானில்கூட நாமதேவரின் பெயரில் ஒரு சமாதியுள்ளது. அங்கு பெரியதொரு ஆலிலையில் பொறிக்கப்பட்டுள்ள நாமதேவரின் சித்திரம் ஒன்றும் வைக்கப் பட்டுள்ளது. இங்குள்ள ஆலயத்தின் ஒரு அறையில் நாமதேவர் தமது உடலில் ஒரு சால்வையைப் போர்த்துக்கொண்டு படுத்து விட்டார் என்றும், மூன்று நாட்கள் வரை எவரும் உள்ளே வரக் கூடாதென்று தனது சீடர்களுக்கு உத்தரவிட்டாரென்றும், மூன்று நாட்களுக்குப் பிறகு சீடர்கள் கதவைத் திறந்து பார்க்கும்போது சடலம்தானிருந்தது என்றும் கூறப்படுகின்றது. நாமதேவர் தமது தூலதேகத்தை கோமானில் விட்டுவிட்டு சூட்சும சரீரத்தை பண்டரிபுரத்திற்கு எடுத்துச் சென்ருர் என்ற இக்கதை 'ஜமை சாகி'யில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனுல் இவை யாவற்றையும் யோசித்துப் பார்க்கும்போது அவர் சமாதி அடைந்தது பண்டரி புரத்தில்தான். கோமானில் அவரது உடை, ஆடைகள் நினைவுச் சின்னங்களாக உள்ளன என ஆராய்ச்சியாளர்கள் கூறும் முடிவு பொருத்தமானதாக, சரியானதாகத் தோன்றுகிறது.

# படைப்பாற்றலும் மெய்ஞ்ஞானமும்

'ஞானதேவன் அடித்தளமிட்டு, ஆலயம் எழுப்பினன்.
நாமதேவன் அவனது கிங்கரன் அதனை விரிவாக்கினன்.'

—பக்த பஹிணபாய்

மனத்துறவு கொண்ட பக்தர்கள் பலருடைய அருளினல் மகாராஷ்டிரத்தில் பாகவத சம்பிரதாயம் அதாவது வாரகரி சம்பிரதாயத்திற்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. இந்த அடித்தளத்தை அமைத்து பாகவத தர்மமெனும் ஆலயத்தை நிர்மாணித்த பெருமை ஞானதேவரையே சாரும். இப்பாகவத தர்மத்தை எங்கும் பரப்பிய பெருமை அவரது கிங்கரனை நாமதேவரையே சாரும். கிங்கரர் என்ற சொல்லுக்கு 'கிம் கரோமி?' நானென்ன செய்யட்டும்? என்பது பொருள். அதாவது செயலாற்றும் துடிப்புடைய ஒருவன் என்பது இச்சொல்லின் பொருள். பாகவத தர்மமெனும் தேவாலயத்தில் நெடுங்காலம் வரை இடைவிடாது தன்னலமற்ற சேவை புரிந்தவர் நாமதேவர். இதனல் தான் அவரால் அப்பாகவத தருமத்தை எங்கும் பரப்ப முடிந்தது.

எந்தவொரு ஸ்தாபனத்தையோ, சம்பிரதாயத்தையோ உருவாக்க முற்படும்போது அதற்குப் பலருடைய உதவியுடன் அஸ்திவாரமிடப்படுகிறது. ஆனல் நாளடைவில் அது விரிந்து, பரந்து கம்பீரமானதொரு தோற்றத்தைப் பெற்ற பின்னர், இதன் மூல கர்த்தா யார்? இதற்கு வித்திட்டவர் எவர் என்பதுபற்றி மக்களிடையே சர்ச்சை எழுகின்றது. பாகவத தர்மத்தை, அதாவது வாரகரி சம்பிரதாயத்தை மகாராஷ்டிரத்தில் தோற்றுவித்த பெருமையை யாருக்கு அளிப்பது என்பது பற்றிய விவாதம் எழுந்துள்ளது. உண்மையில் பாகவத தர்மமெனும் ஆலயத்தின் பொற்கலசமெனக் கருதப்படும் பக்த துகாராமின் சிஷ்யையான பஹிணபாய், இப்பெருமைக்குரியவர்களை மேலே கொடுத்துள்ள அபங்கத்தில் மிக நுட்பமாக, திறமையுடன் வெளியிட்டிருக்கிருள். இதனையே நாம் ஆதாரமாகக் கொள்ளவேண்டும். இக்கருத்தை மாற்றிக்கொள்ளும்படியாக இன்றுவரை வேறு புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகத் தெரியவில்லை.

### மெய்ஞ்ஞான ஆதாரங்கள்

ஞானதேவர் பாகவத சம்பிரதாயத்திற்கு அஸ்திவாரம் அமைத்தார் என்பதை, அவர் இத்தர்மத்தின் மூல தத்துவத்தைத்

தனது ஞானேஸ்வரியில் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார் என்ற பொருளில் சரி என ஏற்றுக்கொள்ளவேண்டும். உண்மையில் ஞானேஸ்வரருக்கும் முன்னரே, பாகவத தர்மத்தின் இம்மூலக் கருத்து, புராதன பாரதத்தின் வேதாந்த நூல்களிலே காணக் கிடைக்கிறது. இதனை ஞானேஸ்வரரின் 'ஓவி' சந்தக் கவியில் கூறுகிறார்:

உயிரினம் யாவுமே இறைவனுருமே! அறியுங்கள்!
இதுவே எனது பக்தியோகமென அறியுங்கள்!

சகல பூதங்களிலும், எங்கும், யாவிலும் இறைவனைக் காணுதல் என்பதுதான் பாகவத தருமத்தின் சாரமாகும்.

நாமதேவரின் மெய்ஞ்ஞானக் கருத்துக்கள் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தால், இப்பாகவத தருமத்தின் உட்பொருளை அவர் எவ்வாறு உணர்ந்தறிந்திருந்தார் என்பதைக் கீழே தரப்பட்டிருக்கும் பாடலிலிருந்து அறிந்துகொள்ளமுடியும்.

'உலக யாவிலும் அந்தர்யாமியாக, நீக்கமற நிறைந்திருப்பது பிரம்மம், அதுவே சத்தியம். மேலெழுந்த வாரியாக, தென்படும் வெவ்வேறான தோற்றங்கள் பொய்யானவை. இதுவே வேதங்களின் மூலக் கருத்தாகும். வேதங்களினால்கூட இம்மூலத் தத்துவத்தை முழுமையாகக் கண்டறியக்கூடவில்லை. பிரம்மனுக்கு எவ்விதமான பேதமுமில்லை. அது ஒன்றேதான் யாவும்.' (1607)

''வேதங்களால் அறியப்படாதது அது.
ஆயிரம் நா கொண்ட சேஷ நாகத்தினால்கூட வர்ணிக்க
இயலாதது. சேஷ நாகம் அதனை வர்ணிக்க முற்பட்டு
செயலிழந்து போயிற்று. அது எல்லையற்றது என்கிறான்
நாமா.'? (383)

வேதங்களினாலும் அறியப்படாத, ஆயிரம் நாவு படைத்த சேஷ நாகத்தினாலும் வர்ணிக்க இயலாத அந்தப் பிரம்மத்தை அறியும் உபாயம் எது?

''வேதங்களுக்கும், ஞானங்களுக்கும் எட்டாதது.
புராணங்களால் புரிந்து கொள்ளப்பட முடியாதது.
வேதாந்த மெய்ஞ்ஞான விளக்கங்களுக்குப் புலனாகாதது.
இப் பரம்பொருள் புண்டலீகனின்பாலுள்ள அன்பினால்
பண்டரியின் மணற்கரையில் நின்றுகொண்டிருப்பதை
நான் எனது ஊனக் கண்களினால் பிரத்யட்சமாகக் கண்டேன்.
நான் அவனைப் போற்றித் துதிக்கத் துவங்கியதும் எனது பாடல்
களிலே அவன் எனக்குக் கிடைத்தான். 'நாமதேவரின் கூற்றுப்படி
'கேசவனின் மலரடியை அடைவதற்கான காரணம்
அவனையடைய வேண்டுமென்ற தவிப்பும் ஆவலும்தான்.'' (390)

**பற்றற்ற துறவு வாழ்வு:**

பிரம்மம் எவ்வாறு சத்தியமானதோ, அழிவற்றதோ, அவ்வாறே இவ்வுலகம் பொய்யானது, அழியக்கூடியது. 'பொய்யான மாயா ஜாலமிது, கானல் நீர் போன்றது! எனக் கூறிய நாமதேவர் உலக வாழ்வின் நிலையாமையை எடுத்துரைக்கின்றார்.

'நீரிலே எழும் குமிழிகள் போன்று
கணத்திலே தோன்றி மறையும் வாழ்வு இது.
மந்திரவாதியின் மாயா ஜாலம் போல்
இவ்வுலக வாழ்வு கணநேர விளையாட்டு.
முடிவில் கைக்கு எட்டுவது எதுவுமில்லை.
நாமா உரைக்கின்றான் எதுவும் உண்மையில்லை இங்கு
கண நேரத்திற்குத்தான் இவை யாவும் உண்மை.' (1670)

கணநேரத்திய இந்நிலையற்ற வாழ்வு, உடைந்த சட்டியைப் போல் புறக்கணிக்க வேண்டிய தொன்றாகும்.

'உடைந்த சட்டி இது, இன்னும் உடைவதற்கென்ன உள்ளது?
உலகாயத வாழ்வும், இதுபோன்றதே எனக் கொள்வீர்!
கனவில் கண்டதை நினைவில் சொல்வதுபோல்
உலகபந்தம், பிராரப்தம், இது நமக்கு,
நாமா சொல்லுகிறான்—இதுதான் வாழ்வென்பதை.
அறியுங்கள், விரிந்து பரந்து கிடக்கும் இது வீணானது! (1675)

அப்படி என்றால் இந்த உலகத்தில் மனிதனுடைய கடமை யாது? 84 லக்ஷம் பிறவி எடுத்தபின், முடிவில் ஒரு முறை பெறக்கூடிய இந்த மானிட வாழ்வில் மெய்ஞ்ஞான அறிவு கிட்டவில்லை என்றால், ஆத்ம ஞானத்தத்துவத்தைப் புரிந்துகொள்ள இயலவில்லை என்றால் மீண்டும் மீண்டும் இப்பிறவிச் சுழலில் சுழன்று கொண்டே அல்லவா இருக்க நேரிடும்?

'மனித பிறவிதான் இறுதியானது
இம்மர்மத்தை அறியாதவன் சுழலில் சிக்குகிறான்.
பிறவியைப் புரிந்துகொண்டு உன்னை நீ அறிவாயாக,
உலக இன்பத்தில் முற்றும் உனை இழந்துவிடாதே!
உலகத்தில் வாழ்ந்தாலும், பற்றின்றி நீ வாழ்வாயாக!
இறைவனின் நாமத்தை இடைவிடாமல் பாடு!
நாமா சொல்லுகிறான்—விட்டலன் தன் பக்தனின்
வாயிலிலே நிற்பான், கரத்திலே சுதர்சன சக்கரத்துடன். (1700)

'விரிந்து பரந்திருக்கும் இவ்வுலகம் பொய்யானது,
இம் மாயை எங்கும் விரவி நின்று உன்னைக் கவிழ்ந்திருக்கிறது.
இம் மாயையிலே என்னை முழ்கடித்து, இறைவா!
எனை நீ இறைவனின் துரோகியாக எப்படிச் செய்தாய்?

மேருவின் கழுத்திலே தோல் பையைக் கட்டி
அனுதரக்ஷகனே! நீ வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாய்!
நாமா சொல்லுகிறான்—இறைவா! உனது மாயை புரிந்து
விட்டது எனக்கு இனி நானே உபாயம் தேடிக் கொள்வேன்.'
(1150)

உலக மாயையில் உழலும் மனிதன் ஈசுவர துரோகியாகின்றான். இறைவனின் இம்மாயையிலிருந்து மீள நாமதேவர் கூறும் வழி முறைகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

எனக்குப் புரிந்துவிட்டது இதன் உட்பொருள்; பாகவத தருமத்தை இனி மேற்கொள்வேன்.

உலகத்தின் பொய்மையையும், துன்பத்தையும் வெல்வதற்கான உபாயங்கள், வழிமுறைகள்தான் வாழ்வில் நமது தலையாய கடமை. பாகவத தருமத்தின் உட்பொருளும் இதுவே.

'கண்டு கொண்டேன் மெய்ப்பொருளை, கொள்வேன் பாகவத தருமத்தை!
புதுப்பிறவி இது கிட்டி விட்டது, பேச்செல்லாம் நான் மறந்தேன்
அன்பிற் கடிமை இவன், வைகுந்தத்தைத் துறந்தன்றோ வந்துள்ளான்.
சத்சங்கமதை நாடுவோம், நெஞ்சோடுத் தழுவிக் கொள்வோம்!
நாமா உரைக்கின்றான்—எப்படி அவனைப் பிணைப்போம்?
நமது நெஞ்சில் உள்ளன அவன் திருவடிகள்.' (1152)

இறைவன் பாசத்திற்கும் நேசத்திற்கும் அடிமை. அன்புப் பசி கொண்டவன் அவன். பக்தர்களுக்காகவே வைகுண்டத்தைத் துறந்து வந்துள்ளான். சாதுக்களின் சகவாசத்தினால் சத்சங்கத்தின் மூலம் அவனை அடையலாம். அவனை நமது உள்ளத்தில், அந்தராத்மாவில் உள்ளடக்கி வைத்துக்கொள்ளலாம். இதுதான் பாகவத தருமத்தின் ரகசியம்.

பாகவத தர்மமென நாமதேவர் கூறுவதுதான் மகாராஷ்டிரத்தின் புகழ்பெற்ற வாரகரி சம்பிரதாயமாகும். 'வாரகரி' என்றால் ஆவணி, கார்த்திகை மாதங்களில் ஏகாதசி அன்றும் மற்ற புண்ணிய காலங்களிலும் ஆசார நியமப்படி பண்டரிபுரத்திற்கும் புனித யாத்திரை செய்வது. அதாவது 'வாரி' செய்யும் பாகவத பக்தர்கள் என்ற பொருள்படும். 'பண்டரிக்குப் புனித யாத்திரையை எவர் நியமப்படி மேற்கொண்டுள்ளனரோ அவரது திருவடியின் தூசி என்மீது படட்டும்' என்றும், 'பண்டரிக்கு' ''வாரி'' செய்யும் நியமத்தை விடாத குடும்பத்தினர் பாக்கியசாலிகள் என நாமா உரைக்கின்றான்' எனவும் வாரகரி நித்திய யாத்திரை செய்பவர்

களைப் பற்றி மிகுந்த மரியாதையுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. 'வாரிகர்' பண்டரியின் வீரர்கள் என்று பக்தியுடன் வர்ணித்துள்ளனர்.

'பேரின்பம் இது, இதில் திளைக்கும் இவ்வையகம் பாக்கியசாலி,
பாப தாபங்களுக் கெல்லாம் இதுவொரு மாற்றம்.
பரம பிதாவைநாடிச் செல்லும் வைணவர்களைக் கண்டு
சுவர்க்கத்தில் கொடி ஏற்றுகின்றனர் தேவர்கள்.
வந்துவிட்டனர் ஹரிபக்தர்கள் என்கின்றனர்
பண்டரியின் 'வீரவாரிகர்' களின்
பாததூளி வானத்திலே பறக்கின்றது,
பிரம்மாதி தேவர்கள் கூடிநிற்கின்றனர்,
நான், நீ என முந்திக்கொண்டு!
பாததூளி என் சிரத்திலே படட்டும் என்கின்றனர்,
பக்தியும் ப்ரேமையும் அங்கமெல்லாம் விரவிநிற்க,
நாணத்தைத் துறந்து மெய்மறந் தாடுகின்றனர் ஹரிபக்தர்கள்!
பேரானந் தத்திலே மூழ்கி ஆனந்தக் கூத்தாடுகின்றனர்,
இதயத்திலே கண்ணனின் திருவுருவம் பதிந்திருக்க
எங்கு நோக்கினும், யாவிலும் அவனையே காண்கின்றனர்
தாமரைபோன்ற விழிகளிலிருந்து அருவியாய் நீர் பொழிகின்றது
ஒவ்வொரு மயிர்க்காலிலும் சாத்வீகபக்தி புல்லரிக்கின்றது.
விட்டலனின் திருநாமத்தைக் கூவுகின்றனர் உரக்க.
மயில் தோகையின் 'கருடடகே'
சிரத்தை அது அலங்கரிக்கின்றது,
கேசவனின் நாமத்திற்கு இவ்வுடலைத் துணியாக்கி
ஹரி பக்தர்களுக்கு நடைபாவாடை விரித்துள்ளேன். (899)

நாமதேவர் தனது உடலை 'துலிஞ' பட்டுத் துணியாக்கி மெத்தையாக்கி பக்தர்கள் நடந்துவர நடைபாவாடை விரிக்கிறேன் எனக் கூறுவது வாரிகர்களின் பால் அவருள்ளத்திலேயிருந்த பேரன்பை வெளிப்படுத்துகிறது. சாதுக்கள், பக்தர்களின் மகிமையை வர்ணிக்கும்போது நாமதேவர் அடிக்கடித் தம்மையே மறந்து லயித்துவிடுகிறார். 'சாதுக்களின் மகிமையை, அதன் எல்லையைக் கண்டவர் யார்? பிரம்மாவினாலேயே அதனை வருணிக்க இயலவில்லை, அவனது நாவும் களைத்துவிட்டது' என ஒருமுறை கூறுகின்றார் நாமதேவர்.

'கொடிகள், காற்சதங்கைகள், மயிற்பீலிகளால்
அலங்கரித்துக்கொண்ட வைணவர்கள் வருகின்றனர்!
வைணவர்கள் இக்கூட்டத்தைக் கண்டதுமே
பயந்தோடுகிறது கலிகாலம் திகிலுற்று!' (900)

இவ்வாறு நாமதேவர் வாரியை வர்ணித்துள்ளார்.

வாரிகர் என்பதன் பொருள் வைணவன். வைணவனாக எப்படி ஆவது என்பதை நாமதேவரின் சொற்களிலே பார்க்கலாம்.

'வேதாத்யயன் கர்னேசே வைதிக்ஹோகே
பர்வைஷ்ணவ நஹிம்ஹோ கே, அரே ஜன்ஹோ'

என்று தொடங்கும் பாடலின் கருத்து இது.

'வேத அத்யயனம் செய்வதால் வைதிகனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய், இதனை அறிந்துகொள்!
புராணம் சொல்லுவதால் பௌராணிகனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய், இதனை அறிந்துகொள்!
இசை பாடினால் இசைவாணனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய், இதனைப் புரிந்துகொள்!
கர்மானுஷ்டானங்களைச் செய்வதால் சடங்குகளைச் செய்பவனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய், இதனைப் புரிந்துகொள்!
யாக யக்ஞங்கள் செய்தால் யக்ஞபுருஷனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய், இதனைப் புரிந்துகொள்!
தலயாத்திரை புரிந்தால் தீர்த்தயாத்திரிகனாவாய்,
ஆனால் வைணவனாகமாட்டாய் இதனைப் புரிந்துகொள்!
நாமா உரைக்கின்றான்—இறைவனின் நாமத்தைக் கூறினால்
நீ வைணவனாவாய் இதனைப் புரிந்துகொள்!' (1565)

அதாவது இறைவனின் நாமத்தை இடைவிடாமல் ஸ்மரித்துக் கொண்டிருப்பதுதான் வைணவர்களுக்குரிய லட்சணம்.

'வைணவனின் இல்லத்தில் அதிதியானால்
நாமமெனும் 'ஒகர்' இயற்றி,
கரத்திலே தட்டெடுத்து வயிறு நிரம்பச்சாப்பிடு!
ஆனந்தத்துடன் ராமநாமத்தைச் சேர்ந்துபாடு!
தீயவரிடம் இதனைக்கூறாதே, அலட்சியம் செய்வார்கள்,
நாமா உரைக்கிறான்—தனிமையிலமர்ந்து துதிசெய்.' (906)

வைணவர்களின் இல்லத்தில் விருந்தினருக்கு உபசாரம் இறை நாமமெனும் அன்னத்தினால்தான் நடைபெறும். ஆனால் இந்த நாமஸ்மரணையைத் தனிமையில் செய்யவேண்டும். தீயவர்களின் அபசகுனமான பாதங்கள் அங்கு பட்டால் காலினால் மிதிபட்டு விடும் என்ற அச்சம் உள்ளது. அவர்களது கண்பட்டுவிடலாம் என்ற பயமுள்ளது.

'சாதுக்களின் முன்னே நாமாவைக் கூறு!
சத்சங்கத்தில் இன்பம் பெருகிவரும்.
அதிகம் தெரிந்தவனாகக் காட்டிக்கொள்ளாதே!

*அன்புக்கு திருஷ்டிப்பட்டு விடும் இதனால்.*
*நாமா உரைக்கின்றான்—சத்சங்கத்தில்*
*சித்தத்திற்குத்தானே நிவிருத்தி கிட்டிவிடும்.' (932)*

நல்லோரின் உறவில் மனிதன் மேம்படுகின்றான். நற்குண இயல்புகளைச் சேகரித்துக்கொள்கிறான். தீய பழக்கங்களிலிருந்து விடுபடுகின்றான். தீயவர்களின் உறவைத் துண்டித்துவிடு. நல்லவர்களின் உறவை நாடினால் மீட்சி தானே ஏற்பட்டுவிடும். இது போன்ற கருத்துக்களை நாமதேவர் பல இடங்களில் வெளியிட்டுள்ளார்.

### நாமதேவரால் கூறப்படும் நாம மகிமை

நாமதேவரின் சித்தாந்தங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது நாம மகிமைதான். நாம ஜபத்தின் மகிமையையும் மேன்மையையும் நாமதேவர் வலியுறுத்தியிருப்பதுபோல் வேறெந்த பக்த துறவியும் பாடியிருக்கமுடியாது.

இவ்விஷயம் குறித்து கிட்டத்தட்ட இருநூறு அபங்கங்களை அவர் இயற்றியுள்ளார். அவற்றில் இறைவனின் திருநாம சங்கீர்த்தனத்தின் மகிமையை சாங்கோபாங்கமாக வர்ணித்துள்ளார்:

*'நாமத்தின் மகிமைதனை பிரம்மனும் அறியான்*
*இதனால் கர்மானுஷ்டானங்களைப் பின்பற்றுவாயாக.*
*நாமம்தான் கர்மம், நாமம்தான் தருமம்*
*கேசவன் இதன் மெய்ப்பொருளைக் கூறியுள்ளான்.*
*நாமம்தான் புனித தீர்த்தம், நாமம்தான் புனித கர்மம்*
*நாமமின்றி வேதம் பிறிதொன்றில்லை.*
*நாமம்தான் நமக்குப் புகல், நாமம்தான் முக்தி.*
*நாமாவின் சித்தத்தில் ராம நாமம்தான் உள்ளது.' (801)*

திருநாமத்தின் மகத்துவத்தையும், பெருமையையும் நாமதேவர் மிக எளிய சொற்களில் நயம்பட உரைத்து இறைவனின் நாமம்தான் யாவுமென எடுத்துரைத்துள்ளார்.

*'நாமம்தான் உருவம், உருவம்தான் நாமம்!*
*உருவமும் நாமமும் வெவ்வேறல்ல.*
*பரம்பொருளுக்கு வடிவம் தந்தால் அது*
*பெறுகின்றது நாமமும் உருவமும்.*
*நாமதேவன் இதனாலன்றோ உரைக்கின்றான்—*
*நாமத்திற்கிணையான மந்திரம் எதுவுமில்லை காண்.*
*இவ்வுண்மையை உணராதவன் முட்டாள், அறிவிலியாவான்.*
*கேசவா, கேசவா, எனத் திருநாமத்தைக் கூறு.*
*அன்பே உருவான பக்தன் இதனையறிவான்.' (747)*

ராம நாமத்தை ஜபிப்பதன் நற்பயன்களை நாமதேவர் கூறுகின்றார்:

'ராம நாமத்தைக் கூறியதுமே பாபங்கள் பயந்தோடின.
நாமமதைக் கூறியதுமே சித்திரகுப்தன் எழுதுகோலை எடுத்து
வைத்துவிட்டான்.
பூசைப் பொருள் ஏந்தி
எதிரே வந்தான் பிரம்மதேவன்.
நாமா உரைக்கின்றான்—இது பொய்யெனில்
எனது சிரத்தைத் துண்டித்துவிடு.' (708)

ராம நாமமின்றி இசை பாடுவதும், கற்றுணர்வதும் நம்மால் துறக்கப்படவேண்டியவை என்பதை பல்வேறு உவமைகள், உதாரணங்களின்மூலம் நாமதேவர் உயிர்த் துடிப்புடன்கூடிய சொற்களிலே எடுத்துரைக்கின்றார்:

'சாதுக்களில்லாத ஊர் பாழ்,
சாதுக்களில்லாத ஆசிரமம் பாழ்,
எங்கும் நிறைந்த பரமனைத் துதிக்காத
சங்கம் வீண், மக்களும் வீணே.
பரமனை நினையாத, அவனைப் பணியாத,
நினைவும், செயலும் அது வீணே.
பரமன் புகழ்பாடாத, அவன் புகழ் கேளாத
நாவும், செவியும் அது வீணே.
பாண்டுரங்கனின் புனிதக் கதையைப்
பாடாத, படிக்காத பிறவியும் வீணே!
ராமன் திருநாமத்தைக் கூறாதவொரு
வாழ்வும், பிறவியும் அது வீணே!
நாமா உரைக்கின்றான்—
நாராயணன் இல்லாது வாழ்வது வீணே!' (772)

நாமத்தின் மகிமை அளப்பரியது. அதனை நிந்தனை செய்து, பரிகசிப்பவர்களை நாமதேவர் துச்சமெனக் கருதுகின்றார்:

'அழகான இனிய பாடலைப் பாடுகிறவர்களை அதமர்கள்
பரிகசிக்கின்றனர்!
நாமம் இனிது, நாமம் இனிது, அது இனிதே
இதனால் பிறவிப் பயன் கிட்டுகிறது.
சிரிக்கிறவன் சிரிக்கட்டும், பரிகசிக்கட்டும்
நாம் பாடிக்கொண்டே இருப்போம்.
நாமா உரைக்கின்றான்—பரிகசிப்போர்
எவரோ, அவர்களுக்கு நரகம் கிட்டட்டும்.' (789)

நாம ஸ்மரணை செய்வதற்குக் குறித்தநேரம், காலம் என்பதில்லை. எப்பொழுதும், எல்லாக் காலத்திலும் அதனைச் செய்யலாம். உலகம் துன்பத்திலும் துயரத்திலும் நிறைந்திருந்த போதும் கூட நாம ஸ்மரணை செய்வதால் துன்பம் விலகுகிறது.

'மகிழ்ச்சியுடன் இரு. நல்ல நேரமிது.
அரும்பெரும் கருமங்களின் வழி ஏன் தேடுகிறாய்?
மந்திரங்களிலே பீஜ மந்திரம் ஹரியின் நாமம்.
அதுவே சிவ நாமம், அதுவே ராம நாமம்.
பந்தங்கள் அகன்றுவிடும். நல்வழி நீ காண்பாய்!
கவலைகளைச் சிந்தையினின்று விரைவில் அகற்றிவிடு!
நாமா உரைக்கின்றான்—யாவரும் ஹரி நாமத்தைக் கூறுங்கள்!
உலகத்தின் கவலைகளிலிருந்து விடுபடுவீர்கள்!' (832)

நாமத்தின் பெருமை கங்கு கரையற்றது. ஆத்ம ஞானம் பெற, உள்ளொளியைப்பெற, அதுவே சிறந்த சாதனமாகும். அது துவைதம், அத்துவைதத்திற்கெல்லாம் அப்பாற்பட்டது. ஒன்றான அது, பல நாமம் கொண்ட அதுதான் அந்தர்யாமியான பரபிரம்மம்.

'ஞானம், தியானம், ஜபம், தவம், சாதனம்
நாமமோ இவ்வரையறை எதற்கும் உட்பட்டதில்லை;
முதலில் நாடிச் செல்லவேண்டும் குருவின் திருவடிகளை,
இதன் மூலத்தை அறிந்து, நாமத்தை அறியவேண்டும்.
துவைதத்தை அத்வைதத்தில் கலக்கவேண்டும்
துவைத, அத்வைதத்திற்கு அப்பாற்பட்டது அது.
நாமமது மூவுலகங்களிலும் மெய்யானது.
நாமதேவன் உரைக்கின்றான் பரபிரம்மம்தான் நாமம்.
ஆன்மா, பரமாத்மா என வெவ்வேறு நிலை அங்கில்லை!' (885)

நாமதேவருக்கு இறைவனின் திருநாமத்தின்மீது மட்டில்லாத அன்பு. இதனால் இறைவனின் திரு நாமத்தை உரைக்கும் மெய்யடியார்களுக்குத் தாம் அடியேன் எனக் கூறுகின்றார்.

'யாவும் அவனுடையதே, விட்டலா என
அவன் திருநாமத்தைக் கூறு.
திருநாமத்தை உரைப்பவனின் குலம் நற்பயனைப் பெறுமன்றோ.
பாண்டுரங்கனின் பேரன்பை, பேரருளைப் பெற்றவர்கள்
அவர் யாவருமே பாக்கியசாலிகள் அன்றோ?
இரவும் பகலும் விட்டலனையே நினைந்துருகுகின்ற
அத்தொண்டர்தம் தொண்டனாய் நாமா தொண்டுபுரி
கின்றான். (889)

நாமதேவர் நாமத்தின் மகிமை பற்றித்தான் அதிகமாகக் கூறியுள்ளார், விவரித்துள்ளார் என்பதைக் காணும்போது இறைவன் நாமாவைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதுதான் பாகவத தர்மத்தின் மூலாதாரம் எனத் தெரிகின்றது. நாம சங்கீர்த்தனம் செய்யும் மெய்யடியார்களின்பால் நாமதேவருக்கிருந்த மரியாதையையும், தொண்டு புரியும் மனப்பான்மையையும் கருத்திலே கொண்டுதான் பக்தை பஹிணுபாய் நாமதேவர் பாகவத தருமமெனும் தேவாலயத்தின் திருத்தொண்டன் எனக் கூறியிருக்கலாம்.

'வேதம் ஓதவேண்டாம் சாத்திரம் அறியவேண்டாம்.
நாமா கூறுவதை நினைவுகூருங்கள்.
பிரம்மஞானமோ, வைராக்கியமோ தேவையில்லை.
சாதுக்களின் சத்சங்கத்தில் பக்தியைப் பேணுங்கள்.
இக்கலியுகத்தில் வேறு நியம நிஷ்டைகள் புரிந்து
பிறவிக் கடலைக் கடந்தவர் யாரெனக் கூறுங்கள்!
நாமா உரைக்கின்றான்—பக்த சாதுக்கள் கூறியுள்ளனர்.
நாமத்தைவிட அமைதி தருவது வேறு எதுவுமில்லை.' (1761)

இவ்வாறு சாதுக்களின் வாயிலாகவும் கூறப்பட்டுள்ளதாகக் கூறும் நாமதேவர் நாம ஸ்மரணை செய்யுமாறு அறிவிக்கின்றார்:

### போதனை நிரம்பிய அபங்கங்கள்

மனம் சஞ்சலமானது, சபல சித்தம் கொண்டது, நிச்சயமற்ற தன்மை கொண்டது. துஷ்டத்தனம் கொண்டது. இயல்பான அதன் பிரவிருத்தி, பிறர் பொன், பிற பெண்டிர், மற்றும் பாவங்கள்பால் நாட்டமுடையது. இதனால் மனத்தை நல்வழியின்பால் நாட்டம் கொள்ளச் செய்யவும், நல்லெண்ணங்களை வளர்க்கவும் நாமதேவர் பலவிதமான உபதேசங்களை அருளியுள்ளார். இவ்வகையில் சுமார் இருபத்தி ஐந்து அபங்கங்கள் உள்ளன. இவை அவரது அகவயப்பட்ட தத்துவ சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகும்.

'மனமே! ஒருகணம் தனிமையில் அமர்ந்து,
அமைதி எங்குள்ளது எனச் சிந்திப்பாய்!
எண்பத்திநாலுலக்ஷம் பிறவி எடுத்தெடுத்து,
அறிவிலியே! நீ முற்றிலும் களைத்துவிட்டாய்!
மனிதப் பிறவி கிடைத்தற்கரியது!
அவ்வரிய பிறவி வீணாகிக் கொண்டிருக்கிறது.
ஓட்டோடுக்காகப் பாரசமணியை நழுவ விட்டுவிட்டாய்.

இதனை நினைந்து எனது உள்ளம் வருந்துகின்றது.
நாமா உரைக்கின்றான்—நான் உன்னை வேண்டுகிறேன்.
புலனின்பத்தின் உறவை நீ துறந்துவிடு!' (1788)

புலன்களால் ஏற்படும் ஆசையை, இன்ப வேட்கையைத் துறக்க வேண்டுமென்றால் சத்சங்கம் ஒன்றுதான் வழி. மனம் எதன் பின்னால் செல்லுகிறதோ அதன் ரூபத்தை அது தனதாக்கிக் கொண்டு விடுகிறது.

'பூமியைத் தியானம் செய்தால் நீ பூமியாவாய், கேசவனாக ஆகமுடியாது. ஹே! மனமே! எனக் கூறி பூமி, நெருப்பு, காற்று, ஆகாசம் முதலியவற்றைத் தியானிப்பதற்கு பதிலாக, ''நாமா உரைக்கின்றான் கேசவனைத் தியானித்தால் நீ, கேசவனாகவே ஆகி விடுவாய்'' என மனதிற்கு அறிவுரை வழங்குகிறார் நாமதேவர்.' (1903)

மனதிற்கு அறிவுரை வழங்கி இருப்பதுபோலவே உலக வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், முக்தியை நாடுகின்றவர்களுக்கும், துஷ்டர்களுக்கும், தீயவர்களுக்கும்கூட நாமதேவர் நல்லுபதேசங்களை அருளியுள்ளார். அகத்தூய்மை, மனத்தூய்மை, சத்சங்கமெனும் நல்லோரின் கூட்டுறவு, இறைவன்பால் பக்தி முதலியவைகள்தான் இவ்வுபதேசங்களில் உள்ளடங்கி நிற்கும் முக்கியக் கருத்துக்களாகும். சகலவிதமான நல்லெண்ணங்கள், நற்செயல்களின்பால் நன்நோக்கமும், அன்பும் கொள்ளவேண்டுமென்பது அவரது உபதேசங்களின் கருத்தாகும். அன்பென்பது தானாக, தன்னியல்பாக ஊற்றெடுத்துப் பெருகுவதாகும். அதனை இரவல் வாங்கிக்கொள்ள முடியாது. போலியாக நடிக்கவும் முடியாது.

சூரிய சந்திர பிம்பங்களை நகலெடுக்க முடியும்,
ஆனால் அவற்றின் ஒளியை அதிலே வரைந்துவிட முடியாது.
துறவியாகப் போலி வேடம் போடமுடியும்,
ஆனால் கடினமான வைராக்கியத்தைக் கைக்கொள்ள முடியாது.
நாமா உரைக்கின்றான்—போலிகள் நாமசங்கீர்த்தனமும் செய்கின்றனர்
ஆனால் அவ்வன்பை, பக்தியை, அவர்களால் கொண்டுவர முடியாது. (1582)

மனிதப் பிறவியிலே நம்மால் அடையக்கூடியது ஒன்று உண்டென்றால் அது பக்திதான். பக்தியின் சிறப்பை நாமதேவர் எவ்வாறு வருணிக்கிறார் என்பதைப் பார்ப்போம்:

'பக்தியின்றி முக்தியில்லை என்பது சித்தாந்தம்.
வேதங்கள் அறுதியிட்டுக் கூறுவதும் இதுவே,
இந்த ஞானத்தை நீ அடைந்துவிடு என்கின்றன.
சாதுக்களை நாடிச் செல்லவேண்டியது எதற்கு?
இவ்வுலக வாழ்வு பொய் என்கின்றன சாத்திரங்கள்.
சத்குரு தேவை இதனை எடுத்தியம்ப,
நாமா உரைக்கின்ருன்—சாதுக்களுக்கு பணிபுரிந்துகொண்டிருங்கள்.
அவர்களது நல்லாசியை, அருளைப் பெறுங்கள் இதுவே ஞானமாகும்.' (1702)

பக்தியோகத்தைப் பற்றி விரிவாகவே எடுத்துரைக்கின்ருர் நாமதேவர்:

'பேசுகின்றவர்கள், பேசுகின்றனர். மறைநூல்கள் திபாடுதுகின்றன.
ஹரியை அடைவதென்பது, அது வேருகும்,
நீ எதனை அடையவில்லையோ அது கனவு. ஹரியெனும் சொல்லே பிரம்மம்.
இம் மர்மத்தைப் புரிந்துகொள்வதென்பது. அது வேருகும்.
சிந்தனையொன்று, செயல் வேருென்று, அலைபாய்கின்றனர் அவர்கள்.
ஹரியை அடையும் வழியென்பது, அது வேருகும்,
தருக்கவாதிகள் சிலர். சார்வாகன்போன்று வாத விவாதம் புரிவோர்,
ஹரியை அடையும் இன்பம். அது வேருகும்.
திறமையான பேச்சாளி ஒருவன், கவித்திறன் பெற்றவன் இன்னொருவன்.
சாதுக்கள் ஆனந்தம் தருவோர், மரியாதை அறிந்தவர்கள்.
ஹரியை அறிந்தவர்கள் எவரோ, அவர்கள் பேசுவதில்லை.
நாமா உரைக்கின்ருன்—அவர்கள் நாடியதை அடைந்து விட்டனர்
பக்தியெனும் யோகத்திஞல்.' (1775)

### நாமதேவரின் சமுதாயப்பார்வை

நாமதேவரின் காலத்திலே ஜாதி மத பேதங்கள், சம்பிரதாய, அனுஷ்டான பேதங்கள், தலயாத்திரை, பற்பல தேவி, தேவதைகளின் வழிபாடு என வேற்றுமைகள் மிகுந்திருந்தன. ஆஞல் நாமதேவர் தம் காலத்தில் நடைமுறையிலிருந்த ஜாதி பேதங்களையும், கர்மானுஷ்டானங்களையும், போலித்தனத்தையும் துணிவுடன் சாடியுள்ளார். உள்ளத்திலே தூய்மையின்றி, தலங்களிலே

சென்று புனித நீராடுவது அர்த்தமற்றது எனக் கண்டனம் செய்துள்ளார். தெய்வங்களுக்கு உயிர்ப் பலி கொடுப்பதும், சிலேகளே வணங்குவதும், பூசிப்பதும் ஒதுக்கப்படவேண்டியவை என்பதை, பல இடங்களில் விரிவாகவும், ஆழமாகவும் இயம்பியுள்ளார்.

நாமதேவர், தான் ஜாதியில் 'ஷிம்பி' (தையற்காரன்) என்பதைக் குறிப்பிட்டு ஜாதியைவிட பக்தி எவ்வளவு உயர்வானது, மேன்மையானது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்:

'பாதரசம் பட்டதுமே இரும்பு பொன்ஞகி விடுகிறது.
எவரும் அதனே இரும்பெனக் கூறுவதில்லே பின்னர்,
சிறுசிறு ஓடைகள், அருவிகள் கங்கையில் கலக்கின்றன,
எவரும் அதனே ஓடையெனக் கூறுவதில்லே பின்னர்.
நாமா உரைக்கின்ருன்—ஜாதி எதுவாயினும் தூய பக்தி உண்டாயின்
எவரும் அதன் முந்தைய நிலேயைக் கூறுவதில்லே.' (973)

ஜாதியினுல் ஒரு மனிதனேப்பற்றிய ஒரு முடிவான கருத்து கொள்ளுதல் கூடாது. ஜாதியை வைத்து ஒருவனேக் கணித்தல் தவறு என்பதை உணர்த்துகிருர் நாமதேவர் இப்பாடலில்:

அசுத்தமான மண்ணில், துளசி துளிர் விடுகிறது.
அதனேத் தூய்மையற்றதென எவரும் கூருர்.
காகத்தின் எச்சத்திலிருந்து ஆலமரம் துளிர்விடுகிறது
அதனே அமங்கலமானதென எவரும் கூருர்.
தாதியின் புதல்வனுக்கு அரசபதவி கிட்டுகிறது.
அதனே உவமையாக்கி எவரும் கூருர்.
நாமா உரைக்கின்ருன்—ஜாதியில் நான் ஷிம்பி.
ஜாதியை ஒப்பிட்டுக் கூருதீர்கள். (975)

தன் குடிப்பிறந்தவர்களேப் பற்றி மட்டுமல்ல, தாழ்ந்த இனத்தவர், தீண்டத்தகாதவர்களெனப்படும் சோகாமேளர் போன்ற தமது சமகாலத்து பக்த துறவிகளின்பாலும் நாமதேவர் நடந்து கொண்ட முறையானது அவரது பரந்த, மனிதாபிமானக் கண்ணேட்டத்தைத் தெளிவாக்குகின்றது. சோகாமேளரின் சீடன் பங்காமஹார் தனது ஒரு அபங்கத்தில் இவ்வாறு கூறுகின்ருன்:

சோகாவின் சிரத்தின்மீது தனது கரத்தை வைத்து ஆசி அளித்தார் நாமதேவர்.
விட்டலனின் திருநாம மந்திரத்தை உபதேசித்தார்.
பங்கா கூறுகின்ருன்—எனது குருசோகா, தாய்க்கு இணையானவன்,
அவனது தாளடியில் நான் சிரம் பணிகின்றேன்.

நாமதேவர், தீண்டத்தகாத குலத்தவரான சோகேபாவின் சிரத்தின்மீது தனது கரத்தை வைத்து, அவருக்கு நல்லுபதேசமும் புரிந்தார் என்பது மட்டுமின்றி, மங்களவேடாவில் சோகாமேளர் மீது சுவர் விழுந்து அவர் இறந்துபோனதும், அவரது அஸ்திகளைத் தாமே தேடி எடுத்து, பண்டரிபுரத்தின் பிரதான வாயிலில் அதனை வைத்து சமாதி எழுப்பினர். நாமதேவர் ஆற்றிய பணிகளில் இதனை ஒரு அற்புதமான நிகழ்ச்சியாகவே கருதவேண்டும்.

நாமதேவரின் காலத்தில் தலங்கள், புனித தீர்த்தங்களின் மகிமையும், செல்வாக்கும் எத்தனை அதிகமாக இருந்தது என்பதற்கு நாமதேவரின் அபங்கங்களில் ஆங்காங்கே சான்றுகள் உள்ளன. தமது சமகாலத்து பக்த சாதுக்களுடன் அவர் புரிந்த தலயாத்திரையும் பிரசித்தமானது. இருப்பினும் அகத்தூய்மை இல்லாத நிலையில் புனித நீராடுவதும், தலயாத்திரை புரிவதும் வீண் என்பதைப்பற்றி அவர் சற்றுக் கடுமையாகவே விமர்சித்துள்ளார்.

'என்ன பயன் புனித நீராடுவதால்—
தீய குணங்களால் மனம் நிறைந்திருக்கும் போது?
என்ன பயன் தவமிருப்பதால்—
உள்ளத்தில் அனுதாபமில்லாவிடில்?
உள்ளத்தில் படிந்திருக்கும் அழுக்காற்றை
தீர்த்தங்களிலெல்லாம் சிறந்ததாலும் நீக்கமுடியாது.
நாமா உரைக்கின்றான்—இது மிக மிக எளிது
பாபம் பச்சாதாபத்தினாலேயே கரைகின்றது.' (1586)

இதே கருத்தை இரண்டொரு உதாரணங்களின்மூலம் பின்னும் தெளிவுபடுத்துகிறார் நாமதேவர்:

கசப்பான இலையோடு சர்க்கரை கலந்தாலும்,
கசப்பென்னவோ நீங்குவதில்லையே.
தலயாத்திரைசெய்து, நீரில் மூழ்கி எழுந்தாலும்,
உள்ளமென்னவோ தூய்மை பெறுவதில்லையே!
விஷத்தைப் பாலிலே கலந்து கொதிக்க வைத்தாலும்
விஷமென்னவோ நீங்கிவிடுவதில்லையே!
நாமா உரைக்கின்றான்—சாதுக்களின் சத்சங்கத்திலேதான்
இத்தகையவர்கள் நற்கதி பெறுகின்றனர் நாளடைவில். (1572)

அதாவது நாமதேவரின் கருத்தின்படி இறைவனின் திருநாமத்தை ஓதுவதுதான் தீர்த்தங்களிலெல்லாம் சிறந்த தீர்த்தமாகும். 'தவம், தானம், யாக யக்ஞம் பல நூறு செய்தாலும், ஹரியின் திருநாமத்துடன் ஒத்திட்டுப் பார்த்தால் இதன் தட்டு தாழ்ந்தேயிருக்கும்' (724) என்கிறார் நாமதேவர். தலயாத்திரை,

புனித நீராடுவது போன்றவைகளைப் போலவே அவரது காலத்தில் பல்வேறு தெய்வங்களை வழிபடுவதும் உபாசிப்பதும், ஒரு வியாபாரமாகவே, தொழில் ரீதியாக நடந்து வந்தது. இறைவனின் பெயரால் நடத்தப்பட்ட இந்த வியாபாரத்தை நாமதேவர் வன்மையாகக் கண்டித்தார்.

கசாப்புக் கடைக்காரன்போல் செய்கின்றனர் வியாபாரம்.
உள்ளத்தில் எப்பொழுதும் இதே எண்ணம், நினைப்பு.
துஷ்டர்கள் இவர்கள், தீய ஒழுக்கம் கொண்டவர்கள்
பரம நாசத்தை விளைவிக்கும் மோசக்காரப் பாவிகள் இவர்கள்.
(1610)

நாமதேவர் விட்டலனையன்றி வேறு தெய்வத்தை நினையாதவர். அவன்பால் ஈடு இணையற்ற பக்தி கொண்டவர். விட்டலனின் பரம பக்தரானதால் ''விடோபாவைவிடச் சிறந்த ஞானமும் தெய்வமும் உண்டென்று கூறுவதை என்னால் காதுகொடுத்துக் கேட்க இயலவில்லை'' (1614) என்று ஓரிடத்தில் தெளிவுபடக் கூறியுள்ளார்.

நாமதேவரின் படைப்புகள் யாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது, குறிப்பாக உருவக அணியில் புனையப்பட்டுள்ள பாடல்கள், சுயசரிதப் பாணியில் அமைந்துள்ள அபங்கங்களிலிருந்து அவர் தம்மைச் சுற்றிலுமிருந்த, தாம் வாழ்ந்த சமுதாயத்தை மிகுந்த விழிப்புணர்வுடன் கூர்ந்து நோக்கியுள்ளார் என்பது புலப்படுகின்றது. அகவயப்பட்ட சாதகர், பக்தர் என்ற முறையில் அவரது படைப்புகளின் அடித்தளம் அமைந்திருந்தாலும் அவரது கண்ணோட்டம் விரிந்ததொரு சமுதாயப் பார்வையுடனிருந்தது என்பதில் ஐயமெதுவுமில்லை.

நாமதேவர் தமது மீட்சியைப் பற்றிய சிந்தனை மட்டுமே கொண்டிருக்கவில்லை. தமது பல அபங்கங்களில் தம்மையொத்த சாதுக்கள், பக்தர்களையும் ஒட்டுமொத்தமாகவே குறிப்பிட்டுள்ளார். தம்மை அவர்களிலிருந்து தனிப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களின் இன்பத்தையே தமது இன்பமாகக் கருதினார். 'பக்தர்களான நம்மிடம் குறைபாடுகள் பல இருந்தாலும் நமக்கு யம பயமில்லை' எனக் கூறுகிறார் நாமதேவர்.

நேசமில்லாவிடின் அரசன் ஒதுக்கிவிடுவான் தன் காதலியை.
ஆனால் அவனது அதிகாரம் உள்ளது இவ்வுலகத்தின்மீது.
இதுபோன்ற இறுமாப்பு கொண்ட நாங்கள் உனது பக்தர்கள்.
யம தூதுவனைக் காலால் மிதித்துவிடுவோம் நாங்கள்,
அரசனின் மகள் அவள் குற்றம் புரிந்தவள்.
பிறருக்கு அவளென்ன தண்டனை வழங்க முடியும்?

தேவர்களிடம் உள்ளன எண்ணற்ற குறைகள்
நாமா உரைக்கின்றான் நாமே ஜகத் பிதா.

(காதா பஞ்சகம்)

நாமதேவர் நாம சங்கீர்த்தனத்தில் தன்னை மறந்து ஆடினார், பாடினார். அப்பேரின்பத்திலே திளைத்தார், இவ்வுலகத்திற்கு ஞான விளக்கை ஏற்றி வைத்தார். பாகவத தருமத்தின் உட்பொருளை அவர் புரிந்துகொண்டார். அதன் பெருமையை உணர்ந்தார். ''ஹரி பக்தர்களிலே நீ வித்தியாசமானவன். அன்பே உருவானவன் நாமதேவன்'' எனப் புகழ் பெற்றாலும் ''ஞானதேவன் உரைக்கின்றான், நீ விடோபாவின் பாலகன். நாமதேவா, நீ எங்கள்பால் அருள்பாலிப்பாயாக'' என ஞானதேவர் கூறியுள்ளது மகத்தான விஷயமாகும். நாமதேவரைப் பற்றி ஞானதேவர் கூறியுள்ள சொற்கள் யதார்த்தமானவை, முற்றிலும் உண்மையானவை. சாதுக்களின் குழாம் மற்றும் ஹரியின் பக்தர்களின் நன்மையையே கோரிய நாமதேவர் அவர்கள்பால் எவ்வாறு அளவற்ற கருணை கொண்டிருந்தார் என்பதை அவரது சொற்களிலேயே பார்க்கலாம்.

'கற்பனைக் கெட்டாத ஆயுள் கிட்டட்டும் அவர்கள் குலத்திற்கு,
எனது ஹரிதாசர்களுக்கு.
பொன் பொருளைப் பற்றி இடர்கள் என்றும் நேராதிருக்கட்டும்,
சாதுக்களின் கோஷ்டி சுகமாக வாழட்டும்,
அகங்கார மமகாரங்கள் தீண்டாமலிருக்கட்டும்
எனது அன்பான விஷ்ணு தாசர்களை.
நாமா உரைக்கின்றான்—மங்களமுண்டாகட்டும்.
பாண்டுரங்கனின் திருநாமத்தை உரைப்பவர்களுக்கு.

# கவித்திறனும் ஆளுமையும்

*கவிதையிலே இன்னும் உள்ளது கவிநயம்.*
*நாமதேவனின் கவிதையின் சிறப்பென்னவோ நானறியேன்*
*பாலின்மீது படிந்துள்ள பாலாடையைப் பாராட்டுவது எப்படியோ,*
*நாமதேவன் பாடுகிறான் அப்படியொரு பாட்டு.*

(பர்சா பாகவதம்.)

'இந்த மராத்திய நகரத்தில், பிரம்ம வித்தையின் சுகானுபவத்தைப் பரப்புவேன்' என்பது ஞானதேவரின் லட்சியம். மராத்தி மொழி பேசப்படும் நகரத்தில் மட்டுமல்லாது அதன் எல்லைக்கப்பாலும் பிரம்ம வித்தையை யாவரும் அறியும்படி செய்து, அதனைப் பரப்பும் நற்பணியினை மராத்திய பக்த துறவிகளில் நாமதேவர்தான் மிகப் பெரிய அளவில் சாதித்தார் என்பது முற்றிலும் சரியானதாகும். ''சொல்லில் சிறந்தது கவிதை, கவிதையிலும் சிறந்தது அதனை ரசிப்பது. பரம்பொருளின் மெய் தீண்டலின் உணர்வு போன்றது அந்த ரசனை'' எனக் கூறிய ஞானேஸ்வருடைய பேராற்றலுக்கு அத்தெய்விக மெய்ஞ்ஞான உணர்வு ஏற்பட்டிருந்தது என்பதிலும் ஐயமில்லை, ஆனால்

'பரதத்துவம் கண்களுக்குப் புலனாகவேண்டும்,
அச் சுகானுபவத்தை உணரவேண்டும்.
அம்மெய்ஞ் ஞான போதத்தின் நிறைவிலே இவ்வையகம்
உய்ய வேண்டும்.'

(ஞானேஸ்வரி 13—173)

ஞானதேவர் எதிர்பார்த்த இந்த நிறைவை நாமதேவர் நிறைவேற்றிவிட்டார். நாமதேவரின் கவிதையில் அப்பரம் பொருளே கண்முன்னே உருவெடுத்து வந்துவிட்டது. பண்டரியின் ஆலயத்தில் செங்கல்லின்மீது நின்ற அப் பரம்பொருளை நாம தேவர் தமது கண்களால் பிரத்யட்சமாகத் தரிசித்தார். அத் தரிசனத்தினால் கிட்டிய தெய்விக இன்பத்தை அனுபவித்தார். இக்காரணத்தினால் தாம் பெற்ற அத்திவ்ய அனுபூதியின் பெரு வெள்ளத்தில் இவ்வையம் முழுவதும் திளைக்கச் செய்ய முடிந்தது.

'சாந்தரசத்தின் இல்லத்திற்கு அதிதியாக வந்தது அற்புத ரசம்' என்பது ஞானதேவரின் நிலை. ஆனால் ஞானதேவரின் சொற்

களிலே கூறுவோமானால் ''நாமதேவர் கூறியது கவிதையல்ல, அது இணையற்ற அற்புதரசம்'' என்பதாகும். நாமதேவரின் வாக்கிலே அற்புதரசம் மட்டும்தான் நிரம்பித் ததும்புகிறது. ஞானேஸ்வரியில் ஞானதேவர் தனது அபங்கங்களிலே பெரும் செல்வம் போல் திரட்டி வைத்திருந்த பக்திரசம் நாமதேவரின் அபங்கங்களிலே இரு கரையும் புரளப் பெருகி ஓடிவரும் வற்றாத ஜீவ நதியாகிவிட்டது. சாந்தம், அற்புதம். கருணைரசத்திலே ஊறித் திளைக்கும் நாமதேவரின் கவிதைகளின் ஒவ்வொரு சொல்லும் பக்திரசத்திலே தோய்ந்து நிற்கின்றன.

### ஞானமும் நாமமும்

கங்கை, யமுனை இவ்விரண்டு ஆறுகளும் இணையாகப் பெருகிச் சென்று பிரயாகைக்கருகே ஒன்றோடொன்று கலந்து இணைவது போல, ஞானதேவரின் ஞானபக்தியும். நாமதேவரின் நாமபக்தியும் பரஸ்பரம் இணைந்து கலந்ததால் மராத்தியக் கவிதையெனும் நீரோட்டம் புனிதமடைந்தது. உண்மையில் ஞானமும், பக்தியும் இரண்டறக் கலக்கும்பொழுது துவைத பாவத்திற்கு இடமிருப்ப தில்லை. இதுபோன்றே—நாமதேவரைச் சந்திக்க ஞானதேவர் வந்தார். நாமதேவர் அவர் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கினார் என்பதும் ஞானதேவர், நாமதேவரின் பாதங் களில் பணிந்தார் எனக் கூறுவதும் இவ்விரு பக்தர்களிடையே பரஸ்பரம் நிலவிய மரியாதையைக் குறிக்கின்றது. தங்களது ஆற்றல் மற்றும் திறமையினால் சுடர்விட்டுப் பிரகாசித்த, சமமான புலமையும், தகுதியும் கொண்ட இவ்விரு பக்த கவிஞர்களிடையே விகல்பத்தை ஏற்படுத்தித் துலாக்கோலினால் எடைபோட்டு வித்தியாசம் காண முற்படுகின்றனர். சிலேடையெனும் முள்வேலி போடப்படுகின்றது. இம்முயற்சி முற்றிலும் உசிதமற்றதாகும். ஞானதேவரிடமிருந்து தான் அடைந்தவைகளைக் குறித்து நாம தேவர் அநேக அபங்கங்களில் மனம் திறந்து தனது நன்றியுணர்வை வெளியிட்டுள்ளார். அவற்றிலே மிகப் பிரசித்தி பெற்ற ஒரு அபங்கம் இது:

'என் ஞானதேவன் யோகிகளின் தாய்.
மறைநூலை வெளியிட்டுள்ளவன் அவன்.
கீதையின் விளக்கம் ஞானேஸ்வரியாகும்;
பிரம்மானந்த அலைகளை இதில் எழுப்பியுள்ளான்.
ஆன்ம ஞானத்திற்கு உருவம் கொடுத்தான்.
சைதன்யமெனும் தீபத்தை ஏற்றினான்.
ஐம்பத்தியாறு மொழிகளுக்குப் பெருமை தந்தான்.
உலக வாழ்வெனும் மாகடலிலிருந்து மீட்சிபெற

நாமத்தை எடுத்துரைத்தான், அது காதின் வழியே
வந்தமர்ந்தபின், சுகமெனும் சாம்ராஜ்யம் விரிகின்றது.
நாமதேவன் உரைக்கின்ருன்—ஞானேஸ்வரி இணையற்றது.
அதன் ஒரு ''ஒலி''யையாவது அனுபவத்தில் கொண்டு
வருவோமாக.' (699)
(காதா பஞ்சகம்)

இந்த அபங்கத்தில் பகவத்கீதையைப் பற்றி, ஞானேஸ்வரியைப் பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் நாமதேவரின் கூரிய பார்வைக்குச் சான்ருகும்.

இன்னொரு அபங்கத்தில் அவர் கூறுகிருர்:

'ஞானதேவனைக் கண்ணுல் கண்டதும்
நாமதேவன் பெரும் உவகையுற்ருன்.
பாதங்களை உறுதியாகப் பற்றினுன்.
நீயே சத்குரு, குரு ராஜா,
என்னை இதுபோல் நிராகரிக்காதே.
என்னை விலக்கிவிடாதே.
மனத்தில் நீங்காமல் உள்ளது
உனது பக்தியின் நினைவு.' (264)

பக்தி நிறைந்த அபங்கங்களை இயற்றும்போது நாமதேவருக்கு ஞானதேவரின் பக்தி பற்றிய எண்ணம் எப்பொழுதும் நினைவு வந்துகொண்டிருந்தது. ஞானதேவரைத் தனது சத்குரு, ராஜா என விநயத்துடன் குறிப்பிடுகிருர். ஏனெனில் நாமதேவரைப் பற்றி ஞானதேவர் குறிப்பிடும்போதும் ''பண்டரியின் நாமா! நீ பிரேமையின் நிதி. அன்புச் சுரங்கம். பாகவத பக்தர்கள் பற்றி நிறையக் கேட்டுள்ளேன். பலரும் உள்ளனர். இனிப் பலரும் தோன்றுவர். ஆனல் நாமதேவன் அவன் அன்பே வடிவானவன். அந்தரங்கமான பக்தன்'' எனக் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது நாமதேவரின் படைப்பாற்றல் பற்றிய யதார்த்தமானதொரு மதிப்பீடு நமக்குக் கிடைக்கிறது.

### சந்திரபாகாவின் கரையில் கேட்ட கதைகள்

நாமதேவருக்குக் கவிதை இயற்றும் தூண்டுதலும், உற்சாகமும் எவ்வாறு ஏற்பட்டது என்பதுபற்றி அவரே தமது அபங்கமொன்றில் குறிப்பிட்டுள்ளார்:

'சந்திரபாகாவின் கரையிலே கதைகள் பல கேட்டிருக்கிறேன்.
வால்மீகி நூறு கோடி நூல்களை இயற்றியதாக.
என் மனம் வருந்தியது மிகவும்.

வாழ்நாளை வீணடித்துவிட்டேனே என
ஆலயம் சென்று விட்டோபாவிடம் முறையிட்டேன்.
வால்மீகி இராமாயணம் இயற்றியுள்ளான்.
நான் உனது உண்மையான பக்தனென்றால்,
எனது இப் பிரதிக்ஞையை நிறைவேற்று.
உன்னைப் போற்றித் துதித்து நூறு கோடி அபங்கங்கள்
இயற்றுவேன் நான்.

பாண்டுரங்கா! உனைப் பாடுவேன். நாமா உரைக்கின்றான்
வால்மீகிக்கு அக்காலத்தில் நீண்ட ஆயுள்.
இக்காலத்திலோ ஆயுட் காலமது குறைவு.
நாமா உரைக்கின்றான்—எனது இப்பிரதிக்ஞை நிறைவேறாவிடின்
உன் முன்னே என் நாவைத் துண்டித்து வைத்துவிடுவேன்.'
(1127)

நாமதேவரின் இப்பீஷ்மப் பிரதிக்ஞையைச் செவியுற்ற பாண்டு ரங்கன் பிரத்யட்சமாகி; தானே எழுது-தாள்களை வரவழைத்து, தானே அபங்கங்களை எழுத்திலே வடித்தான் என அவர் குறிப்பிட்டுள்ளார். நூறு கோடி அபங்கங்களை இயற்றுவது என்பது, விரைந்து பாடப்பட்ட ஆசு கவிதைகள் எனப் பொருள்படும் என்று ஆச்சார்ய விநோபா பாவே கூறியுள்ளார்.

ஹரியின் கிருபையினால் எனக்கு அபங்க யாப்பின் இலக்கணங்கள், அணி அலங்காரங்கள் கனவிலே தோன்றின என்றும், குரு விசோபாகேசர் தனக்கு அன்புடன் எழுதும்படி ஆணையிட்டாரென்றும் நாமதேவர் குறிப்பிடுகிறார். இந்த அபங்கம், அந்த அபங்கங்களின் ஆதாரத்தில் எழுதப்பட்டவை. அதாவது அபங்கம் எனப்படும் யாப்பின் லட்சணங்கள் அவருக்குத் தெரிந்திருந்தது என்பது தெளிவாகிறது.

'அபங்கங்களின் வடிவம் பற்றி நானறியேன்.
விரைந்தன்பு காட்டினான் கேசிராஜன்.
அக்ஷரங்களின் எண்ணிக்கை அதிகமென்கின்றனர்.
மேரு, சுபிரசண்ட, சர, என்றெல்லாம்
ஆறு, மூணரைச் சரணம் என்றறி.
அக்ஷரத்தை எண்ணுங்கள் நாலு சௌக்.
முதலிலிருந்து மூன்றாவது வரை.
பதினெட்டுவரை எண்ணுங்கள்.
முதல் நாலு 'சௌக்' மாத்ருகா எனப்படும்.
இருபத்திரெண்டு எண்ணிக்கை முடிவானது.
ஒன்னரைச் சரணத்திற்கு அக்ஷரங்கள் தீர்க்கம்.
முக்தியை நாடுகிறவன் ஆய்ந்தறிந்தான்.

நாமா உரைக்கின்றான்—ஹரி கனவிலே எனக்குக் காட்சி
தந்தார்,
கேசர் அன்புடன் ஆக்ஞையிட்டார்!' (1129)

நூலறிவின் பயனின்மை

'எனக்கு அபங்க யாப்பின் லட்சணங்கள் பற்றி ஏதும் தெரியாது. பாகவத தர்மத்தின் உட்பொருளை நானறிந்திருந்தது போன்றே அபங்கம் பற்றிய நுட்பங்களும் நானாகவே அறிந்திருந்தேன்' என நாமதேவர் கூறுகின்றார். இன்னொரு இடத்தில் பண்டிதர்களின் பாண்டித்தியம் எனக்குப் புரிவதில்லை எனக் கூறி விட்டு, பிரேமை உள்ளத்திலே பொங்கி எழும்போது, அப் பரவசத்தில் எந்த சந்தத்தில் நான் ஆடுகின்றேனோ, அதிலேயே என்னை மறந்து லயித்துப்போகிறேன், மனத்திலே படும்படியான இப் பாடல்களைப் பாடுகிறேன்' என்கிறார் இன்னொரு அபங்கத்தில்:

அன்புப் பெருக்கெடுத்து உன்மத்தமாய் உடலெங்கும் விரவி
நிற்க,
பாடலுடன் நான் எனை மறந்தாடுகின்றேன்,
எப்பொழுது என்னென்ன பாடுகிறேன்.
இறைவா, அதனையும் நானறியேன்,
காற்று தன்னிச்சையாய் வீசுவதுபோல்தான்.
எனது பரவசமும், ஆடலும், பாடலும்,
கைத்தாளமும் மிருதங்கமும் தென் திசை நோக்க.
நானோ வடதிசை நோக்கி நிற்பேன்,
மழலை மொழி பேசுகிறேன் நான்.
ஆயினும் தாய்க்கு அது உவப்பானது,
நாமதேவன் உரைக்கின்றான் தேவனே.
எத்தனை பிறவி எடுத்தாலும் உனக்கே தொண்டு செய்ய
அருள்வாய்.' (1242)

கடவுளை அடையவேண்டுமானால் அவர்பால் அதீதமான அன்பு வேண்டும். நூல்களைப் படித்தறிந்து பாண்டித்தியம் பெற வேண்டிய அவசியமில்லை. நூல்களின் சுமையைச் சுமக்கவேண்டியது மில்லை. சகல ஜீவராசிகளின்பாலும் சமநோக்கோடு கருணையும் அன்பும்கொண்டு இறைவனை உளமார்ந்த பக்திபாவத்துடன் வழி படுவதே போதுமானது. நாமதேவர் இதனைப் பூரணமாக அறிந்திருந்தார்.

'தோற்றுவாயின் மூலம் தெரியவேண்டாம்.
நூல்களின் சுமையும் வீண்தான்

ஹரியின் நாமத்தைப் பாடு, உயிரெல்லாம் இறைவனே.
சகல ஜீவராசிகளின்பால் சமநோக்குடன் அன்புகொள்.
நிதமும் ராம நாமத்தைப் பஜித்திரு. ஹரியை வணங்கு.
நாமா உரைக்கின்றுன்—இனிமை அதிகம் வேண்டேன்
விட்டலனின் ''அன்பு'' அது ஒன்றே போதும்.' (792)

இதுமட்டுமல்ல, பக்தியின்றி சொல்லறிவு வீண் என்கிருர் நாமதேவர். எவனுடைய உள்ளத்தில் பக்தியில்லையோ, அவனது மொழியறிவு எரிந்துபோகட்டும் (1745) என்கின்ருர். சொல்லாராய்ச்சியும், சுருதி நூல்களின் (மறை நூல்கள்) பொருளாராய்ச்சியும் வீண் விஷயங்களின் திருப்திக்கு இவைகளால் என்ன பயன்? (1613) என மேலும் தெளிவுபடுத்துகிருர். இதுபோன்று அவர் வ்யுத்பத்தி அதாவது நூலறிவு வியர்த்தமானது என்பதைப் பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

'அந்த அன்புருவானவனை நானறியேன், பித்தன் நான்.
பிறவி எடுத்துவிட்டேன். இப்புதிரை நீதான் விடுவிக்க
வேண்டும்.
ஹரி கருணை வடிவானவன் என்பதையறிவேன்.
என்னை உய்விக்கும் பொறுப்பு உன்னுடையதே
ஹே! ஹரி! பலர் வாயால் உன் புகழ் கேட்டுள்ளேன்.
நின்னைச் சரணடைந்து துதிக்கின்றேன்
நாமா உரைக்கின்றுன் என்னைக் கடைத்தேற்று.
நாதியற்ற நான் நின்னைப் புகலடைந்துள்ளேன்.' (1330)

'நான் பேதை. ஏதுமறியாதவன். நான் பிறவி எடுத்து உன்னைத் துன்பத்திலாழ்த்திவிட்டேன். ஆனுல் பலர் வாயிலாக உனது புகழைக் கேட்டுள்ளேன். உன்னுல்தான் என்னைக் கடைத்தேற்ற முடியும். இதனுல் உன்னை நாடி வந்தேன்' எனக்கூறும் நாமதேவர் நூலறிவின் பயனற்ற தன்மையை எடுத்துக்காட்டி, பரம்பரை வழக்கப்படி, சாத்திர நூல்களை முறைப்படி கற்கவில்லை; கவிதை இலக்கணமும் படிக்கவில்லை; இருப்பினும் அபங்கம் இயற்றும் முறையைத் தாம் அறிந்துள்ளதைத் தெளிவாக்குகின்ருர்.

'வேதங்களை, சோதிடத்தைப் பயில்வதால்
இறைவனின் நாமம் அறிய இயலவில்லை.
மறை நூல்களும் புராணங்களும்
இறை நாமத்தை ஸ்மரிக்காத வரையில் வீணே!' (884)

இவ்வாறு வெறும் நூலறிவு மட்டும் பெறுவது அர்த்தமற்றது. பயன் ஏதுமில்லாதது என நாமதேவர் கூறியிருந்தாலும் சாதனையில் ஈடுபட்டிருந்த காலத்தில் மெய்ஞ்ஞானம் பெறவேண்டுமென்ற தாகத்துடனே இருந்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். எந்த

வொரு சிறந்த ஞானத்தையும் பெறவேண்டும் என்ற வேட்கை, அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல், கேள்விகளைக் கேட்டறிவ தன் மூலமே நிறைவைப் பெறுகின்றது. வெறும் நூலறிவு மட்டும் போதாது; அது வீணே என்பதும், எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற வேட்கை கொண்ட உள்ளத்தில் பதியாத வரை புரிந்துகொள்ளவும் இயலாது.

கவிதை இயற்றும் உந்துதல்

எப்பொருளையும் கண்டறியவேண்டுமென்ற ஆர்வமும் துடிப்பும் நாமதேவரின் உள்ளத்தில் எத்துணை தீவிரமாக, விழிப்புடனிருந்தது என்பதையும், அவரது கவிதைகளுக்கு உந்துசக்தியாக, தூண்டுதலாக எவை இருந்தன என்பதையும் புரிந்துகொள்ள இப் பாடலைப் பார்க்கலாம்.

*தத்துவத்தைக் கேட்டறிய வேதமறிந்தவர்களை நாடினேன்.*
*இதைச் செய், செய்யாதே என விதிமுறைகள் நிறைந்திருந்தன அங்கு.*

*தெளிவு எதுவும் கிட்டவில்லை எச்சமயத்திலும்.*
*அகந்தை மேலோங்கி நிற்கிறது அங்கு.*

*இதனால் உன் நாமத்தை நான் பற்றினேன்.*
*உசிதம் எதுவோ: அப்படி அருள்புரி பாண்டுரங்கா!*
*உனது சொரூபத்தைக் கண்டறிய சாத்திரம் கற்றவர்களை நாடினேன்,*

*பேதா பேதங்களையே கண்டேன் அங்கும்.*
*மாறுபட்ட கருத்துகள் பலவற்றையும் கண்டேன்.*
*இறுமாப்பிலும், பிரமையிலுமன்றோ உழல்கின்றனர்.*
*உனது சொருபத்தின் நிலையறிய பௌராணிகர்களை நாடினேன்.*
*அங்கும் அமைதியைச் சற்றும் கண்டேனில்லை.*
*உலக இன்பத்தில் மனம் லயிக்க பிரம்ம ஞானத்தைப் பகர்கின்றனர்.*
*தெளிவோ, விடையோ, இவர்களிடமிருந்து பெறுவது எப்படி?*
*ஹரிதாசர்களிடம் கேட்டேன், பக்திசெய்யும் மார்க்கம் என்னவென்று.*

*உள்ளார்ந்த பக்தி ஏது அவர்களிடம்?*
*நாவினால் சொல்லுகின்றனர் நாமத்தின் மகிமையை.*
*மனமென்னவோ உலக இன்பத்தில் உழல்கின்றது.*
*கேட்டுக் கேட்டு நான் சலித்துக் களைத்துவிட்டேன்.*
*முடிவில் உன்னைச் சரணடைந்துள்ளேன் பாண்டுரங்கா,*
*உலக வாழ்வின் துன்பங்கள் எனை அச்சுறுத்துகின்றன.*
*நாமா உரைக்கின்றான்—என்னைக் கரை சேர்த்துவிடு.'* (1336)

வேத ஞானிகள் விதிமுறைகளை, 'இதைச் செய், இதைச் செய்யக்கூடாது' எனப் பேசுகின்றனர். சாத்திரம் கற்றவர் களோ பரஸ்பரம் அபிப்பிராய பேதம் கொண்டுள்ளனர். பௌராணிகர்களோ விஷய சுகங்களில் லயித்துள்ளனர். அவர்கள் மனதிலேயே அமைதியில்லை, ஹரிதாசர்களிடம் உண்மையான பக்தி பாவமில்லை. இத்தகைய அனுபவங்களினால் மனம் சலித்து, களைத்துவிட்டது. இதனால் உன் சரணங்களையே நாடி வந்துள்ளேன் என்கிறார் நாமதேவர்.

எவ்விதமான அகங்காரமோ, துவைத பாவமோ, விஷய சுகங்களினால் பால்நாட்டமோ, உள்ளத்தில் அமைதியின்மையோ இல்லாது, நீயே எனக்கு யாவுமாவாய், நீயன்றி வேறெதுவுமில்லை என்ற பாவத்துடன் இறைவனைச் சரணடைவதுதான் நாமதேவரின் படைப்பாற்றலுக்குப் பின்னிருந்து ஊக்குவிக்கும் சக்தியாகத் திகழ்ந்தது. ஆசைகள், பற்றுகள் எதுவுமின்றி தன்னைத் தூண்டிய இச் சக்தியைப் பற்றி நாமதேவரின் மனதில் பெரும் தன்னம்பிக்கை யும் இருந்தது. இன்றுவரை தன்னை (உத்தாரணம்) உய்வித்துக் கொண்ட பக்தர்களிடமிருந்து தனது நிலை வேறுபட்டது என்பதை யும் அக்கவியுள்ளம் அறிந்திருந்தது.

'ஆசைகளைத் துறந்து உன்னைச் சரணடைந்துள்ளேன்.
ஹே! நாராயணா! இதனை நீ ஏற்றுக்கொண்டாய்.
மகிழ்ச்சி கொண்டாய் என்மீது இதனால் நீ.
என்னைப் பற்றிச் சிந்திக்க முற்பட்டாய்.
அறியாப் பாலகன் துருவன். அவனை நீ ஏமாற்றிவிட்டாய்.
ஆனால் நான் அவ்வாறு ஆசைப்படவில்லை.
இலங்கையின் அதிபதியாக்கினாய் விபீடணனை
வாக்கதனை நிறைவேற்றிவிட்டாய் நீ.
உபமன்யூ பாலுக்காகப் பிடிவாதம் செய்தான்.
அப்படிப்பட்ட அறிவற்றவன் நானல்ல.
நாமா உரைக்கின்றான்—நான் இவர்களைப் போல்
அஞ்ஞானி அல்ல. என் உயிரை, உடலையே
வேண்டுமாயின் கேள்! உனக்களிக்கின்றேன்.' (1345)

'பக்த துருவன், விபீடணன், உபமன்யூ இவர்கள் ஆசையினால் கட்டுண்டிருந்தனர். இதனால் உன்னால் ஏமாற்றப்பட்டனர். துருவனுக்கு நிலையான பதவி பெறவேண்டுமென்ற ஆசை, விபீடணனுக்கு இலங்கையின் அரசு வேண்டுமென்ற ஆசை, உபமன்யூவிற்கோ பால் வேண்டுமென்ற பிடிவாதம். மனத்தில் எந்தவிதமான ஆசையோ, இச்சையோ வளர்த்துக்கொண்டு, உன்னைப் போற்றித் துதித்து வழிபடவில்லை. எனது உடல், பொருள், ஆவி யாவற்றையுமே உனக்கு அர்ப்பணிக்க நான் சித்த

மாக உள்ளேன். உன்னைச் சரணடைந்த நான் எனது பற்றுக்கள் யாவினையும் துறந்துவிட்டேன். ஆனால் நீ இப்பொழுதுதான் அதற்கு அங்கீகாரம் அளித்துள்ளாய். இதனால் நீ எனது தகுதியை அறிந்துகொண்டு சிந்தித்துப்பார்' என்கிறார் நாமதேவர்.

உலக வாழ்வில் மனம் சலித்து, வெறுத்து, உன் சரணங்களை நான் பற்றியுள்ளேன். நான் சரணடைந்துள்ளேன் என்பதே உனக்குப் பெருமை தரக்கூடியதாகும், சர்வ வல்லமை பெற்ற கிடைத்தற்கரிய மாமணியே, நான் உன்னை ஏற்றுக்கொண்டேன் என்பதால்தான் பலரும் உன் மகிமையைப் பெருமையைப் புரிந்து கொண்டனர். என்னாலன்றோ உனக்கு இத்தனை புகழ்! உண்மையில் நீ உருவம், ரூபம், ஜாதி, இனம், குலம் எதுவுமற்றவன். வேதங்கள், சாத்திரங்கள், புராணங்களில் மனம் சலித்து, வெறுத்து உன்னைத் துறந்துவிட்டனர். உனக்கு என் போன்ற பக்தன் கிடைத்தான். அதனாலன்றோ பக்தவத்சலன் என்ற புகழ் எங்கும் பரவியுள்ளது!

'ஆயிரம் நாமங்களினாலும் நீ நிறைவு பெறவில்லை.
இதுவும் எனக்கொரு அலங்காரமே!
இல்லையெனில் இந்நாமத்தின் எல்லையை யாரறிவர்?
மேகசியாமனிடமே கேள் இதனை
என்னால்தான் நீ பெருமை பெற்றாய்.
எனது வாழ்வு, எனது பாவம் உனது தாளடியில்.
நாமா உரைக்கின்றான்—கேசவா நீ புரிந்துகொள்ளக்
கூடியவனாக இருந்தால் இதனைச் சிந்தித்துப் பார் நீ.' (1344)

இறைவனைப் போற்றிப் புகழவேண்டுமென்ற ஆசை உண்டாகின்றது. அந்த உணர்ச்சி வேகத்தில் நான் தோன்றியதையெல்லாம் சொல்லிக்கொண்டே போகின்றேன்.

'பாடலில் உன் புகழ் பாட நானறியேன் பாண்டுரங்கா.
அன்புடன் உன் திருவடிகளில் எனக் கடைக்கலம் தா.
தப்பும் தவறுமாய் வாயில் எது வருகிறதோ அதனால்,
உன்னைப் பாடும் கள் வெறிகொண்டது என்மனம்.
நாவிலே, மனதிலே தோன்றுவதையெல்லாம் பாடுகிறேன்.
உனது நாமத்தை இடைவிடாமல் பாடுகிறேன்.
நான் உன்னுடையவன். எனை நீ ஏற்றுக்கொள்,
உன் நாமாவை ஹே! கேசவா என்றென்றும் கைவிடாதே.'
(1333)

நாமதேவரின் கவிபாடும் புலமைக்கு மூல ஊற்றாக இருந்த உந்துதல், 'விட்டலனும் மெய்மறந்தாடும்படியாக சொற்களைப் புனையவேண்டுமென்பதுதான்.' (1245)

**விட்டலனின்பால் கொண்டிருந்த பக்தியும் ஈடுபாடும்**

நாமதேவரின் கவித்திறனும், புலமையும் விட்டலனின் பாலுள்ள மாசற்ற பக்தியை வெளிப்படுத்துபவையாய், அதையே சுற்றிச் சுற்றி வந்தபோதிலும், விட்டலனைச் சார்ந்த சாதுக்கள், அவன் உறையும் பண்டரிபுரம் ஆகியவற்றைப்பற்றியும் உணர்ச்சிப் பெருக்குடன் நெஞ்சமுருக வருணித்துள்ளது. நாமதேவர் தனது ஒவ்வொரு அபங்கத்திலும் பரமனைப் போற்றி அவனது குணங்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். அவரது பக்தி எல்லையற்றது. கங்கு கரையின்றிப் பொங்கிவரும் ஊற்றாக உள்ளத்திலிருந்து வரும் பக்தி அது. ''உண்மையான சத்ய பாவம் என என்னைக் கூறுகின்றனர். நூல்களை ஆய்ந்தறிவதெல்லாம் வியர்த்தமே. எல்லையற்ற மகிழ்ச்சியுடன் நான் செல்லுகிறேன், அவனது இருப்பிடத்திற்கு'' என அவர் கூறியுள்ளார்.

நாமதேவரின் உள்ளத்திலே நூலறிவின்பால் அதிக நாட்டமில்லை. ஆர்வமுமில்லை. இருப்பினும் தான் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்திற்குத் தேவையான விஷயங்கள் அவரிடமிருந்தன. கிருஷ்ணலீலையின் ஒரு பாடலான 'க்வாலினி'யில் 'இடைச்சிகளை ஏமாற்றிவிட்டான். இடைச்சிகளை ஏமாற்றிவிட்டான். ஒவ்வொருவராக. 'மராடி, கானடி, முசல்மானி, கொங்கணி, குஜரணி என ஐந்து இடைச்சிகளை அவன் ஏமாற்றிவிட்டான்' என்றொரு துருவ பதம் (பாடல்). கிருஷ்ணன் அவர்களது ஆடைகளை அபகரித்துக் கொண்ட பின்னர் யமுனையில் நீராடிக்கொண்டிருந்த ஐந்து இடைச்சிகளும் தங்களது ஆடைகளைத் திருப்பித் தரும்படி கண்ணனிடம் வேண்டுகின்றனர். நாமதேவர் அந்த ஐவருடைய மொழியிலே இதனை மிக அழகாக வருணித்துள்ளார்.

'லடோபா கோவிந்தா, லடோபா கோவிந்தா, நிரவாணி ஆஜ்.
ஆட சாலியோ பாடசாலியோ, சீர் சோட்யாம் நமாரி கன்னையா,
மாரி கன்னையா பானி கே லாயா ந கேலோ'

எனக் கானடி இடைச்சி கூறியதும்,

'தேக்ரே கன்னையா, தேக்ரே கன்னையா, மைம் இஜ்ஜத் கீ படீ
கதம்ப கருங்கி, மையா கடா ஜூடா, மேரி சுனரி தே.
மேரி தே துல்லடி'

என முசல்மான் இடைச்சி கூறுகிறாள்.

தேவகி நந்தன், தேவகி நந்தன். தூ அன் ஸ்ரீபதி,
உகடி ஹிவாசி, துஜ் வின வூ கிதி
பாயா பட் தேபா. மீ யேதே காகுலதீ
மாஜீ சாடி தே, கே நாகாசே.

இது மராத்திய இடைச்சி கூறியது.

மோதி பாகவா தா தாலா. பாவகா தா தாலா.
தூ நந்தாசா ஜிலோ. மா கான் பட்கோ தீ.
பீஹிம் வான் மேலோம். கே மாஜே கோய்தோ.
கே மாஜே கோய்தோ. தேவா பாயா படலோன்.

இது கொங்கணி இடைச்சி கூறியது. இனி குஜராத்தி இடைச்சியின் பிரார்த்தனையைப் பார்ப்போம்.

ஜ்யோம் ரே மாதவஜீ, ஜ்யோம் ரே மாதவஜீ. மை ஷரண் தே
தன் கா கா கையீ பல் தயாகு துஷிம்
மாரி சாடி அபோம். ஹாதணி லே கங்கணி. (320)

தனது கவிதைச் செறிவுள்ளதாக இருக்கவேண்டுமென்பதற்காகவும், தனது திறமையை வெளிப்படுத்தவும் நாமதேவர் ஐந்து மொழிகளைப் பிரயோகித்துள்ளார். இது அவரது பன்மொழிப் புலமைக்கும், உழைப்பிற்கும் ஒரு சான்றாகும். அவரது சொல் வளம், ஆற்றல், கவிதை நயத்தைக் கண்டு மஹீபதி என்பவர் அவரைப் பாராட்டிக் கூறியிருப்பதில் 'எங்கெங்கெல்லாம் தல யாத்திரை சென்றாரோ, அங்கங்கே கவிதை இயற்றிக்கொண்டே சென்றார்' என்கிறார்.

நாமதேவரின் 'க்வாலினி' (இடைச்சி) என்ற பாடல் பக்திச் சுவை நிறைந்த மராத்தியப் பாடல்களுக்கு மூல ஊற்றாக விளங்குகின்றது. இவரது சில 'க்வாலின்' பாடல்கள் பக்தி ரசத்தில் தோய்ந்து தெய்வீக ரசானுபவத்தைத் தரும் மறக்கமுடியாத பாடல்களாகும். 'க்வாலின்'களில் கிருஷ்ண பக்தியின் ஆனந்த பரவசத்தின் லயிப்பு நிறைந்துள்ளது.

'நீருண்ட மேகங்கள் வான்வெளியில் கவிந்துள்ளன.
மின்னல் மின்னுகிறது, மேகம் குமுறுகிறதே ஹே! தாயே!
கோவிந்தனைக் காண விழைந்தோடி வருகின்றன.
மது தாரைகள் கனவேகத்துடன் பொழிகின்றன ஹே! தாயே!
களி நடனம் புரிகின்றன மயில் கூட்டம்.
காதலின் கிறக்கத்தில் அவை நீலக் கழுத்துடையவை ஆகிவிட்டன்வோ ஹே! தாயே!
நாமா உரைக்கின்றான்—என் நாயகன் ஒளி மிகுந்த விழிகளால் எனை நோக்கட்டும்
என் மனம் கோபாலனிடம் லயித்துவிட்டது ஹே! தாயே!' (308)

இந்த அபங்கத்தில் பிம்ப பாவம் மிக விரிவானதாகவும் உயிர்ப்புடன் கூடியதாகவும் உள்ளது. மிக யதார்த்தமான சித்திரம் இது. குமுறி எழும் கருமேகங்கள் வானிலே திரண்டு விட்டன. மின்னல் மின்னுகிறது. இடி இடிக்கிறது. கோவிந்தனைக் காண ஆவலுடன் விழையும் மேகங்கள் நீரைத் தாரை தாரையாய்ப்

பொழிகின்றன. மகிழ்ச்சியுடன் மயில்கள் தோகை விரித்தாடு கின்றன. அன்பின் மிகுதியால் அவை நீலக் கழுத்துடையவை யாகிவிட்டன. நாமதேவர் தன் நாயகனின் ஒளிமிகுந்த பிரகாச மான விழிகளைக் காணவும் அவனது தரிசனத்தைப் பெறவும் விழைவு கொண்டுள்ளார்.

'இரவும் கருமை, குடமும் கருமை.
யமுனையின் நீரோட்டமும் கருமை ஹே! தாயே!
வங்கியும் கருப்பு, வளையலும் கருப்பு,
கழுத்திலிருக்கும் ஒற்றை முத்துவடமும் கறுப்பு,
நான் கறுப்பு, எனது மார்க்கச்சும் கறுப்பு, இடுப்புக் கச்சையும் கறுப்பு—தாயே!
தனியாக நீர் எடுக்கச் செல்லாதே தோழி!
நீலமேக வண்ணனவனையும் உடன் அனுப்பு தாயே!
விஷ்ணு நாமாவின் நாயகியும் கறுப்பு
கிருஷ்ண மூர்த்தியும் மிகக் கறுப்பு தாயே!' (312)

முக்தி மார்க்கத்தை நாடும் சாதகர்களின் மனநிலையை இறை வழிபாட்டில் ஈடுபட்டுள்ள மேற்கத்திய எழுத்தாளர்கள் ''ஜீவாத் மாவின் கரிய இருள் மூடிய இரவு'' (தி டார்க் நைட் ஆஃப் தி சோல்) எனக் கூறியுள்ளனர். சாதனையில் ஈடுபட்டிருக்கும் நாம தேவர் தமது, சிரமங்கள் நிறைந்த அக் காலகட்டத்தை 'இருண்ட இரவு' என்ற உருவகத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இறைவனுடன் இரண்டறக் கலக்கும் இம்மனநிலை பற்றி வியப் புண்டாகிறது. இந்த அபங்கத்தில், இருண்ட இரவு, நீல வண்ண யமுனை,கரிய நிறம் கொண்ட மேனியனான கண்ணனின் திருவுருவத் தின் வருணனை, சொல்லாற்றல்,உவமித்துக் கூறும் நயம்,இறைவனை அடைய வேண்டுமென்ற தீவிரமான தாபத்தை உணர்த்தும் உத்தி, பிரிவாற்றுமை, மதுர பக்தி, நீ என்னுடையவன் என்ற நெருக்கத்தை உணர்த்தும் பாவம் முதலியவற்றைப் பார்க்கும் பொழுது, மராத்தியக் கவிதையில் இதற்கிணையான வேறு கவிதை இல்லை எனலாம்.

இறைவன், பக்தன் இவ்விருவரின் இரண்டறக் கலந்த நிலை யான அத்துவைத நிலையை வர்ணிக்கும் அபங்கத்தில் நாமதேவரின் கவிதை ஆற்றலின் முழு வீச்சினையும் காணலாம்.

'நீ வானம், நான் பூமி
நீ லிங்கம், நான் ஆவுடை
நீ கடல், நான் துவாரகை
நாமிருவரும் ஒன்றே

நீ பிருந்தாவனம், நான் பறவை
நீ துளசி, நான் மஞ்சரி
நீ குழல், நான் அதன் துளை
நாமிருவரும் ஒன்றே

நீ நிலா, நான் நிலவு
நீ நாகம், நான் பத்மினி
நீ கண்ணன், நான் ருக்மிணி
நாமிருவரும் ஒன்றே

நீ நதி, நான் அதன் கரை
நீ படகு, நான் பாய்மரம்
நீ வில், நான் அம்புறுத்துணி
நாமிருவரும் ஒன்றே

நீ வேதம், நான் துதி
நீ சாத்திரம், நான் கீதை
நீ சுகந்தம், நான் அக்ஷதை
நாமிருவரும் ஒன்றே

நாமா உரைக்கின்றான்—ஹே! புருஷோத்தமா!
உனது அன்பினால் கட்டுண்டவன் நான்
நான் உடல், நீ ஆத்மா
நாமிருவரும் ஒன்றே!' (1252)

## இறை உணர்வும், பக்தியின் பல்வேறு நிலைகளும்

நாமதேவர் விட்டலனின்பால் தனக்கிருந்த கட்டுக்கடங்காத அன்பை, பல்வேறு நிலைகளில் தன்னை இருத்திக்கொண்டு பற்பல பாவங்களை வெளியிட்டுள்ளார். இறைவனைக் காணவேண்டுமென்ற ஆற்றாமை, தவிப்பு, அவனுடன் இரண்டறக் கலந்த மெய்யுணர்வு, தோத்திரம், பிரார்த்தனை, காத்திருத்தல், எதிர்பார்த்தல், பிரிவாற்றாமை, வேதனை, என இறைவன்பால் தான் கொண்டிருக்கும் காதலை அழகுறச் சித்தரித்துள்ளார். இறைவனை மனித உறவுகளின் பல்வேறு நிலைகளில் இருத்தி, மனிதனாகப் பாவித்து, உறவாடி இனிய கற்பனைக் கவிதைகளைப் புனைந்துள்ளார். ஆனால் அவற்றிலும் தாயே! அன்னையே என விளித்து, தமது உள்ளக் கிடக்கையை, பக்தி பாவத்தை வெளியிட்டு, நாமதேவர் தனது கவியுள்ளத்தின் உணர்ச்சிகளுக்கு உருக்கொடுத்துள்ளார். அவரது சொல்லாற்றலும் கவிநயமும், பாவமும் சிறப்பாக மலர்ச்சி பெற்றுள்ளன.

'விட்டலத்தாயின் அருள் மென்மையானது.
அவளை நினைத்தாலே அன்பெனும் பாலமுதம் தருகின்றாள்.
நீ என் தாய், நான் உன் சேய்
எனக்களிக்கும் பாலமுதத்தைக் குறைத்துவிடாதே
பாண்டுரங்கா!
நீ என் தாய்மான், நான் உனது குட்டிமான்
உலக பந்தத்தை அறுத்துவிடு, ஹே! பாண்டுரங்கா!
நீ எனது பறவை, நான் உனது முட்டை
எனக்கு இரை அளிப்பவன் பாண்டுரங்கன்.
நாமதேவன் உரைக்கின்றான்—பக்தன்பால் உனது கருணையைக் காட்டு!
என்னைக் காப்பாற்ற முன்னும் பின்னும் நிற்பவனும் நீயே'
(1234)

பிரசித்திப் பெற்ற இந்த அபங்கத்தில் வாத்சல்ய பக்தியின் தீவிரமான தாபத்தை நாமதேவர் வெளிப்படுத்தியுள்ளார். இதே தவிப்பும், தாபமும் 'என்று வருவாய் என்னுயிரினுமினிய தோழா. ஓ! பாண்டுரங்கா!!—மாயி பாபா' என்றும் பல அபங்கங்களில் வெளிப்பட்டுள்ளது.

விட்டலனைக் காணவேண்டும் என்ற ஆன்மாவின் தவிப்பிற்கு இயல்பான, எளிமையான, கருத்தாழம் மிகுந்த சொற்களில் கவிதை வடிவம் தந்துள்ளார். இதயத்தைத் தொடும்படியான உணர்ச்சி மிகுந்த அபங்கங்கள் நிறைய உள்ளன. உதாரணத் திற்கு இந்த அபங்கத்தைப் பார்க்கலாம்.

இத்தனை தாமதம் ஏன்?
பக்தன் எவனுவது வழி மறித்துவிட்டானே?
விரைந்து வா, விட்டலா!
உனை அழைத்தழைத்து நா உலர்ந்துவிட்டது.
திசையெங்கும் நான் உனை வழி பார்க்கிறேன்.
என்னுள்ளத்தில் நம்பிக்கை உள்ளது.
என்னுயிரானவன் எப்பொழுது வருவான்.
நாலுகரம் கொண்டவனை எப்பொழுது அணைப்பேன்.
நாமதேவனின் உள்ளத்தில் அன்பு பொங்கி எழுகின்றது.
உடல் நிலத்திலே புரள்கின்றது.' (1267)

இந்த அபங்கத்தில் பக்தியின் ஆற்றுமை மட்டுமல்ல, இறை வனைச் சந்திப்பதில் ஏற்படும் தாமதத்தைப்பற்றிய காரணம், கவலை, அவனைக் கூவி அழைத்ததால் தொண்டை வறண்டுபோன நிலை, பத்து திசைகளிலிருந்தும் அவனை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் ஏக்கம், காணவேண்டும் அவனை என்ற தவிப்பு, தன் பக்தியின்மீதுள்ள நம்பிக்கை, இறைவன்தான்

தன்னுயிர் என்ற பாவம், அவனை ஆரத் தழுவிக்கொள்ளவேண்டு மென்ற துடிப்பு—முதலியவை நாமதேவரின் இதயத்தில் ஏற்பட்டுள்ள சாத்விகப் பிரேமையின் உச்சநிலையை, தனது உயிரையும் உடலையும் இறைவனுக்குச் சமர்ப்பித்துவிட்ட அந்த பக்திப் பெருக்கத்தை, மிகக் குறைவான, எளிய சொற்களிலே, பல்வேறு அற்புதக் காட்சிகளாக, நம்முன்னே விரித்துக் காட்டியுள்ளார் நாமதேவர் என்றால் மிகையாகாது.

ஆதி கிரந்தத்தில் 'ராகு பேரவு' என்ற பாடலில் அவர் கூறுகிறார்:

*ஜெய்ஸி பிரீதி பாரிக் அவுர் மாதா*
*ஐசா ஹரி சேதி மநு ராதா.*
*பிரணவே நாமதேவு லாகி பிரீதி*
*கோவிந்து பசே ஹமாரே சீதி. (44) கிரந்த்சாகப்.*

'தாய்க்கும் குழந்தைக்குமிடையே உள்ள வாத்சல்யம் போன்றதுதான் என்னுள்ளத்தில் ஹரியின்பால் தோன்றியுள்ள அன்பு. என் மனம் அவன்பால் ரமித்துள்ளது; என் உள்ளத்தில் அவன் நிரந்தரமாக வாசம் புரிகின்றான்' என்கிறார் நாமதேவர்.

### நாமதேவரின் கற்பனைச் செறிவு

இறைவனைச் சந்திப்பதும் உறவாடுவதும், ஊடல்கொள்வதும் நாமதேவரின் பக்தி காவியத்தில் இனிமையும் சுவையும் நிறைந்த அம்சங்களாகும்.

*'இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு நிற்கிறான்.*
*பார்க்கலாம் எப்படிப் போய்விடுகிறான் என்று.*
*கேசவா—என் கணக்கைத் தீர்த்துவிடு, தீர்த்துவிடு.*
*எண்பத்திநான்கு லக்ஷம் பிறவிகளிலும் நின் பணிபுரிந்தேன்.*
*என் கடனைத் தீர்த்துவிடு. கேசவா!*
*இல்லாவிடில் பிடித்துக்கொள்வேன் உன் சேவகனை.*
*நாமதேவன் உரைக்கின்றான், வீணே என்னைத் துன்புறுத்துகின்றாய்.*
*பித்தனாகிவிட்டேன் நான். உன்னிரு பாதங்களை விடமாட்டேன்' (1353)*

இங்கு கணக்குத் தீர்ப்பது என்ற கற்பனையும், கடனைத் திருப்பித் தராவிடில் எனக்குக் கோபம் வந்துவிடும், உன் பாதங்களைப் பற்றிக்கொள்வேன், விடமாட்டேன் என்பதும் அழகிய கற்பனைகளாகும்.

'கற்பகத் தருவின் அடியிலே அமர்ந்திருப்பவனுக்கு.
அவன் வேண்டிய பழம் கிட்டவில்லை,
காமதேனுவைக் கறந்தவன்
உபவாசத்தினுல் ஏன் மடியவேண்டும்?
மௌனமாக இரு, மௌனமாக இரு.
எது நடக்கவேண்டுமோ, அது நடக்கும்.
போகிறவன் போகட்டும்.
நாமா உரைக்கின்ருன்—கேசவா!
உன்னிடம் என்ன பயம்?
சாது மகந்துகளின் முன்னிலையில்
உனது குறும்புத் தனத்தை நான் கூறிவிடுவேன்' (1360)

சாதுக்கள், மகந்துகளிடையே உனக்கு அவப்பெயரை உண்டாக்குவேன். ஆசைப்பட்டு நீ காயும் கறியும் கேட்கிருய். உனக்கு வெட்கம் இல்லை. உனது பெருமையை எத்தனை தான் எடுத்துரைப்பது? இனி உன்னை அவமானப்படுத்தாமலிருக்கப் போவதில்லை. (1361) இறைவனைத் தனது துதி மலர்களால் அர்ச்சித்த வண்ணமிருந்த நாமதேவர் தனக்கினியனைத் தழுவிக் கொண்டே அவனை ஏன் நிந்திக்கின்ருர் என்பதற்கு ஓரிடத்தில் பதில் கூறுகிருர்:

உன்னையே துதிப்பேன், நிந்திப்பேன்.
பிறரது குணதோஷங்களைக் கொள்ளேன் நான்.
நாமதேவன் உரைக்கின்ருன்—நான்
உனது அண்மையையே நாடுகின்றேன்.
எனக்கு வைகுண்ட பதவி அளித்துவிடு!'

உனது சரணங்கள்பால் எனக்குள்ள பற்றும் பக்தியும் என்றும் அகலாதிருக்கவேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை. இதன் பொருட்டு உனது அண்மையை, நெருக்கத்தை நான் எத்தனை நாடினுலும் அது மன்னிக்கக்கூடியதே.

ஊடலின் ஒரு கற்பனையில் கவிதை நயத்தைக் காணுங்கள்.

'பதிதர்களை உய்விப்பவன் எனக்கேட்டு விரைந்தேன் உன் வாயிலுக்கு
கண்டேனில்லை பதித பாவனனை, செல்லுகிறேன் திரும்பி.
கொடுப்பதைவிடப் பெற்றுக்கொள்ளுவதில் நீ தாராள மனதுடையவன்.
ஹே! கிருஷ்ணு! உனது வாசலிலேயே ஏன் தவம் கிடக்க வேண்டும்?
பதித பாவனன் என்ற பெயரைத் துறந்துவிடு. இனியும் கர்வம் கொள்ளாதே

பதித பாவனனென்ற பெயரை உனக்களித்தவர் யாரோ?
கரத்திலே குடுகுடுப்பை ஏந்தி மூவுலகத்திலும் இதனை பறை
சாற்றப் போகிறேன்.
பதித பாவனன் தான் நீ— ஆனால் நீ பெரும் மோசக்காரன்.
நாமா உரைக்கின்றான் உனது செய்கை எதுவும் பிடிக்கவில்லை
எனக்கு
நான் வேண்டுவது இதுதான். உன்பால் நான் கொண்டுள்ள
அன்பும், பக்தியும் என்றென்றும் நிலைத்திருக்கட்டும். (1454)

இப்பாடலிலும் அன்புறவு கொண்ட உள்ளத்தின் நெருக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நிந்தாஸ்துதியில் துவங்கி, சரணாகதி தத்துவத்தில் முடிந்திருக்கிறது இப்பாடல்.

'ஆழ்ந்த உறக்கமது கொண்டபோது, படுக்கையில்
பாம்பிருந்தாலென்ன? ஊர்வசிதான் இருந்தாவென்ன?
உலக இன்பங்களின்பால் எனது பார்வை இதுதான்.
கேஷிராஜன் என்பால் அத்தகைய கருணைபுரிந்துள்ளான்.
அறிவார்ந்த நிலையிலே யாவும் சமமே.
பொன்னும், சாணமும் சமமாகத் தெரிகின்றன.
ரத்னமும், கல்லும் ஒன்றுபோல்த் தோன்றுகின்றன.
மேலிருந்து சுவர்க்கமே வந்தாலும், அனலே பொழிந்தாலும்
நின் பாதங்களையே நான் பற்றியுள்ளேன்,
எனது மனநிலையில் பேதம் ஏதுமில்லை, இல்லை.
நாமா உரைப்பது இதுதான்.—எனைப்போற்றினாலும்
தூற்றினாலும், நான் பிரம்மானந்தத்தில் ஒன்றிவிட்டேன்.'
(1522)

இந்த இடத்தில் நாமதேவர் தமது பிரம்மானந்த நிலை குறித்து விளக்கியுள்ளார். துவைத நிலையைக் கடந்து பிரம்மானந்தத்தில் தோய்ந்து விட்ட நிலை அது. நல்ல உறக்கத்திலாழ்ந்திருப்பவன் தன்னருகில் படுக்கையில் பாம்பிருந்தாலும், ஊர்வசியிருந்தாலும் அதைப் பற்றிச் சிந்திக்கப் போவதில்லை.

1769—வது அபங்கத்தில் 'என்னை நானே காண்பதற்கு எந்த தீபத்தை ஏற்றட்டும். கதிரவனும், நிலவும் யாரிடமிருந்து ஒளி பெறுகின்றனரோ அவனை எப்படிப் பார்ப்பேன்?' என மிக எளிமையாகத் தன் கருத்தை வெளியிட்டுள்ளார். மனித வாழ்க்கை ஒவ்வொரு கணமும் மரணத்தை நோக்கி எவ்வாறு சென்றுகொண்டிருக்கிறது என்பதை, கழுவை நோக்கித் 'திருடனை இழுத்துச் செல்வதுபோல், அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் கூற்றுவன் உள்ளது போல்' எனப் பொருத்தமான உவமையிட்டுக் கூறுகின்றார். இந்துக்கள் ஆலயத்தில் பூசிக்

கின்றனர், முசல்மான்கள் மசூதியில். ஆனுல் நாமதேவன் வழி படும் தெய்வம் ஆலயத்திலுமில்லே, மசூதியிலுமில்லே'' என்கிருர் ஓரிடத்தில்.

ஹிந்து பூஜே தேவரா, முசல்மானு மசீத்
நாமே சோயி சேவயா, ஜஹ் தேவரா ந மசீத்.

நாமதேவரின் இந்த இறைவன் உலகெங்கும், சிருஷ்டி யாவிலும் வியாபித்து நிற்கிருன். எங்கும் நீக்கமற நிறைந்திருந்த அவன், அவர் நினேக்கும்போதெல்லாம், நினேத்தவடிவில், உருவத்தில் சிருஷ்டி முழுவதிலும் அவர் முன் காட்சியளித்தானே என்னவோ? பால்ய லீலே, கிருஷ்ண லீலே, நாம மகிமை, ஆத்ம சரிதம், உபதேசம், ரூபகம், உருவகம், பூபாலி, ஆரத்தி, சரிதம் எனப் பல்வேறு வகைப்பட்ட வசன நூல்களேயும் அவர் படைத் துள்ளார். ஆயினும் இவற்றின் மூலம் பௌராணிகக் கதைகளேப் பார்க்கும்போது இக்கதைகளும், சம்பவங்களும், உரையாடல் களும் நாமதேவரின் படைப்பாற்றலினுல் எத்தகைய உயர்வும், மெருகும் பெற்று பாவ கீதங்களாக, செறிவுள்ள கவிதைகளாகி விட்டன என்பதைத் தெளிவாகக் காண்கின்ருேம்.

'உள்ளே உறைவது உனக்குத் தெரியும்'

நாமதேவரின் கவி புனேயும் ஆற்றல், ஞானதேவர், ஏகநாதர், ராமதாசர் போன்றவர்களின் படைப்புகளேப்போல் அறிவுபூர்வ மானவை மட்டுமல்ல, அசேதனமானவையும் ஆகும். இதனுல் நாமதேவருக்குக் கவிதைநோக்கு அல்லது காவிய லட்சியம், கொள்கை ஏதுமில்லே எனக் கருதப்படுகிறது. இவ்வாறு கருதுவது சரியல்ல.

விட்டலன், பண்டரிபுரம், சாதுக்கள், இந்தச் சூழலில்தான் நாமதேவரின் கவிதை ஆற்றல் தனிச் சிறப்புடன் வெளிப்பட்டுள் ளது. அவரது இறையுணர்வும், பக்தி பாவமும் பொங்கி எழு கின்றன. மெய்மறந்த நிலேயில், ஊற்றுப்போல் சுரந்துவரும் சொற்களில் அணி அலங்காரங்கள் மிகுந்த பாடல்களே இயற்றியுள் ளார் என்பது உண்மைதான். நாமதேவர் இயற்றியுள்ள 'யுகே அட்டாவீஸ் விடேவரி உமா' என்ற ஆரத்தியும் 'சேஜாரத்தி'யை யும் கூருது மகாராஷ்டிரத்தில் எந்தவொரு தார்மீக உற்சவமும், விரதத்தின் 'சாங்கதாவும்' பூர்த்தி அடைவதில்லே.

'நான் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்குவேன்.
உனது சரணங்களில் வீழ்ந்து வணங்குவேன்.
விழிகளால் உனது திருவுருவத்தைத் தரிசிப்பேன்.

அன்புடன் ஆலிங்கனம் செய்துகொள்வேன்,
ஆனந்தத்துடன் உனைப் பூசிப்பேன்.
பக்திபாவத்துடன் ஆரத்தி எடுப்பேன் என
நாமா உரைக்கின்றான். (2097)

இந்த சேஜாரத்தி பார்ப்பதற்கு எளிமையானதாகத் தோன்று கிறது. இதில் கிரியா தீபக் அணி அலங்காரம் இயல்பாக அமைந் துள்ளது. இவ்விதமான எளிய, அலங்கார அணிகள் ஏதுமின்றி, பாவமும் உணர்ச்சியும் நிறைந்த அபங்கங்களைக் காட்டிலும் நாம தேவரின் அதிகமான பாடல்கள், சொல்லலங்காரங்களுடன் கூடியவையாய், புதிய புதிய கற்பனைச்செறிவும், பரந்த பார்வை யும், உள்ளார்ந்த உணர்ச்சி வேகமும் கொண்டவை. படைப் பாற்றலின் சிறப்பை உணர்த்தும் அழகிய சொல்லாற்றலும், இனிமையும், ரசானுபவம் நிறைந்த உருவக உத்திகளும் கொண்ட சுவையான, ரசமான பாடல்கள்தான் எண்ணிக் கையில் அதிகமானவை, உதாரணத்திற்கு இரண்டொரு அபங் கங்களே போதுமானவை.

உலகில் துன்பம் எவ்வாறு வரிசையாக நேருகிறது என்பதை அவர் காட்டுகிறார்.

'நாடு பாபம் செய்கிறது, அரசன் அதனை அனுபவிக்க நேரிடு கிறது.
அரசனின் புரோகிதரும் கூட.
தரும சாத்திரங்கள் கூறுவதை யாவரும் அறிவர்.
ஆனால் அதன் உட்கருத்தை எவரும் அறிந்திலர்.
சீடன் பாபம் செய்கிறான். குருதேவர் அதனை அனுபவிக்க நேரிடு கின்றது.
மனைவியின் பாவம் புருஷனுக்கு.
நாமா கூறுகின்றான்—மக்கள் மாயையில் உழல்கின்றனர்
உலக வாழ்வெனும் ஊஞ்சலில் ஊசலாடுகின்றனர்.' (620)

இந்த அபங்கம் நாமதேவரின் வியவகார ஞானத்தையும், சாஸ்திரங்களில் அவருக்கிருந்த புலமையையும் காட்டுவதற்குப் போதுமானது. ''லௌகிக வியவகாரங்கள் எதுவும் எனக்கு நினை வில்லை. கற்பனை ஏதும் தோன்றுவதில்லை. கைத்தாளமும் திண்டி யும் எடுத்துக்கொண்டு யாவருடனும் ஆடிப் பாடுகிறேன். இதனால் என் உள்ளம் இன்பம் அடைகின்றது'' (994) எனக் கூறுவது மிகவும் அர்த்தமுள்ளதாகவும், விநயமுள்ளதாகவும் இருக்கிறது.

விட்டலனுக்குக் கானடி மொழி தெரியும்.
அவரது மொழி புண்டரீகனுக்குத் தெரியாது.
இருபத்தியெட்டு யுகங்கள் கழிந்துவிட்டன.

பேச்சு வார்த்தையில்லை இருவருக்குள்ளே.
இடுப்பிலே கரம் வைத்துக்கொண்டு
பீமா நதியின் கரையிலே நிற்கிறான் அவன்
நாமா உரைக்கிறான் எனது இறைவன்
பக்தர்களுக்காகவே இங்கு உறைகின்றான் (431)

இந்த அபங்கத்தில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது 'ஸ்வலாவோக்தி அலங்காரமும்', உயிர்ப்புடன் கூடிய பாவமும் தெரிகின்றது. சற்று சூட்சுமமாகப் பார்க்கும்போது இதன் ஒவ்வொரு சொல்லிலும் அச்சொல்லுக்குரிய பொருளுக்கு அப்பாற்பட்ட ஓர் அர்த்தம் தொனிப்பது தெரியும். அது அசேதனமானது (உயிரோட்டம் இல்லாதது) எனக் கூறிவிட இயலாது. ''உள்ளுக்குள்ளே உறைந்திருப்பதை நீ வெளியிலே காண்கிறாய். வானத்திற்கு வயிறேது, முதுகேது?'' எனக் கூறுவதை உண்மையெனக் கொள்ளவேண்டியுள்ளது. ஞானதேவரின் வாய்மொழியில்—''சசேதன் அசேதன் யாவும் உனக்கு சோபை தருகின்றது. யாவும் கற்றறிந்தவனின் இறக்கை உனக்குத் தேவையில்லை.''

### கவித்துவமும் தனித் தன்மையும்

மராத்திய மொழியில் பக்த கவிஞரான நாமதேவரிடம் மட்டும்தான் கவித்திறனும் அவரது ஆளுமையும் இரண்டறக் கலந்துள்ளது எனலாம். அவரது எந்த அபங்கத்தைக் கேட்டாலும் அதனை இசைத்துக்கொண்டிருக்க மனம் விழைகின்றது. அவ்வாறு மனத்திற்குள்ளே மெல்லக் கூறி முணுமுணுக்கும்போதும் அவரது கவிநயமும், பக்தி பாவமும் ஒன்றிக் கலந்திருக்கும் உணர்வு உண்டாகின்றது. அவரது அபங்கங்களை வரிசைப்படுத்தி, வகைப்படுத்தும்போது, அவர் தம்மைப் பற்றிக் கூறியுள்ளவை, இறை பக்தியுணர்வு கொண்டவை எனத் தனிப்படுத்திப் பிரித்துப் பார்க்க இயலாமலிருக்கிறது. ஏன் எனில், தமது வாழ்க்கையைப்பற்றிக் கூறியுள்ள ஒவ்வொரு அபங்கத்திலும் பக்திச் சுவை மிளிருகின்றது. பக்தி ரசமிகுந்த கவிதைகளான அபங்கங்களிலிருந்தே, நாமதேவர் எனும் தனி மனிதர் எட்டிப் பார்க்கின்றார்.

சிலர் மகான்களாக உள்ளனர். ஆனால் அவர்களது கவிதை புனையும் ஆற்றல் அவர்களைவிட மகத்தானதாக உள்ளது. இதற்கு மாறாக, சிலருடைய கவிதை பேராற்றல் மிக்கதாய் உள்ளது. அவர்களது தனித்தன்மையும், ஆளுமையும் அதைவிட செல்வாக்கு மிக்கதாய் உள்ளது. நாமதேவரைப் பொறுத்தவரையில் இவ்வாறு இனம் பிரித்து பேதம் காட்ட இயலாது. அவரது பெயரிலேயே 'நாமம்' 'தேவ' எனும் அபங் உள்ளது. தேவனின் கிருபை

யினால் நாமா தேவ மயமாகி இருக்கலாம். நாமாவின் இணையற்ற பக்தியினால் தேவன் நாம மயமாகிவிட்டான். இந்த அபங் வாணி இவ்வகையில் புனிதம் பெற்றுவிட்டது.

ஜனபாயி யாருடைய வாக்கை யார் எழுதிக்கொண்டிருக்கின்றனர் எனக் கூறும்பொழுது ஒரு அபங்கத்தில் ஞானதேவரின் பாடல்களைச் சச்சிதானந்த பாபாவும், நிவிருத்தியின் வாக்குகளைச் சோபாவும், முக்தாபாயின் பாடல்களை ஞானதேவரும், சாங்க தேவனின் வாக்குகளை சியாமா காசாரும், சோகாமேளருடைய பாடல்களை அனந்தபட்டும் எழுதியுள்ளதாகக் கூறுகின்றாள். அப்படியென்றால் நாமதேவரின் திருவாக்குகளை யார் எழுத்திலே வடித்தனர்? சாட்சாத் பாண்டுரங்கனே அவற்றை எழுத்திலே வடித்ததாக ஜனபாய் சொல்லுகின்றாள், இதனை உருவகம் எனக் கொண்டாலும்கூட இதிலிருந்து நாமாவிற்கும் பாண்டுரங்கனுக்கும் உள்ள, நெருங்கிய ஆத்மார்த்தமான உறவு வெளிப்படுகின்றது.

நாம அச்சா ஹை, நாமதேவ அச்சா ஹை
ஏக் ரூப அச்சா ஹை, பரமாத்மா.

'நாமம் நன்று நாமதேவன் நன்று,
பரமனும் ஒன்றே, அதுவே நன்று'

என நாமதேவரின் சமகாலத்தவரான பர்சா பாகவத் எழுதியுள்ளார். அவரது உவமையைப் பின்னும் அழகுறக் கூறுவோமானால், கொதிக்கும் பாலின் மீதுதான் ஏடு படிகின்றது. இதைப் போன்றே மூவகைத் தாபங்களினால் வெதும்பி, வெம்மையுற்ற நாமதேவரின் ஆளுமையின்மீது பொங்கி எழுந்த கவித்துவம் எனும் ஏடு படிந்துள்ளது. பாலின்மீது படிந்துள்ள ஏடு பாலிலேயே கலந்துவிடுவதுபோல் நாமதேவரின் படைப்பாற்றலும் கவித்துவமும், அவரது தனித் தன்மையுடன் இரண்டறக் கலந்துவிட்டன.

## நாமதேவர் இயற்றிய நூல் விவரம்

1. நாமதேவ க்ருத சிவராத்திரி மகாத்மியாஞ் சே அபங் —1847.
2. நாமதேவ க்ருத தீர்த்தாவளி சே அபங்—1862.
3. நாமதேவ க்ருத ஞான தேவாச்யா சமாதீசே அபங் (தொகுப்பு—ரா. ஸ்ரீ. கோங்கலேகர்)—1863.
4. நாமதேவவாசி காதா (—ரா. ஸ்ரீ. கோங்கலேகர்)—1881.
5. ஸ்ரீநாமதேவாசி வ த்யாஞ்சே குடும்பாந்தில வ சமகாலீன் சாதூஞ்சயா அபங் காஞ்சிகாதா (துகாராம தாத்யா) —1894.
6. ஸ்ரீநாமதேவ மகராஜ் யாஞ்சியா அபங் காஞ்சி (ஜனுபாயி யாஞ்சியா அபங்கா சஹ (காதாபஞ்சக்) (திரியம். ஹ. ஆவடே)—1908.
7. ஸ்ரீநாமதேவ மகராஜ் யாஞ்சியா அபங் காஞ்சி (ஜனுபாயி, நாரா, மஹாதா, கோந்தவிடா, பரிசா பாகவத, கோதாயி, ராஜாயி, லாடாயி, ஆவுபாயி, லிம்பாயி, யாஞ்சா அபங்காசஹ (தொகுப்பு—த்ரியம், ஹ. ஆவடே)—1923.
8. ஸ்ரீநாமதேவாஞ் சாம் காதா—(தொகுப்பு—விஷ்ணு நரசிங்க ஜோக் சித்திர ஆவிருத்தி 2)—1931.
9. நாமதேவராயாஞ்சி சானத காதா (தொகுப்பு—ப்ர. சீ. சுபந்த் கண்ட் 1 சே 4—1946, 51,54,58).
10. நாமதேவாஞ்சி பஜனே (தொகுப்பு—விநோபா பாவே)—1954.
11. நாமயாசி அமிருதவாணி (தொகுப்பு—ஹரி ஷீதர் ஷேணோ லீகர்)—1966.
12. சகல சந்த காதா—பாக். 1,2 (தொகுப்பு—காசிநாத் அனந்த ஜோஷி;)—1967.
13. நாமதேவ க்ருத பாலகிரீடா அபங் (தொகுப்பு—மாதவ சந்திரோபா).
14. நாமதேவ ஆணி ராமதாஸ யாஞ்சே அபங் (சர்வ சங்கிரஹா மதூன்).
15. நாமதேவாஞ்சி அபங்க காதா (மகாராஷ்டிர சர்கார் பிரகாஷன்).

## நாமதேவர் பற்றிய நூல் விவரம்


மராத்தி நூல்கள்

1. ஆஜ் காவ் கர். ஜ. ர.—சந்த சிரோன்மணி நாமதேவ மகராஜ் ஆணி த்யாஞ்சே சமகாலீன் சந்த்–1941.
2. ஆஜ் காவ்கர். ஜ. ர.—பிராசீன் மராடி சந்த கவி பாக். 1—1957.
3. இனும்தார் ஹேமந்த விஷ்ணு—சந்த் நாமதேவ 1970.
4. உத்தவ சித்தன—பக்த கதாமிருத ஸார்—1902.
5. கேர் பாலசந்திர தத்தாத்திரேய—ஆஷாடி கார்த்திக்—1952.
6. ஜோஷி சங்கர புருஷோத்தம்—பஞ்சாபாதீல நாமதேவ்—1940.
7. ஜோஷி. ச. க்ரு—தாடி உதடா ஞானேஸ்வரா-1958.
8. டேரே ராமசந்திர சிந்தாமண்—சந்தாஞ்சியா ஆத்ம கதா—1967.
9. டேரே ராமசந்திர சிந்தாமண்—சந்தாஞ்சியா சரித்திர கதா.
10. துல்புலே கணேஷ் விஷ்ணு—நாமதேவ ஆத்யாத்மிக சரித்திர வ ஞானதீப—1959.
11. துல்புலே சங்கர் கோபால்—பாஞ்ச் சந்த் கவி—1962.
12. தேஷ்பாண்டே அச்சுத நாராயண்—பிராசீன் மராடி வாங் மயாசா இதிகாச, பாக். 1, உத்தரார்த்த—1968.
13. தேப பாண்டே பால சங்கர்—சப்த சிருஷ்டிசே ஈசுவர்—1960.
14. நாயிக் சாந்தாராம் ஜிவாஜீ—ஸ்ரீநாமதேவ சரித்திர—1908.
15. நிரந்தர கங்காதர பாலசந்திர—மராட்டி வாங் மயாசா பராமர்ஷ—1957.
16. பாங்கார்கர் லக்ஷ்மண ராமசந்திர—மராடி வாங் மயாசா இதிகாச—கண்ட் 1—1932.
17. பாட்சகர் பண்டரீநாத நாராயண—ஸ்ரீ சந்தசிரோன்மணி பாலபக்த நாமதேவ மகராஜ் ஹே தரோ டேகோர் ஹோதே-காய் 1—1935.

18. பேண்ட்சே சங்கர் தாமோதர்—ஞானதேவ் ஆணி நாமதேவ் 1969.

19. பைடண்கர் அனந்த்—பாஞ்ச் சந்த் சரித்திரே—1869.

20. பிரியோல்கர் அனந்த் காகபா—ஷிகாஞ்சயா ஆதிகிரந் தாதீல நாமதேவ–1938.

21. பாவே விநாயக லக்ஷ்மணன்—மகாராஷ்டிர சாரஸ்வத் (ஆ. 5 வீ)—1963.

22. மஹீபதி—பக்த லீலாமிருத—1904.

23. மஹீபதி—பக்த விஜய—1950.

24. மாண்டவகர் பாலு—சந்த் நாமதேவ தர்சன்–1962.

25. முனே மாதவ அப்பாஜி—ஸ்ரீ நாமதேவ சரித்திர–1952.

26. ராணே ஜீவராவ். பீ. எஸ்—சந்தசிரோன்மணி ஸ்ரீநாமதேவ மகராஜ் யாஞ்சி வம்சாவலி.

27. ரானடே ராமச்சந்திர தத்தாத்திரேய—சந்த வசனுமிருத–1962.

28. ரானடே ராமச்சந்திர தத்தாத்திரேய—மராடி சந்த வாங்மய தீல பரமார்த்த மார்க்க—(இங்கிரீஜீதூன் பாஷாண்தர் க்ரு.வே. கஜேந்திர கட்கர்)–1965.

29. ரேலேகர். கோ.நா.வ.பிடே.ய.த—மகாராஷ்டிரீய சந்த் வாங்கமய வ ஜீவன் (வியாக்கியான மாலா)–1952.

30. சிகரே தாமோதர நர்ஹர்—மராடீ சா பரிமல் கண்ட. 1–1952.

31. ஷேண்டே சரோஜினி—விஷ்ணுதாச நாக் யாஞ்சா மகா பாரதா சா விவேசனுத்மக் அப்யாஸ் (அப்பிரகாஷித் நிபந்த்) –1960.

32. சர் தேசாயி யஷ்வந்த் சூரியராவ்—ஸ்ரீ நாமதேவ மகராஜ்—பூமிகா—கார்ய—போத்–1950.

33. ஸ்ரீ நாமதேவ தர்ஷன் (லேக் சங்கிரஹ்)–1970.

**இந்தி நூல்கள்**

34. பாபு பூரணதாஸ்—ஜன்மசாகி ஸ்ரீ நாமதேவஜ் பாக். பஹ்லா இ.ச.—1777.

35. பாரட்க்கே மாதவராவ் கோவிந்த் (சம்பாதக்) ஸ்ரீசந்த் நாமதேவாஞ்சி சார்த்த ஹிந்திபத்—1968.

36. மிஷ்ர பகீரத்—சந்த் நாமதேவ் கி ஹிந்தி பதாவளி.

37. மிஷ்ர ராமச்சந்திர—சந்த் நாமதேவ் அவுர் ஹிந்தி பத சாகித்திய.—1949

38. மோகன்சிங் தீவாஞ—பக்த சிரோன்மணி நாம தேவ்கி நயீ ஜீவனி, நயீ பதாவளி—1949.

39. சர்மா விநய மோகன்—ஹிந்தி கோ மராடி சந்த்தோன் கி தேன்—1957.

ஆங்கில நூல்கள்

40. ஏபட் ஜஸ்டின் ஈ—ஸ்டோர் மாலா—1929.

41. பகத்ராம்—ஸ்ரீஸ்வாமி நாமதேவ், கோமான்,—1936.

42. லாரேன்ஸ்—கோர்ட பெயிண்டர்ஸ் ஆஃப் கிரேட் முகல்ஸ். ஆக்ஸ்ஃபோர்ட்—1921.

43. மைகாலிஃப். எம்.ஏ.—தி சிக் ரிலிஜன்; இட்ஸ் குருப் சேக்ரெட் ராயிடிங்ஸ் அண்ட் ஆர்தர்ஸ் வால்யூம் 6, ஆக்ஸ் ஃபோர்ட்—1909.

44. ரானடே. ஆர்.டி.—மிஸ் டிசிசம் இன் மகாராஷ்டிரா—1933.

45. ரானடே, ஆர்.டி.—பாத் வே டு காட் இன் மராடி லிட்ரேச்சர்—1961.

46. யுனஸ்கோ கலெக்ஷன்—தி சேக்ரெட் ராயிடிங்ஸ் ஆஃப் சீக்ஸ்—1969.

47. மாச்வே (டாக்டர்) பிரபாகர்—நாமதேவ்—1968, பஞ்சாப் யூனிவர்சிடி, பாடியாலா.

# இந்திய இலக்கியச் சிற்பிகள்

## இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்

லட்சுமி நாத பெஸ்பருவா (ஹேம் பருவா) *க. த. திருநாவுக்கரசு* | கபீர் (பிரபாகர் மாச்வே) *தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார்* | கேசவஸுதர் (பிரபாகர் மாச்வே) *இராம. கோபிநாதன்* | ஈசுவர் சந்திர வித்யாசாகர் (ஹிரண்மய் பாணர்ஜி) *இராம. கோபிநாதன்* | ராஜாராம் மோகன் ராய் (சௌமியேந்திரநாத தாகூர்) *க. த. திருநாவுக்கரசு* | பிரேம் சந்த் (பிரகாஷ் சந்திர குப்தா) *சரஸ்வதி ராமநாத்* | குமாரன் ஆசான் (கே. எம். ஜார்ஜ்) *கே. சி. சங்கரநாராயணன்* | தாருதத் (பத்மினி ஸென் குப்தா) *ஆ. சீனிவாசராகவன்* | வீரேசலிங்கம் (வி. ஆர். நார்லா) *நா. பார்த்தசாரதி* | ஸ்ரீ அரவிந்தர் (மனோஜ் தாஸ்) *பி. கோதண்டராமன்* | மீராபாய் (உஷா நில்சன்) *எஸ். கந்தசாமி 'துறைவன்'* | B. M. ஸ்ரீகண்டய்யா (A. N. மூர்த்திராவ்) *இரா. மதிவாணன்* | சந்துமேனன் (டி. சி. சங்கரமேனன்) *கு. இராஜவேலு* | காஸி நஸ்ருல் இஸ்லாம் (கோபால் ஹால்டார்) *கே. பி. எஸ். ஹமீத்* | வள்ளத்தோள் (ஹிருதயகுமாரி) *மா. இளையபெருமாள்* | பசவேஸ்வரர் (H. திப்பேருத்ர சுவாமி) T. K. *நாகாம்பாள்* | பாணபட்டர் (கே. கிருஷ்ண மூர்த்தி) *பெ. திருஞான சம்பந்தன்* | பக்கிம் சந்திர சாட்டர்ஜி (சு. ச. ஸென் குப்தா) *அசோகமித்திரன்* | மகரிஷி தேவேந்திரநாத தாகூர் (நா. சௌதுரி) *கா. மீனாட்சிசுந்தரம்* | தாராசங்கர் பந்தோபாத்யாயர் (மஹாஸ்வேதாதேவி) *கு. இராஜவேலு* | நானுலால் (U. M. மணியார்) *நா. பார்த்தசாரதி* | ஜீவனானந்த தாஸ் (சி. தாஸ் குப்தா) *க. த. திருநாவுக்கரசு* | பாரதியார் *மூலமும் தமிழாக்கமும்* (பிரமோ நந்தகுமார்) | வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் (வேதம் வேங்கடராய சாஸ்திரி) *சி. செல்லப்பன்* | புத்ததேவ போஸ் (அலோகரஞ்சன் தாஸ் குப்தா) *த. வே. வீராசாமி* | மாணிக்கவாசகர் *மூலமும் தமிழாக்கமும்* (G. வன்மீகநாதன்) | ஜெயதேவர் (சுநீதிகுமார் சாட்டர்ஜி) *டி. எஸ். பார்த்தசாரதி* | மாணிக் பந்தோபாத்யாயர் (சரோஜ் மோகன் மித்ரா) *எஸ். கந்தசாமி 'துறைவன்'* | தமிழ்த் தாத்தா (கி. வா. ஜகந்நாதன்) கல்ஹணர் (சோம்நாத் தர்) *எஸ். கிருஷ்ணமூர்த்தி* | சரளாதாசர் (கிருஷ்ண சந்திர பாணிகிராகி) *தே. ஆண்டியப்பன்* | தத்தகவி (அனுராத போட்தார்) *இராம. கோபிநாதன்* | நர்மதாசங்கர் (குலாப்தாஸ் ப்ரோக்கர்) *ஆதவன் சுந்தரம்* | பக்கிர்மோகன் சேனுபதி (மாயாதர் மான்சின்ஹா) *கே. சி. கமலையா.*

*(அடைப்புக்குள் உள்ளது மூல ஆசிரியரின் பெயர்)*

மகாராஷ்டிர பக்திப் பரம்பரை நாமதேவர் முதல்வர்; முதன்மை யானவரும்கூட. இந்த பக்திக் கவிஞர் அறிமுகப்படுத்திய 'அபங்' என்ற சந்தக் கவிதை மராட்டியிலும் பல்வேறு இந்திய மொழி களிலும் வழக்கில் உள்ளது.

சீக்கிய நெறியைத் தோற்றுவித்த குருநானக், இறைவன் திருநாமப் பெருமையைக் குறித்த உணர்வை நாமதேவரிடமிருந்தே ஏற்றூர். சீக்கியர்களின் புனித நூலான 'ஆதிகிரந்த்' தொகுப்பில் நாமதேவரின் படைப்புகள் 'சாது மொழியில்' இடம் பெற்றுள்ளது ஓர் சிறப்பாகும். இவ்வாறு நாமதேவரின் படைப்புக்களம் மராட்டிய எல்லையைக் கடந்து விரிந்ததாக இருந்தது. வட நாட்டிலும் பக்தி இயக்கத்தைப் பரப்பிய நாமதேவர், தமது நீண்ட வாழ்நாளை விட்டலன்பால் தமக்கிருந்த பக்தியை வெளிப் படுத்திய வண்ணம் கழித்த அபூர்வ பக்திக் கவிஞர்.

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயா தேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்தவர் மூவர் விளக்கு கின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து இந்த விளக்கத்தை எழுதுகிறூர் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். —நாகார்ஜுன மலைச் சிற்பம் (கி.பி. இரண்டாம் நூற்றூண்டு).

பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி.

அட்டை அமைப்பு: சத்தியஜித் ரே

உருவ ஓவியம் : வி. என். ஓ. கே.

ரூபாய் 4·00